
# ராஜீவ் காந்தியின்

## கடைசி மணித் துளிகள்...



தா. பாண்டியன்

# ராஜீவ் காந்தியின் கடைசி மணித்துளிகள்...

தா. பாண்டியன்

மின்னூலாக்கம் : செல்லா

குமரன் பதிப்பகம்

குமரன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை
(பாலாஜி கல்யாண மண்டபம் அருகில்)
தி.நகர். சென்னை - 600 017.
☎ 24353742, 24312559

மின்னூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | ராஜீவ் காந்தியின் கடைசி மணித்துளிகள் |
| ஆசிரியர் | தா. பாண்டியன் |
| உரிமை | ஆசிரியருக்கு |
| மொழி | தமிழ் |
| நூல் வகை | வாழ்க்கை வரலாறு |
| முதற் பதிப்பு | டிசம்பர் 2005 |
| இரண்டாம் பதிப்பு | நவம்பர் 2008 |
| பக்கங்கள் | 112 |
| அச்செழுத்து | 11 புள்ளிகள் |
| தாள் | 18.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | கார்டு போர்டு |
| முகப்பு வடிவம் | ஓவியர் நாதன் |

**விலை ரூ. 50-00**

| | |
|---|---|
| கணினி அச்சு | விக்னேஷ்வர் கிராபிக்ஸ்<br>சென்னை - 600 005<br>செல் : 9940214836 |
| அச்சிட்டோர் | ஸ்ரீ செல்வ விநாயகா ஆப்செட்,<br>சென்னை - 600 014 |

# அணிந்துரை

'**ரா**ஜீவ் காந்தியின் கடைசி மணித்துளிகள்' என்னும் இந்நூல் என்னைக் கவர்ந்ததற்கு முதற் காரணம் யாதெனில், நேருக்கு நேர் கண்ணால் கண்ட ஒருவர் சாட்சியாக நின்று, தமது வாக்குமூலத்தை வரலாற்றுப் பின்னணியுடன் ஓர் ஆவண நூலாக உருவாக்கி யுள்ளார் என்பதனாலாகும்.

'கண் கண்ட சாட்சி'யாக மட்டுமல்லாமல் பயங்கரப் படுகொலைக் களத்தில் மரண வேதனைக்குரிய காயங்களை உள்ளும் புறமுமாகப் பெற்று, 'பிணமோ' எனக் கண்டவர் தீர்மானிக்க வீழ்ந்த ஒருவர், 'உயிர் தப்பிய பேரதிசயத்தை' வரலாற்றில் பதிவு செய்தவராகவும் இந்நூலாசிரியர் விளங்குகின்றார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ''ஊன் கலந்து, உணர்வு கலந்து, உயிர் கலந்து'' எழுதப் பெற்றுள்ளது இந்நூல்.

விடுதலைப்புலிகள் பற்றிய நூலாசிரியர் விமர்சனத்தை இரு கோணங்களில் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைப் போராட்டம் பல்வேறு போராளிக் குழுக்களால் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் விடுதலைப் புலிகள் எவ்வாறு தங்கள் தலைமையை முன்னெடுத்து நிறுவினார்கள் என்பது ஓர் அலசல்.

சிங்கள அரசின் பேரின வாதமும், அதையொட்டிய சிங்கள இராணுவத்தின் தமிழீழ மக்கள் போராட்டத்திற்கு எதிரான அழிப்பு யுத்தம், பாலியல் வன்முறை, பொருளாதார அழிப்பு, கலாச்சார அழிப்பு, தமிழ் இன ஒழிப்புப் படுகொலை முதலானவற்றை எதிர்த்த வரலாற்றுப் போக்கில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாடு மிக்க தலைமைப் பொறுப்பைப் பெற்றுவிட்டனர்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இந்திய மண்ணில் எவ்வாறு நிகழ்ந்தன என்பதும் இந்நூலில் விமர்சிக்கப் பெற்றுள்ளது.

சிங்கள அரசும், விடுதலைப்புலிகள் அமைப்பும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடைபெற்று வரும் சமரச சமாதானப் பேச்சுச் சூழலில் மேற்கொள்ள வேண்டிய அணுகு முறையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

சர்வதேசப் பத்திரிகையாளர்களுடனான பகிரங்க சந்திப்பில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனிடம், ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக கேட்கப் பெற்ற கேள்விக்கு, அந்தக் கொலை ''என்றோ நடந்த ஒரு துன்பியல் நிகழ்ச்சி'' என்றவாறு பதில் தரப்பட்டது, ஓர் அவசரக் கோலப் பதிலாகும். 'அந்த நிகழ்ச்சி வருந்ததத்தக்கது எனும் தங்களது மனமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் பதிலளிக்கப்பட வேண்டிய வாய்ப்பை பிரபாகரன் நழுவ விட்டுவிட்டார்' எனும் விமர்சனத்தைப் புறந்தள்ளவியலாது.

''அந்த நிகழ்ச்சி''யை மையப்படுத்தி தோழர் தா. பாண்டியன் இந்நூலை எழுதியுள்ளார். கருத்தோட்டங்கள் பல இருந்தாலும், சில இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

ராஜீவ் காந்தி கொலையில் ''ஒரு வல்லரசின் கொலைக் கரம் சம்பந்தப்பட்டிருந்தது. அதைச் செய்து முடிக்க ஓர் உளவுப் படையை ஏவி விட்டது. அது கூலிக்காக கொன்று தீர்த்து விட்டது. இந்த உண்மைகளைக் கண்டு நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் திறனுள்ள அரசு என்று அமையுமோ அன்றுதான் நாட்டின் சுதந்திரத் திற்கும் தலைவர்களின் உயிருக்கும் பாதுகாப்புக் கிடைக்கும். அதுவரை பலிகள் தொடரவே செய்யும்'' என்று கூறப்பெற்றுள்ள கருத்தும் குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் காந்தியின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பிடும் பொழுது, ''அவர் ஒரு நல்ல தேசபக்தராகவும் மனிதாபிமானியாக முழுவளர்ச்சியையும் நோக்கி வளர்ந்து கொண்டிருந்தார்'' என்று விளக்குமிடத்தில் பல சான்றுகளைக் காட்டியுள்ளார், நூலாசிரியர். அதே சமயத்தில் அவர் அனுபவக் குறைவினாலும், சுற்றிச் சூழ்ந்த ஒரு சிலரின் தவறான யோசனைகளைக் கேட்டதாலும் ராஜீவ் வளர்ச்சியில் குறுக்கிட்ட தடைகளையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை நூலாசிரியர்.

குறிப்பாக, மண்டல் குழுவின் பரிந்துரைகளின் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் ராஜீவ் பேசியதை, ராஜீவின் நண்பர் என்ற முறையில், நாடாளுமன்ற உறுப்பினர் எனும் பொறுப்பில், தோழர் தா. பாண்டியன் இடித்துரைத்ததை அன்று ராஜீவ் ஏற்றுக் கொண்டதை இலக்கியக் காட்சியாக பின்வருமாறு வருணித்துள்ளது, நூலிற்கு இலக்கிய மணம் சேர்க்கின்றது.

''நான் பேசியதைக் கேட்ட ராஜீவ் காந்தி மிகவும் அதிர்ச்சி யடைந்தவராக தவறு நடந்து விட்டதே' என முணுமுணுத்தார். என்னைப் பொறுத்த மட்டில் கண்ணகி சிலம்புடன் வாதாடி, முடிந்த பின் வாதங்களின் நியாயங்களைக் கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் கலங்கி, கதறி எழுந்த அதே தோற்றத்துடன் குற்ற ஒப்புதலுடன், ராஜீவ் காந்தி இருப்பதாக எனக்குத் தோன்றியது. இது கற்பனையான வர்ணனை அல்ல. நான் நேரில் கண்ட காட்சி.''

ராஜீவ் காந்தி கொலை புலன் விசாரணையில் அன்றைய பிரதமர் நரசிம்மராவ் வெளிப்படுத்திய ஆர்வமின்மை, தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்த அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதியின் நடைமுறைகள், ஜெயின் கமிஷன் முன் தி.மு.க.வை நிரபராதிக் கட்சி என்று வாதாடிய ப. சிதம்பரத்தின் முரண்பாடு முதலான அரசியல் வரலாற்றுப் பின்னணியையும் நூலாசிரியர் அம்பலப்படுத் தியுள்ளார்.

உயிர் தப்பிப் பிழைத்த படுபயங்கர சோக வரலாற்றை விரிவாகப் பதிவு செய்துள்ளார் தோழர் தா. பாண்டியன். விடுதலைப்புலிகள் மீதான தமது கடுஞ்சீற்றத்தை பாதிக்கப்பட்டவர் என்ற மனோநிலையிலும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாற்றாய்விற்கு பயன்தரத்தக்க செய்திகளையும், முரண்பாடு களையும் தன்னுணர்ச்சிகளையும் பதிவு செய்துள்ளார், நூலாசிரியர்.

**- பெ.சு. மணி**

# முன்னுரை

ராஜீவ் காந்தி அவர்களுடன் நெருங்கிப் பழகிய கால அளவு மிகக் குறுகியது. 1989 முதல் 1991 மே 21-ம் நாள் வரையில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய காலத்தில், அதே அணியில் நானும் சேர்ந்து பணியாற்றிய காலம் அது.

அவர் பிரதமராக இருந்த போது பலத்த, சங்கடமான விமர்சனங்களுக்கு ஆளானவர். பல விமர்சனங்களுக்கு அவரது நண்பர்களே காரணமாக இருந்தனர். பிரதமராக இருந்த போது, அதிகார இலாகா என்ற இரும்புத் திரை,அவரை இந்திய நாட்டைப் பார்த்துப் புரிந்து கொள்ள விடாமல் தடுத்து இருந்ததும் தெரிந்தது.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அவர் கண்ட இந்தியச் சூழலும், இந்தியாவின் உண்மையான குடிமக்கள் நிலையும் அவரை அதிர்ச்சியடைய வைத்தன. அவர் சிந்திக்கவும், விவாதிக்கவும், வளரவும் தொடங்கிய காலம் அது. ஒரு நல்ல தேச பக்தராக, மனிதாபிமானியாக முழு வளர்ச்சியை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில்தான் மனித வெடிகுண்டுகளுக்கு அவர் பலியாக்கப்பட்டார். அதை என்றோ நடந்த ஒரு துன்பியல் நிகழ்ச்சியாக மறக்கும்படி, மரத்துப் போன மனம் படைத்தவர் சொல்லலாம். அது நன்றி கொன்ற செயல். எனவே,

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு''**

என்று வள்ளுவர் எழுந்து நின்று முழங்குவது கேட்கிறது.

அந்தக் கோரப் படுகொலையின் போது பக்கத்தில், களத்தில் நின்றவன், ரத்தம் சிந்தியவன், காயம்பட்டவன், உயிர் தப்பியவன் என்ற முறையில் எழுத வேண்டும் என்பதை எழுதியுள்ளேன்.

வரலாற்றுக் குறிப்புகள் தமிழ் மக்களுக்குத் தெரிவிக் கப்பட வேண்டும் என்பதற்காக, இச்சிறு நூலை அவர்களுக்கு வழங்குகிறேன்.

இந்த நூலுக்கு அரியதொரு அணிந்துரை வழங்கி யிருக்கும் புகழ்மிகு ஆய்வாளர் **பெ.சு. மணி** அவர் களுக்கும், இந்த நூலை மிகச் சிறப்பாக வெளியிட்டிருக்கும் குமரன் பதிப்பக உரிமையாளர் திரு. **எஸ். வைரவன்** அவர்களுக்கும், வாசகப் பெருமக்களுக்கும் எனது நன்றி.

அன்புடன்
***தா. பாண்டியன்***

# பொருளடக்கம்


★ இரத்த சாட்சி .................... 9

★ ராஜீவ் காந்தியைப் பற்றி .................... 13

★ கம்யூனிஸ்டுகளைப் பற்றி .................... 34

★ இந்திய தரிசனம் .................... 41

★ விமர்சனம் கண்டு முகம் சுளிக்காதவர் .................... 44

★ ஈராக் மீது தாக்குதல் .................... 48

★ சந்திரசேகர் மந்திரி சபை .................... 53

★ ரணகளத்தை நோக்கி .................... 60

★ மே 21-ம் தேதி .................... 63

★ மருத்துவ மனையில் .................... 84

★ மே 23 .................... 87

★ சில நிமிடங்கள் கழித்து... .................... 89

★ 1991 முதல் .................... 97

★ தோழமைக் கட்சிகளின் கூட்டம் .................... 100

★ சிறப்பு நீதி மன்றத்தில் .................... 106

★ எதிர்பார்க்கிறது நாடு .................... 111



# இரத்த சாட்சி

**பி**றந்த நாளைப் பலர் மறக்காமல் கொண்டாடி வருகிறார்கள். நான் என் பிறந்த நாளை, நான் கடந்து விட்ட 69 ஆண்டுகளில், ஒரே ஒரு முறைதான் கொண்டாட நேரிட்டது. பிறந்த நாளையே நினைக்காதிருந்த எனக்கு அதை 1992இல் கொண்டாட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் என் மனைவி, குழந்தைகளிடமிருந்து வந்தது.

1992 மே, 18. நான் அறுபதாவது வயதைத் தொடங்கிய நாள். ஆனால் அதற்காகக் கொண்டாடவில்லை.

1991 மே, 21-ம் நாளன்று, சென்னையை அடுத்துள்ள திருப் பெரும்புதூரில், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்காக வந்த ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார். அன்று,அந்த இடத்தில் அவர் அருகில் இருந்தவன் நான். மூன்றடி தூரத்திற்குள் நின்று இருந்த நானும், குண்டுகள் பட்டுக் காயமடைந்தேன். வெடித்த வேகத்தில் தூக்கி எறியப்பட்டேன். இறந்து போனதாகவே அறிவிக்கப்பட்டேன். சில பத்திரிகைகளில் இறந்தோர் பட்டியலில் என் பெயரும் இருந்தது. அன்று இரவு முழுவதும் என் குடும்பத்தார்க்கும் நான் கொல்லப்பட்ட ஒருவன்தான். ஏனெனில், அதுதான் அவர்களுக்குத் தரப்பட்ட செய்தி.

இருந்தும் உயிர்தப்பி வாழ்கிறேன்... எப்படித் தப்பினேன்? என்பதை இன்றும் என்னால் தெளிவாகக் கூற முடியவில்லை. ஏனெனில், எனக்கு வலது புறம் இருந்தவரும் கொல்லப்பட்டார்... இடதுபுறம் நின்றவரும் வீழ்ந்தார்.

எனக்குப் பின்னிருந்த ஏழெட்டுப் பேர் ரத்த வெள்ளத்தில், துண்டிக்கப்பட்டுக் கிடந்ததையும் கண்டேன். என்னைச் சுற்றிலும் குண்டு விபத்துக்குப் பலியாகி மடிந்தவர்கள் பதினெட்டுப் பேர், ராஜீவ் காந்தியுடன் பத்தொன்பது பேர், ஒரு நொடியில், ஒரே இடத்தில் களப்பலியாயினர்.

இவர்கள் மத்தியில் நின்ற நான், அதுவும் ராஜீவ் காந்தியின் அருகில் நின்று மொழி பெயர்த்துக் கொண்டிருந்த நான் குண்டின் குறிக்கு எப்படித் தப்பினேன்?... இன்றும் புரியாத புதிராகவே இருக்கிறது. ஆனால், பதிந்த குண்டுகள், இரும்புத் துகள்கள், ஆணிகள் என் உடம்பில் இன்றும் இருந்து அந்த நாளை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன.

வலது கை விரல்கள் சிகிச்சைக்குப் பிறகும் சரியாக வில்லை. அதனால், உணவருந்தும் போதும், எழுதும் போதும் தலைவாரும் போதும், வலது கையைப் பார்க்குந்தோறும், அந்தச் சோக நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன. எனவே, அதை நான் மறுபிறவி எடுத்த நாளாக என் குடும்பத்தினர் கருதியதில் வியப்பில்லை.

எனவேதான், 1992 மே 18-ம் நாள் மட்டும் 60-வது பிறந்த நாளை யாருக்கும் தெரிவிக்காமல் எங்கள் ஊரிலுள்ள தோட்டத்தில் இருக்கப் போனோம். தோழர். கூத்தகுடி சண்முகமும், சிவகங்கை, மதுரைத் தோழர்கள் சிலர் மட்டும் எப்படியோ இடம் தெரிந்து வந்து வாழ்த்தி விட்டுப் போனார்கள். பிறந்த நாள் மே 18- மறுபிறவி கொண்ட நாள் மே 21- இப்போது மே 21-தான் நினைவில் நிற்கிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஏதாவதொரு நாள் மறக்க முடியாத நாளாக ஆகிவிடுவது உண்டு. எதிர்பாராத வெற்றியையும் மகிழ்ச்சியையும் தந்த நாளாக அமைந்தால், அது சில நாட்களுக்குள் மறைந்து விடுகிறது. ஒரு பெரும் பேரிழப்பைச் சந்திக்க நேரிட்டால் மரணத்தின் விளிம்பிற்குச் சென்று விட்டுத் தப்பித்தால், அந்தச் சம்பவம் நேரிட்ட நாளையும், நிகழ்ச்சியையும் மறக்க முடிவதில்லை.

என் வாழ்நாளில் சிறிதும், பெரிதுமான சில விபத்துக்களைச் சந்தித்து வியக்கத்தக்க முறையில் தப்பியிருந்தாலும், அந்த நாட்களும், நிகழ்ச்சிகளும் நினைவில் நிலைத்து நிற்கவில்லை.

ஆனால் 1991 மே 21-ம் நாளன்று திருப்பெரும்புதூரில் நடந்த கோர சம்பவம், என்றென்றும் என்னால் மறக்க முடியாது கனன்று கொண்டே இருக்கும் ஒரு நினைவு நாளாக ஆகிவிட்டது.



குழநதைப பருவம முதல பாரதமா ஆனவரை

நான் அரசியல்வாதியாக இருக்கிற காரணத்தால், மரணத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டோம் என்ற மகிழ்ச்சியை விட, அந்த விபத்தினால், என் உடல் நலம் கெட்டதையும், உடல் உறுப்புகள் கெட்டதையும், சிகிச்சை சிகிச்சை என ஓராண்டுக்கு மேல் பொழுதைக் கழித்ததையும் விட, அந்த விபத்தில் இழந்த மனித உயிர்களில், இந்த நாட்டுமக்களும், நானும் மிகவும் மதித்த, போற்றிய, நேசித்த ஓர் உலகப் புகழ் பெற்ற தலைவன், அநியாயமாக, காரணம் ஏதுமின்றி, இளம் வயதில் கொல்லப்பட்ட சம்பவம் - அதனால், அரசியலில் ஏற்பட்ட பின்விளைவுகள் யோசித்துப் பார்க்கும் போது திருபெரும்புதூரில் கொல்லப்பட்ட ராஜீவ்காந்தி என்ற மனிதர் மட்டுமல்லர். அவரது கொலை மூலம் இந்நாட்டின் அரசியலில் ஆணி வேருக்கு ஒரு வெட்டு விழுந்து விட்டதை உணர்ந்தேன்.

ராஜீவை இழந்த துயர் தாங்காது அவரது மனைவியும், குழந்தைகளும் சில நாட்கள் தேம்பி அழுது விட்டுப் பின்னர் மனம் தேறி இருக்கக் கூடும்.

ஆனால், அவரை இழந்த அவரது கட்சி, வெள்ளத்தில் அடிபட்டு இழுபட்டுச் செல்லும் படகாகத் தத்தளிக்க நேரிட்டதும், நாடு ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் அவரை நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விடுவதும் தெரிகிறது.

கொல்லப்பட்ட பிறகும், வெறி அடங்காது, வெறுப்பைக் கைவிடாது இன்னும் அவதூறுப் பணியில் ஈடுபட்டிருப்போர் இருப்பதும் தெரிகிறது.

ராஜீவ் காந்தியைச் சந்தித்தது, பழகியது, விவாதித்தது என்று வளர்ந்து ரண களத்தை நோக்கி இருவரும் நடந்த அவரது கடைசிப் பயணம் வரை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நடந்தவாறு எழுத விரும்புகிறேன்... நீங்களும் தெரிந்து கொள்ள விரும்பினால் படியுங்கள்.

ராஜீவ் காந்தியின் ரத்தமும், என் ரத்தமும் ஒரே இடத்தில் தமிழ் மண்ணில் சிந்தப்பட்டுக் கலக்கும் என நான் எதிர்பார்க்கவில்லையே! இப்பொழுது அந்த இடமும், அந்த நாளும் எனக்கு, மறுபிறவி தந்த இடமாகவும், வரலாற்றுச் சின்னமாகவும் தெரிகிறது.



# ராஜீவ் காந்தியைப் பற்றி...

**மோ**திலால் நேரு, புகழ் மிக்க வழக்கறிஞராக இருந்து, ஏராளமான செல்வத்தைத் திரட்டினார். 'ஆனந்த பவனம்' எனும் நாடே வியந்து பேசிய மாளிகையை அலகாபாத்தில் கட்டினார். பின்னர் அந்த மாளிகையை காங்கிரஸ் கட்சிக்கு, நாட்டிற்கு நன்கொடையாக வழங்கி விட்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளுடன் சேர்ந்து பணியாற்றினார். மக்கள் போற்றும் தலைவராக விளங்கினார் என்பதைப் படித்து இருக்கிறோம்.

பண்டித மோதிலாலின் துணைவியார் சொரூப ராணியும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றது,இந்தியப் பெண்களையே வீட்டை விட்டு வீதிக்கும், போராட்டக் களத்திற்கும் கிளப்பி விட்டதையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

பண்டித நேரு, இவர்களின் ஒரே செல்வ மகனாகப் பிறந்து, செல்வ வளத்துடன் கல்வியும் கற்று, மேல் நாட்டுக் கல்வித் தகுதி பெற்றுத் திரும்பியவுடன், பதவியை நாடாமல், பணத்தைத் தேடாமல், தேசத்தின் சுதந்திர இயக்கத்தில் பங்கேற்று, பல வழங்குகளில் தண்டிக்கப்பட்டு, பல்லாண்டு சிறை வாசத்தை அனுபவித்ததையும், காந்தியடிகளின் நம்பிக்கைக்குரிய அரசியல் வாரிசாகத் திகழ்ந்தார் என்பதையும், இந்தியாவின் முதல் பிரதமராக ஆகி நெருக்கடியான கட்டத்தில் நாட்டை வழி நடத்தி, வளர்ச்சிப் பாதையில் நடை போடத் திட்டமிட்டார் என்பதையும், அவர் இந்திய நாட்டின் பிரதமராக இருந்ததோடு, உலகம்

அறிந்து போற்றிய தலைவராகத் திகழ்ந்து மறைந்தார் என்பதையும், அவர் சாதாரண அரசியல்வாதியாக மட்டுமல்லாது உயர் சிந்தனை உடையவராக, எழுத்தாளராக, கட்சிச் சுவர்களைத் தாண்டி எல்லாக் கட்சியினராலும் மதிக்கப்பட்ட தலைவராகத் திகழ்ந்தார் என்பதையும் படித்தும், கேட்டும் தெரிந்திருக்கிறோம்.

மோதிலால் நேரு,அவரது மனைவி சொரூப ராணி, பண்டித நேரு அவரது மனைவி கமலா நேரு என எல்லோரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றது அந்தக் குடும்பத்தை இந்திய மக்கள் நேசிக்கக் காரணமாக அமைந்தது.

இவர்களது வழியில், வாரிசாக இந்திரா காந்தியாரும் அரசியலில் பங்கேற்று, காங்கிரஸ் கட்சித் தலைவராக, இந்திய நாட்டின் பிரதமராக இருந்து, இறுதியில் வகுப்புவாத பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப் பட்டதால், இந்திய மக்களால் தாய் - எங்கள் அன்னை எனப் போற்றப்படும் பேற்றினைப் பெற்றார்.

நன்றி கெட்டவர்களால் இந்திரா காந்தியார் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டதால் அவர் அரசியல் வட்டங்களையும் தாண்டி நிற்கும் தேசியத் தலைவராகப் போற்றப்படுகிறார்...

இவர்களது வம்சத்தவராக, வழி வழி வந்தவராக ராஜீவ் காந்தி இருந்த போதிலும், தொடக்கத்தில் பெரும் வித்தியாசம் இருந்தது.

ராஜீவ் காந்தி, இந்திரா காந்தியாருக்கும், பெரோஸ் காந்திக்கும் பிறந்த முதல் மகன் என்றாலும் மாணவப் பருவத்தில் ராஜீவ் காந்திக்கு அரசியலில் ஈடுபாடு இருக்க வில்லை என்றே அவருடன் பழகிய நண்பர்கள் கூறுகின்றனர். சூதும், சூழ்ச்சியும், போராட்டமும் நிறைந்த அரசியலை அவர் விரும்பாதது மட்டுமல்ல, வெறுத்தார் என்றும் கூறுகின்றனர். படித்து முடித்துவிட்டு, அமைதியான குடும்ப வாழ்க்கை நடத்தவே விரும்பினாராம்.

இவருக்கு அடுத்துப் பிறந்த சஞ்சய் காந்தி, முற்றிலும் மாறுபட்ட குணமுடையவராக இருந்தார் இளமைப் பருவத்திலேயே அவர் சர்ச்சைக்குரிய, விவாதத்திற்குரிய மனிதர் ஆகிவிட்டார்.

சஞ்சய் காந்தி இளைஞர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில்,அந்த அமைப்பை சுறுசுறுப்புடன் இயக்கினார். ஆனால் எல்லை கடந்து எல்லாவற்றிலும் தலையிட்டார். பிரதமரின் மகன் என்பதால்

கிடைக்கும் அந்தஸ்தும் அதிகாரமும், அவர் செய்த பல காரியங்களுக்குத் துணையாயின.

நாட்டையும், கட்சியையும், இந்திரா காந்தியார் குடும்பச் சொத்து ஆக்க முயல்கிறார். வாரிசை உருவாக்குகிறார், புதிய அதிகார மையங்கள் தோன்றிவிட்டன... எனப் பலவகைக் குற்றச்சாட்டுகள் இந்திரா காந்தியாருக்கு எதிராக எழ இவர் காரணமாக ஆனார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளும் மூத்த தலைவர்களிடையே கசப்பு வளர்ந்தது. இந்திரா காந்தியாருக்கு எதிரான இயக்கம் பரவவும், வடிவமெடுக்கவும் தொடங்கி விட்டது.

மரங்களை நட்டு வளர்த்தல், வரதட்சிணை ஒழிப்பு, குடும்பக் கட்டுப்பாடு போன்ற நல்ல திட்டங்களைத்தான் இளைஞர் காங்கிரசின் திட்டங்களாக அறிவித்து சஞ்சய் காந்தி பிரச்சாரம் செய்தார். ஆனால் இவற்றை இளைஞர் காங்கிரசின் மூலம் செய்வதோடு நின்றிருந்தால் பிரச்சினை எழுந்திராது. அரசாங்க இலாக்காக்களை இவற்றை நிறை வேற்றும் பணியில் முடுக்கிவிட்டார்.

அதில் நகர்ப்புறங்களில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்திருந்த இடங்களை அப்புறப்படுத்தியது, குடும்பக் கட்டுப்பாட்டிற்காக, மக்களை கட்டாயப்படுத்தி, வலுக்கட்டாயமாக அறுவைச் சிகிச்சை செய்தது போன்ற சம்பவங்கள் காங்கிரசிற்கு எதிரான எதிர்ப்புத் தீயை விசிறி விட்டன.

வங்க தேசத்தை பதின் மூன்றே நாள் படையெடுப்பில் விடுவித்து, அந்நாட்டை அந்நாட்டு மக்களிடமே ஒப்படைத்து விட்டுத் திரும்பியதாலும், இந்திய - சோவியத் பாதுகாப்பு உடன்பாடு ஒப்பந்தத்தைப் போட்டதாலும், வங்கிகளை அரசுடைமையாக்கி, பின்னர் மன்னர் மானியத்தை ஒழித்ததாலும், காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த பழம்பெரும் தலைவர்களின் எதிர்ப்பை முறியடித்து வெற்றி கொண்ட பெருமை ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டு,தனிநபர் ஆதிக்கம், குடும்ப ஆட்சி, கட்டாய அறுவைச் சிகிச்சை, குடிசைகள் இடிப்பு, விலைவாசி ஏற்றம், லஞ்ச ஊழல் என்ற புதிய புகார்கள் நாட்டில் பெரும் பூதமாகக் கிளம்பின.

முழுப்புரட்சி தேவை என முழக்கமிட்டார் ஜெயப்பிரகாஷ் நாராயணன். பல கட்சியினரும் அவருடன் திரண்டனர். எதிர்ப்பு கூர்மை அடைந்தது.

அலகாபாத் உயர்நீதிமன்றம் இந்திரா காந்தியாரின் தேர்தல் செல்லாது என்று அறிவித்தது. ஒன்றன் பின் ஒன்றாக எழுந்த பல சம்பவங்கள், நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்குக் கொண்டு போய் விட்டன.

நெருக்கடிக் காலத்தின் போதும் சஞ்சய் காந்தி விவாதத்திற்குரிய வராகவே இருந்தார் நெருக்கடிகாலப் பிரகடனம் நீக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது.

அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையை இழந்தது. பிரதமராக இருந்த இந்திரா காந்தியாரும் தோற்கடிக்கப்பட்டார். தேர்தலில் தோல்வி கண்ட முதல் பிரதமரும் இந்திரா காந்தியார்தான். சஞ்சய் காந்தியும் தோற்கடிக்கப்பட்டார்.

மொரார்ஜி தேசாய் தலைமையில் மந்திரி சபை அமைந்தது. இரண்டரை ஆண்டுக் காலத்தில் மொரார்ஜி பின்னர் சரண்சிங் ஆட்சி கவிழ்ந்து மீண்டும் தேர்தல் நடந்தது.

அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி மீண்டும் பெரும்பான்மை பெற்றது. இந்திரா காந்தியாரும் வெற்றி பெற்றார். சஞ்சய் காந்தியும் வெற்றி பெற்றார்.

அதன் பின் விபத்தில் சஞ்சய் காந்தி இறந்தார்... இதுவரை நடந்த சச்சரவு, சர்ச்சைக்குரிய அரசியல் எதிலும் பங்கெடுக்காது விலகி இருந்த ராஜீவ் காந்தி, இந்திரா காந்தியாரால் அரசியலில் ஈடுபடுத்தப்பட்டார். விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்று ஏர் இந்தியாவில் - விமான ஓட்டியாக பணியில் சேர்ந்தவர்.

படிக்கும் காலத்திலேயே சோனியாவைச் சந்தித்து காதலித்து பிறகு அம்மாவின் ஒப்புதலுடன் எளிய முறையில் திருமணம் செய்து கொண்டார். குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் எதிலும் ஈடுபாடு காட்டாமல் வாழ்ந்து வந்த ராஜீவ் காந்திக்கு, சஞ்சய் காந்தி மறைவுக்குப் பின் தாய்க்குத் துணையாக அரசியலில் ஈடுபட அழைப்பு வந்தது.

ராஜீவ் காந்தி அரசியலில் பிரவேசித்த நேரத்தையும், முறையையும் பார்க்கிற போது பெரும் ஆசையுடன் திட்டமிட்டு அரசியலில் நுழைந்தார் என்று கூறுவதற்கில்லை. சூழ்நிலையின் உந்துதலால்தான் அரசியலில் பங்கேற்றிருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பேற்று அரசியல் அனுபவம் இல்லாத இளைஞராக இருந்ததால், அரசியலில் மேற்கொண்டு பயிற்சி பெற்று ஒவ்வொரு மாநிலத்திலும் வேரூன்றியிருந்த

பல காங்கிரஸ் தலைவர்களுடன் பழகவும், சமாளிக்கவும் அவர்களது நம்பிக்கையைப் பெறவும் அனுபவமின்மை பெரிதாக விமர்சிக்கப்பட்டது.

ராஜீவ் காந்திக்கு இன்னொரு பெரும் சவால் எதிரில் நின்றது.

இந்தியாவின் முதல் பிரதமராக வந்த பண்டித ஜவஹர்லால் நேரு, மோதிலாலின் திருமகன் என அரசியலில் நுழைந்தவர்தான். ஆனால், சுதந்திரப் போராட்டத்தில் பல்லாண்டுகளாகப் பங்கெடுத்ததால், சிறைகளில் சகாக்களுடன் பல்லாண்டுகளைக் கழித்ததால், எல்லாவற்றுக்கும் மேலாக காந்தியடிகளின் நம்பிக்கைக்குரிய வாரிசாகக் கருதப்பட்டதால், ஜனநாயக ரீதியில், முடிசூடா மன்னராக வருணிக்கப்பட்டார்.

அமைந்த முதல் மத்திய மந்திரி சபையும், தேச சுதந்திரப் போராட் டத்தில் பங்கு பெற்று மக்களின் நன்மதிப்பைப் பெற்ற பலர் மந்திரிகளாக இருந்தது பெருங்கவசமாயிற்று. அதற்கும் மேலாக அவருக்கு ஒரு தனித்தன்மையும் இருந்தது. காந்திக்கு அடுத்தாற் போல, இந்திய மக்களை ஈர்த்த தலைவராகத் திகழ்ந்தார். எனவே, பல உலைக்களங்களில் உருக்கி, வார்த்து, வடிக்கப்பட்ட ஒருவராக அவர் வளர்ந்திருந்தார். எனவே, இவர் பதித்த தடம் நாட்டிலும், உலக அரங்கிலும், வரலாற்றுத் திருப்பங்களாக ஏற்கப்பட்டு விட்டன.

இதன் விளைவாக, இவருக்குப் பின் வருகிற பிரதமர்களை, இவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பது மக்களுக்கு வழக்கமாகி விட்டது.

இவரையடுத்துப் பிரதமராக வந்த லால்பகதூர் சாஸ்திரி, எளிமை, நேர்மை, நிர்வாகத் திறமை என்ற பட்டயங்களுடன் பதவியேற்றவர். பாகிஸ்தானுடன் நடந்த போரில் வெற்றி கண்ட பின் அதை சமாதானமாக முடித்து வைக்கப் பேசப்போன இடத்தில் டாஷ்கண்டில் மாரடைப்பால் காலமானது மரியாதையுடன் அனுதாபத்தையும் சேர்த்தது. எனவே, இவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் வழக்கமாகி விட்டது.

இவரைத் தொடர்ந்து பிரதமர் ஆனவர் இந்திரா காந்தியார். இவர் சிண்டிகேட்டைத் தோற்கடித்தது; நடுநிலைத் தலைவர்கள் மாநாட்டை டில்லியில் நடத்தியது; பங்களாதேசத்தை விடுவித்தது; எண்ணெய்க் கிணறு தோண்டிட முயன்று வெற்றி கண்டது; மன்னர் மானியத்தை ஒழித்து, வங்கிகளை அரசுடைமை ஆக்கியது போன்ற நடவடிக்கைகளால் இந்திரா காந்தியாரை இரும்புப் பெண்மணி என ஏடுகள் வருணித்தன.

இவருக்கடுத்துப் பிரதமரான மொரார்ஜி தேசாய், மூத்த சுதந்திரப் போராட்ட வீரர் சந்ததியைச் சேர்ந்தவர் லஞ்சம், ஊழலுக்கு அப்பாற்பட்டவர். நிர்வாகத் திறமை மிக்கவர். பொதுவாழ்வில் காந்திய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பவர் எனப் பெயர் பெற்று இருந்தார். இவரது ஆட்சி இரண்டரை ஆண்டுக்காலமே நீடித்தது என்றாலும், இவரும் பாராட்டைப் பெற்ற பிரதமராகவே திகழ்ந்தவர் என்பதை மறுப்பதற்கில்லை. இவர் முழு முதல் முதலாளித்துவக் கொள்கையின் பிரதிநிதி ஆவார்.

இதைத் தொடர்ந்து ஆறுமாத காலம்தான் சரண்சிங் பிரதமராக இருந்தார். அடுத்து நடந்த தேர்தலில் இந்திரா காந்தியார் வென்று மீண்டும் பிரதமர் ஆனார். இந்த நேரத்தில்தான் பங்களா தேசத்திலிருந்து ஏறத்தாழ ஒரு கோடிப் பேர் இந்தியாவிற்கு அகதிகளாக ஓடி வந்தனர். இதே காலத்தில் பல்லாயிரம் தமிழர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக ஓடி வந்தனர்.

நாடெங்கும் அகதிகள் முகாமாகத் தெரிந்தது. அவர்களைப் பராமரிப்பது என்பதே ஒரு பெரும் பொறுப்பாயிற்று. இதை இந்திய அரசு சமாளித்ததை உலகம் பாராட்டியது. வந்தவர்கள் அகதிகளாக இங்கேயே தங்கிவிட விரும்பவில்லை. தாயகம் திரும்பத் துடித்தனர். பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்ற முஜிபுர் ரகுமான் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்திய ராணுவத் தளபதி மனேக்சா தலைமையில் இந்தியப்படை வங்காள தேசத்திற்குள் நுழைந்தது. இதை அமெரிக்கா கண்டித்ததோடு, தனது ஏழாவது கப்பற்படை பாகிஸ்தானுக்கு உதவிட வரும் என்ற முறையில் அறிவித்தது.

சோவியத் யூனியன், இந்தியாவும் பாகிஸ்தானும் பேசிப் பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்றும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் கூறியது. இதில், பிற நாடுகள் தலையிடக் கூடாது எனக் கூறியதோடு, இந்திய சோவியத் உடன்பாட்டின்படி, சோவியத் படைகள் இந்தியாவுக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தது.

ஆனால், இந்தியப்படை பதின்மூன்றே நாட்களில் டாக்காவைப் பிடித்து விட்டது. ஏறத்தாழ ஒரு லட்சம் பாகிஸ்தானியப் படைகள் சரணடைந்தன. இதைத் தொடர்ந்து ஜுல்பிகர் அலி பூட்டோவுக்கும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும், சிம்லாவில் பேச்சு வார்த்தை நடந்து உடன்படிக்கை கையெழுத்தானது.

பங்களா தேசம், ஒரு தனி சதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. முஜிபுர் ரகுமான் பிரதமர் ஆனார் ஒரு லட்சம் பாகிஸ்தானிய வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். உலகம் பாராட்டியது.

இன்றைய பிரதமர் வாஜ்பேய், அன்றைக்கு இந்திரா காந்தியை, நம்மிடையே நடமாடும் துர்காதேவி என வருணித்தார். இதற்குப் பல மாதங்கட்குப் பின்னர்தான் நெருக்கடி நிலை பிரகடனமாயிற்று.... அதற்குச் சில ஆண்டுகட்குப் பிறகு, பஞ்சாபில் வெடித்துக் கிளம்பிய காலிஸ்தானிய பயங்கரவாதம், பல ஆயிரம் பேர் உயிரைப் பலி கொண்டது. பஞ்சாபே ரணகளமாகியது.

அதுபோது, பொற்கோயிலுக்குள் பதுங்கி இருந்த பயங்கரவாதி களைப் பிடிக்க, ஒடுக்க ராணுவம் நடவடிக்கை எடுத்தது. இதற்குப் பழி வாங்கும் முறையில்தான் இந்திரா காந்தியின் மெய்க்காப்பாளராக இருந்த காவலர்கள்,அரசு பாதுகாப்புக்காக தந்திருந்த துப்பாக்கிகளைப் பயன்படுத்தி இந்திரா காந்தியை சுட்டுக் கொன்றனர்.

இதற்குப் பிறகு நடந்த தேர்தலில்தான் ராஜீவ் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி மாபெரும் வெற்றியைப் பெற்றது. நேரு, இந்திரா காந்தி காலத்தில் பெற்றதை விட அதிக இடங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது.

ஆனால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தியார், மொரார்ஜி ஆகியோருடன் ராஜீவின் ஆட்சியை ஒப்பிட்டுப் பார்த்து, மதிப்பீடு செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது. இந்த முதல் சவாலைச் சந்திக்க ராஜீவ் காந்திக்கு அனுபவமும் வயதும் போதவில்லை.

ராஜீவ் காந்தி பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர், விஞ்ஞான வளர்ச்சிக்கு முதன்மை இடம் கொடுத்துப் பிரச்சாரம் செய்தார். நவீன யுகத்துக்குள் நவீன இந்தியா நுழைய வேண்டும் என்ற தனது ஆவலையும் வெளியிட்டார்.

இந்தியா விஞ்ஞானத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. விண்வெளியில் கலம் அனுப்புவது; வட துருவப் பணிகளில் ஆராய்ச்சியை மேற்கொண்டது. அணுவைப் பிளந்து குண்டு வெடித்தது. அணுமின் நிலையங்களை அமைத்தது; ஆழ்கடல் ஆய்வில் உலகில் மிக முக்கிய இடம் வகிப்பது என்பன இந்தியாவின் சாதனைகள்.

மறுபுறம், இந்திய மக்களிடையே வறுமை அதிகரித்துக் கொண்டே இருப்பது; வேலையின்மைக் கொடுமை வளர்ந்து கொண்டே வருவது; சமூகக் கொடுமைகள் பரவி விரிவடைந்து வருவது; பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடுங் குற்றங்கள் பெருகி வருவது; பொது வாழ்வில் லஞ்சமும் ஊழலும் பல்கிப் பெருகி விட்டதால், அரசியல் வாதிகள் மக்களின் நம்பிக்கையை இழந்து நிற்கிற சூழல் ஆகியவை காரணமாக மேலே கூறிய வெற்றிகள் பளிச்செனக் கண்ணில் படுவது இல்லை. நெஞ்சை உருக்கும் தேனினும் இனிய கானத்தைப் பொழிந்தாலும், பசித்தவன் காதில் அது படியாதல்லவா?

இந்தச் சவாலையும் ராஜீவ் காந்தி சமாளிக்க வேண்டி இருந்தது. எனவே, பிரதமர் ஆனவுடன், துரித விஞ்ஞான வளர்ச்சி எனப் பேசத் தொடங்கினார். ஆனால், அது வளர்ந்து பலன்தர ஆண்டுகள் பல பிடிக்கும். எனவே, அவரது பேச்சு, வெறும் பேச்சாகவே மக்களுக்குத் தோன்றியதில் வியப்பே இல்லை.

அவர் பிரதமராக இருந்த போது எடுத்த ஒன்றிரண்டு நடவடிக்கைகள், நம் நாட்டிற்கு பயனைத் தந்தது என்றே கூறலாம். அதில் மிக முக்கியமானது அவரது சீனப் பயணம். பல்லாண்டுகளாக இந்தியாவும் சீனாவும் பகை நாடுகளாகவே இயங்கி வந்தன. 1962இல் இந்திய சீன எல்லைத் தகராறு நடந்த நாள் தொட்டு, நிலைத்து, நீடித்து, வளர்ந்த பகையாக இருந்தது.

ஆசியாவின் இருபெரும் நாடுகள் இந்தியாவும் சீனாவும். இரு நாடுகளுமே இருநூறு கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்ட நாடுகள். இருநாடுகளுமே சில ஆயிரம் ஆண்டுகளாக பண்படுத்தப்பட்ட நாகரிகத்தை அடைந்த நாடுகள். இந்த இரு நாடுகளிடையே நட்புறவும், ஒத்துழைப்பும் தேவை என உணர்ந்து, அதை மீண்டும் புதுப்பிக்க முயன்றார் ராஜீவ் காந்தி.

அவர் போன போது டென்சியாபிங் இருந்தார். வயது முதிர்ந்த நிலையிலிருந்த டென்சியாபிங் 'நேரு' என்று கூறி நிறுத்திக் கொண்டாராம். நேரு இறந்து போன செய்தியே அவருக்கு நினைவுக்கு வர சில நிமிடங்கள் ஆனதாம்.

பின்னர் அதே போல இந்திரா காந்தியாரைப் பற்றியும் கூறி விட்டு நிறுத்தி விட்டாராம்.

பிறகு பக்கத்தில் வரச்சொல்லி ராஜீவின் கையைப் பிடித்துக் கொண்டாராம். ஒரு தாத்தா பேரனைத் தட்டிக் கொடுப்பது மாதிரி

பாராட்டினாராம். சீனத் தலைவர்களை நட்பு முறையில் சந்தித்துப் பேசி முறிந்து கிடந்த உறவின் விரிசலை நெருக்கிக் கொண்டு வந்து நிறுத்துவதில், மீண்டும் உறவைப் புதுப்பிப்பதில் ராஜீவ் காந்தி வெற்றி பெற்றார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதே போன்று சோவியத் நாட்டின் தலைவராக இருந்த கோர்ப்பசேவும் ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்டு கூட்டாக வெளியிட்ட டில்லிப் பிரகடனம் இன்றும் அர்த்தமுள்ளதாகவும், உலகுக்கும் நாட்டிற்கும் வழிகாட்டும் திசைகாட்டிகளாக நிற்பதையும் உணர முடியும்.

இதே போல பெனாசீர் பூட்டோவுடன் நேராகச் சந்தித்துப் பேசி, இந்திய -பாகிஸ்தான் நல்லுறவை வளர்க்க எடுத்த முயற்சியும் அவரது நற்பணிகளுள் ஒன்றாகக் கூறலாம். ஆனால் அதில் போதிய முன்னேற்றம் காண முடியவில்லை.

அவரது சீரிய முயற்சி, நடவடிக்கையாக அவர் கொண்டு வந்த பஞ்சாயத்துச் சட்டத்தைக் குறிப்பிட வேண்டும்.

- பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம்.
- பஞ்சாயத்துக்களுக்கு நேரடி நிதி உதவி.
- பஞ்சாயத்துக்களே வளர்ச்சித் திட்டங்களை வகுத்துக் கொள்வது.
- பஞ்சாயத்துக்களில் தாழ்த்தப்பட்டோர் பெண்களுக்கென குறிப்பிட்ட விழுக்காட்டை ஒதுக்குவது.

ஆகியவை முக்கிய அம்சங்களாகும். பல முக்கிய வழக்குகளையும் அந்தந்த பஞ்சாயத்துக்களே விசாரித்துத் தீர்ப்புக் கூற வகை செய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்தப் பிரிவு நீக்கப்பட்டு விட்டது. அவரது ஆட்சிக் காலத்தில் அது அமலுக்கு வரவில்லை. பின்னர் வந்த நரசிம்மராவ் ஆட்சியின் போதுதான் அது அமலுக்கு வந்தது.

இதனால் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூற முடியாது. பல மாநில அரசுகள், பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாக நிதி ஒதுக்குவதிலும், அதிகாரம் வழங்குவதிலும், தயக்கம் காட்டியதோடு நில்லாது, தங்களது அதிரடி உத்தரவுகளின்மூலம் பஞ்சாயத்துக்களின் அடிப்படை நோக்ககங்களைத் தகர்த்து விட்டன.

இந்த வகையிலும் ராஜீவ் காந்தியின் கனவும் ஆசையும் ஊமை வாசித்த கதை போல ஆகிவிட்டது.

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது எடுத்த நடவடிக்கைகளிலே, மிகப்பெரும் அரசியல் விவாதத்திற்கு காரணமாக இருந்தது, இலங்கைத் தமிழர் பிரச்சினைதான். அவர் மிக அதிகமான நேரத்தைச் செலவிட்டதும் அதற்காகத்தான். அதிக அக்கறை செலுத்தியதும் அதற்காகத்தான். மிக அதிகமான பணத்தைச் செலவிட்டதும் அதற்காககத்தான். சில அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்ததும் அதற்காகத்தான். அண்டை நாட்டோடு பேசி ஒப்பந்தம் செய்து விட்டுத் திரும்பும் போது, அரசு மரியாதை செலுத்த நின்ற ராணுவ வீரன் ராஜீவைக் கொல்ல முயன்றதும் அதற்காகத்தான்.

நல்ல எண்ணத்தோடு, நல்ல காரியங்களைச் செய்ய, அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், செலவிட்ட நேரம் ராணுவ விமானத்தின் மூலம் உணவுப் பொட்டலம் போட்டது, பின்னர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற இந்திய அமைதி காப்புப் படையை அனுப்பியது,அதற்காகக் கோடி கோடியாகப் பணம் செலவிட்டது, பெரும் தொகையை எம்.ஜி.ஆர் அள்ளிக் கொடுக்க அனுமதி கேட்ட போது அனுமதி வழங்கியது, இந்திய அரசு பல்லாண்டுகளாக இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கங்களுக்காக செய்த பட்டியலிட முடியாத அருங்காரியங்கள் அனைத்தும் மறக்கப்பட்டு மாற்றுக்கதை படமாக, நாடகமாக, ஒலிப்பதிவு நாடாவாக சில அரசியல் கட்சிகளின் தமிழின உணர்வுப் பிரச்சாரமாக மாறி வளர்ந்தது.

அதனால் ராஜீவ் காந்தி தமிழர்களின் விரோதி என்று வருணிக்கப்படக் கூடிய நிலைக்குக் கொண்டு போய் விட்டது.

அதுதான், அந்தப் பாம்புக்குத்தான் தமிழகத்தில் ஆட்சியிலிருந்த திமுக பாலூற்றி வளர்த்தது. எம்.ஜி.ஆரின் தவறான மதிப்பீட்டால் பல கோடிகளை அள்ளிக் கொடுக்க நேரிட்டது.

இவை வளர்ந்து, வளர்ந்து விசுவரூபமெடுத்துதான் 1991 மே மாதம் இருபத்திதோராம் நாளன்று, திருப்பெரும்புதூரில் மனித வெடிகுண்டு வடிவத்தில் வந்து, உண்டி கொடுத்து, உறையுள் கொடுத்து, உயிரூட்டும் பொருள் கொடுத்து, பயிற்சி தந்து, தனக்கு வந்த பழியையும் ஏற்று, எந்த எதிர்பார்ப்புமின்றிச் செய்த உதவிக்கு பிரதி நன்றியாகத்தான் படுகொலைப் பரிசு வழங்கப்பட்டது.

இது நீண்டகால விவாதத்திற்கும் ஆய்வுக்கும் உரியது.

இந்திய இலங்கை ஒப்பந்த வரிகளைத் தாண்டி, அது காட்டிய வழியில் அல்லாமல், புதிய பாதை, புதிய சாதனை ஏதாவது வருகிறதா? எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

நமக்காகப் பாடுபட்ட ஒருயிரை நாமே கொன்று விட்டோம்... போலத் தோன்றுகிறது. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது பல நடவடிக்கைகளை எடுத்து இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் இந்திய இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும், இறுதியாக அவர் தமிழ் மண்ணில் கொல்லப்பட்டு அவரது ரத்தம் தமிழ் மண்ணில் கலந்து விட்டதும்தான் நினைவில் மேலோங்கி நிற்கிறது.

ராஜீவ் காந்தி, 1984 முதல் 1989 முடிய இந்தியாவின் பிரதமராக இருந்தார். அந்த ஆண்டுகளில் தலைவர் எம்.கல்யணசுந்தரம் (1984-87) இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தார். நான் தேசியக் குழு உறுப்பினராக இருந்தேன். தேசிய அளவிலான இந்தக் குழுக் கூட்டங்களில், ராஜீவ் காந்தியை விமர்சித்தே பேசப்பட்டது. போபர்ஸ் குற்றச்சாட்டு வந்த போதும் பெரிதாக விமர்சிக்கப்பட்டது.

இதே காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவிய மூலவர்களில் ஒருவரான முதுபெரும் தலைவர் தோழர் எஸ்.ஏ. டாங்கே, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். அவரோடு சேர்ந்து, பலர், பல மாநிலங்களில் கட்சியை விட்டு வெளியேறிவிட்டனர். தோழர் டாங்கேயின் மகள் ரோசா தோஷ்பாண்டே (AICP) அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தொடங்கினார்.

இதற்குப் பிறகு, சில ஆண்டுகள் கழித்து, தோழர் எம்.கல்யாணசுந்தரம், தா.பாண்டியன், கே.டி.ராஜு, வி.மதனகோபால், ஆர். கருப்பையா, பூங்காவனம், க. மாணிக்கம், வி.ராஜமோகன், அய்யாதுரை, பி.ஆர். சந்திரன், பி.டி.நாராயணன், செங்கம் ராமசாமி, சேலம் குப்புசாமி, ஸ்டாலின் குணசேகரன், மணிவேல் ஆகியோருடன் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மாநிலக்குழு உறுப்பினர்களும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதற்கான காரணம், அதைப் பற்றிய கருத்து எதுவும், இந்நூலுக்குத் தேவையற்றது என்பதாலும் முடிந்து போன கதை என்பதாலும் எழுத விரும்பவில்லை.

தோழர் எம். கல்யாணசுந்தரமும் நானும், தோழர் டாங்கேயைச் சந்திக்க மும்பைக்குப் போனோம். தோழர் மோகித் சென் டெல்லி யிலிருந்து மும்பை வந்து சேர்ந்தார். தோழர் டாங்கே எங்களுடன் நீண்ட நேரம் உரையாடினார். அவர் சொன்னதைத் திருப்பி எழுதினால் அது

இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாகவும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ஏ.ஐ.டி.யு.சி.யின் வரலாற்றுச் சுருக்கமாகவும் இருக்கும். அதை ஒலி நாடாவில் பதிவு செய்திருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும். நீண்ட நேரம் பேசிவிட்டு இறுதியில் ''மேலும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி வேண்டாம்'' என்று முடித்தார்.

''1925 முதல் எல்லோரும் சேர்ந்து பாடுபட்டும், நம் கட்சி நாம் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பெறவில்லை. இதிலே பிளவு வேறு பாதித்துள்ளது. மேலும் பிரிவு நல்லதல்ல. எல்லோரையும் ஒன்று திரட்ட வழியிருக்கிறதா எனப் பாருங்கள்'' என்றவர், சற்று யோசித்து விட்டு, ''அது உபதேசத்தால் வேண்டுகோளால் வராது. சுற்றுச் சூழலின் நிர்பந்தத்தால் வந்தால்தான் உண்டு. எதிரிகள்தான் நம்மை ஒன்று சேர்க்கக் கூடும். அதுவரை கம்யூனிஸ்டுகளாக இயங்க, ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள். எனக்கு வயது ஆகிவிட்டது. உடல் நலம் கெட்டு விட்டது. எனவே, நான் வாழ்த்துவதோடு சரி'' எனக் கூறி அனுப்பினார்.

போராட்டங்களில் பன்னிரண்டரை ஆண்டு சிறைவாசம் கண்ட அந்தப் போராளி, ''நீங்கள் இருக்கிற இடங்களில் உழைக்கிற மக்களுக்காக உறுதியுடன் போராடிக் கொண்டே இருங்கள்'' என்ற புத்திமதியுடன்தான் வழியனுப்பினார்.

தமிழ் நாட்டிற்குத் திரும்பியவுடன் இந்தியன் கம்யூனிஸ்டுக் கட்சி **(ICP)** என்ற கட்சி அமைப்பை திருச்சியில் கூடி உருவாக்கினோம். அப்பொழுது தமிழ் நாட்டின் முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்தார். இந்தியப் பிரதமராக ராஜீவ் காந்தி இருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம், பிரதமரும் தமிழக முதல்வரும் கலந்து பேசி உருவாக்கியதுதான்.

தனி ஈழம் என்பது நீங்கலாக, இதர உரிமைகள் பெரும்பாலும், முதல் தடவையாக தமிழர்கட்கு வழங்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கான ஒரு மாநில அரசு அமைக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது. தமிழும், சிங்களமும் சம உரிமை பெற்றிருந்தன.

இவற்றை அமல்படுத்த இந்திய அமைதி காப்புப் படையின் உதவி தேவை என இலங்கை அரசு, கடைசியாக நிர்ப்பந்தித்த விதிதான், வேறு பல விளைவுகளுக்குக் காரணமாகிவிட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்தும் எல்.டி.டி.ஈ.யின் வன்முறை நடவடிக்கைகளைக் கண்டித்தும் தமிழ் நாட்டில் ஒரு பெரும் இயக்கத்தை முடுக்கி விட்டார் கல்யாணசுந்தரம்.

‘கலைஞர் கருணாநிதிக்குப் பகிரங்கக் கடிதம்’ என்ற ஒரு சிறு பிரசுரத்தை நான் எழுதி வெளியிட்டேன்.

அந்தப் பிரச்சார இயக்கம் தமிழ்நாடு பூராவிலும் பரவியது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி., எழுத்தாளரும், சிந்தனையாளருமான ஜெயகாந்தன், ‘துக்ளக்’ ஆசிரியர் சோ ஆகியோருடன் நானும், இயக்கத் தோழர்கள் அனைவரும் உற்சாகமாக பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டோம்.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு தோழர் பத்மனாபா தலைமையில் இயங்கி வந்தது. தோழர் வரதராஜ பெருமாள் தலைமையில் ஈழத்தில் மாநில அரசு அமைந்தது. ஆனால், எல்.டி.டி.ஈ.யினர் வன்முறை வளர்ந்து கொண்டே இருந்தது.

தோழர் முகுந்தன் தலைமையில் இயங்கி வந்த பிளாட் இயக்கமும் எங்களுடன் நட்புறவாக இருந்தது.

இலங்கையை விழுங்கவே, தமிழர்களுக்கு உதவுகிற வேடத்தில் இந்திய ஏகாதிபத்தியம் தனது ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்த வலை விரிப்பதால், இலங்கையின் அரசாண்மைக்காக எல்.டி.டி.ஈ. போரிடும் என்ற பிரகடனத்தை வெளியிட்டது. எல்.டி.டி.ஈ.யின் இந்தப் பிரகடனம் போர்ப் பிரகடனமாயிற்று.

இதைத் தொடர்ந்து இலங்கை அரசில் ஆளுங்கட்சியாக இருந்த ஜெயவர்த்தனாவின் கட்சி, எல்.டி.டி.ஈ.யுடன் தொடர்பு கொண்டது. இலங்கை அரசின் ராணுவத் தளவாட உதவியுடன் எல்.டி.டி.ஈ. இந்திய அமைதிகாப்புப் படையைத் தாக்கத் தொடங்கியது.

இனவெறியை எதிர்த்தும், ஜனநாயக உரிமைகளைத் தமிழர்கட்கும் வழங்க வேண்டும் என்ற முற்போக்கான நடுநிலைக் கொள்கையைப் பிரச்சாரம் செய்து வந்த குமாரதுங்கா (இன்றைய குடியரசுத் தலைவர் சந்திரிகாவின் கணவர்) சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக்காகப் போராடி வந்த ஸ்ரீசபா ரத்தினமும் மிகக் கோரமான முறையில் கொல்லப்பட்டார்.

முதல்வராக ஆன வரதராஜ பெருமாளைக் கொன்றிடவும் பல தடவை முயற்சிகள் நடந்தன. இதன் தொடர்ச்சிதான் தோழர் பத்ம நாபாவையும்,அவருடன் இருந்த பதின்மூன்று பேரையும், சென்னை கோடம்பாக்கத்தில் கொன்று தீர்த்துவிட்டு எல்.டி.டி.ஈ. கொலையாளிகள் தப்பி ஓடி விட்டனர்.

அப்பொழுது தமிழகத்தின் முதல்வராக இருந்தவர் கலைஞர் கருணாநிதி ஆவார். நிர்வாகத் திறமைக்குப் பெயர் போன இவரால் கண்முன் நடந்த படுகொலையைச் செய்தோரைப் பிடிக்கவும் முடிபவில்லை. கொலை நடைபெறவிடாமல் தடுக்கவும் முடியவில்லை.

இதன் விளைவுதான் 1991 மே 21-ம் நாளன்று திருபெரும்புதூரில் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டால் கொலை செய்யப்பட காரனமாயிற்று.

1987இல் தோழர் கல்யாணசுந்தரம் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். நாங்கள் ‘இந்தியன் கம்யூனிஸ்டுக் கட்சி’யைத் தோற்றுவித்தோம். பின்னர், அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும், ஐ.சி.பி.யும் சேர்ந்து சேலத்தில் நடந்த மாநாட்டில் ‘இந்திய ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி’யை அமைத்தோம். தோழர் மோகித் சென்னைச் செயலாளராகவும் தோழர் எஸ்.ஏ. டாங்கேயைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தோம்.

தோழர் கல்யாணசுந்தரம் கடினமான உழைப்பு காரணமாக டில்லியில் துறைமுகத் தொழிலாளர்களுக்காக வாதாடப் போயிருந்த இடத்தில் 1988-ல் காலமாகி விட்டார். எனவே, அவர் சேலம் மாநாட்டின் போது எங்களுடன் இருக்கும் வாய்ப்பை இழந்தோம்.

இதன் பிறகு 1989 இறுதியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போதுதான், ராஜீவ் காந்தியுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து நான் (தா. பாண்டியன்) தேர்ந்தெடுக்கப்பட்டேன். அன்று முதல் 1991 மே 21 வரை, கடைசி நிமிடம் வரை, சேர்ந்து விவாதித்த உரையாடிய விவரங்கள்தாள இங்கு தரப்படுகின்றன.

1988-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்குடன் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது. அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின் அ.இ.அ.தி.மு.க. இரண்டாக பிளவு பட்டிருந்தது. அ.இ.அ.தி.மு.க.வில் ஒரு பிரிவின் தலைவராக ஜெயலலிதாவும் இன்னொரு பிரிவிற்கு ஜானகி ராமச்சந்திரனும் தலைமை தாங்கினர். காங்கிரஸ் கட்சியும் ஜெயலலிதாவும் நடத்திய தேர்தல் உறவு உடன்பாடு வெற்றி பெறவில்லை.

எனவேதான் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது. இந்திய ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஜெயலலிதாவுடன் நல்லுறவு

இருந்தது. ஆனால் தேர்தல் சமயத்தில் பாரதிய ஜனதாவையும் ஒரு தேசியக் கட்சியாக வர்ணித்து தேர்தலுக்குப் பின் அக்கட்சியுடன் கூட்டுச் சேர நேரிட்டாலும் பரீசிலிக்கலாம் எனும் பொருள்பட ஜெயலலிதா ஓர் அறிக்கை வெளியிட்டு இருந்தார். அதை இந்திய ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை.

எனவே காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொண்டோம். இக்கூட்டணி ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளில் மட்டுந்தான் வெற்றியைப் பெற்றது. மற்ற இடங்களில் தோல்வியைத் தழுவியது. ஜெயலலிதாவும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. பலமுனைப் போட்டி நடைபெற்றதால் 1989-ல் நடந்த தேர்தலில் தி.மு.க. அறுதிப் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி கருணாநிதி மூன்றாவது தடவையாக முதலமைச்சராக ஆனார்.

தமிழ் நாட்டில் 1989 சட்டசபைத் தேர்தலின் போதுதான் ராஜீவ் பலமுறை தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தார். கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் செய்தார். பிரதமராக இருந்து கொண்டு ஒரு மாநிலத் தேர்தலில் மிக அதிகமாக கவனம் செலுத்தி இரவு பகலாக ராஜீவ் காந்தி பிரச்சாரம் செய்தது பலரின் விமர்சனத்திற்குள்ளாயிற்று. அவர் இடைவிடாது முயன்றும் அவரது கட்சி சட்ட மன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது. அவரது மதிப்பை வெகுவாக குறைத்து விட்டது என்றும் கூறலாம்.

1984 முதல் 89 வரை பிரதமராக இருந்த காலத்தின் போது ராஜீவ் காந்தியைச் சந்திக்கவோ அவருடன் பேசவோ எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது திருச்சியில் மேடைக்கருகில் அவருக்கு ஒரு செந்துண்டு அணிவித்தேன். நான்கு அடிகள் நடந்த பின்பு மீண்டும் திரும்பி வந்து ''தேர்தலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று என்னைக் கேட்டார். அவர் திடீரெனத் திரும்பி இக்கேள்வியைக் கேட்டது என்னைத் திகைக்க வைத்தது.

அதிகம் யோசிக்காமல் ''நாம் எதிர்பார்க்கிற தேர்தல் முடிவு வரா விட்டாலும் நாம் செய்ய வேண்டிய காரியத்தை செய்ய வேண்டியதுதான்'' என்றேன். அவர் பதிலுக்கு ''பிரகாசமாக இருப்பதாக மற்றவர்கள் கூறினார்கள்'' என்றார். ''சில நாட்களுக்குள் தெரிந்து விடும். நாம் நமது பயணத்தைத் தொடரலாம்'' என்று கூறி முடித்து விட்டேன். இதுதான் நான் அவருடன் நடத்திய முதல் உரையாடல்.

அதன்பின்னர் நாடாளுமன்றத்திற்கான தேர்தலுக்கு முன்பு அ.இ.அ.தி.மு.க.வும். காங்கிரஸ் கட்சியும், இந்திய ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியும், முஸ்லீம் லீக்கும் வேறு சில தோழமைக் கட்சிகளும் கூட்டணி சேர்ந்து நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தோம். அந்தத் தேர்தல் 1989 டிசம்பர் இறுதியில் நடந்தது. அப்போது கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் மற்றவர்கள் தமிழில் பேசுவதை அவருக்கு நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொல்லிக் கொண்டிருந்தேன். இது எனது இரண்டாவது சந்திப்பு.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 38 இடங்களில் காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க. கூட்டணி வெற்றியைப் பெற்றது. வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் நானும் வெற்றியைப் பெற்றேன். ஆனால் வட இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் சரிவு ஏற்பட்டது. குறிப்பாக 82 நாடாளுமன்றத் தொகுதிகளையுடைய உத்திரப்பிரதேசத்தில் ராஜீவ் காந்தி உட்பட ஆறே ஆறு காங்கிரஸ் கட்சியினர்தான் வெற்றியைப் பெற்றனர். 76 இடங்களில் தோல்வியைத் தழுவியது. வி.பி.சிங்கும் அவரது ஆதரவாளர்களும் வெற்றி பெற்றனர்.

ஆனால் பாரதிய ஜனதாவிற்கோ, வி.பி.சிங்கின் அணிக்கோ, காங்கிரஸ் கட்சியை விட அதிக இடங்கள் கிடைக்கவில்லை. காங்கிரஸ் கட்சி முதல் பெரும் கட்சியாக இருந்தும் பெரும்பான்மையை இழந்த கட்சியாக இருந்ததால் மக்களின் தீர்ப்பை மதித்து ஆட்சி அமைக்கும் உரிமையை கோரப் போவது இல்லை என ராஜீவ் காந்தி அறிவித்து விட்டார்.

தமிழ் நாட்டில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க.வையும் அக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் தோற்கடித்து மகத்தான வெற்றியைப் பெற்றிருந்தாலும் வெற்றி பெற்ற எங்களில் யாரும் மகிழ்ச்சியோடு இருக்க இயலவில்லை.

ஏனெனில் நாங்கள் இருந்த அணி பெரும்பான்மை இழந்து விட்டது. மேலும் வேறு எந்தவொரு கட்சியும் ஆட்சி அமைக்கக் கூடிய பலத்துடன் வரவில்லை. ஆகவே நாடாளுமன்றமே சில வாரங்கள்கூட இயங்குமா என்ற கேள்விக் குறியுடன்தான் முடிவு தெரிந்த மறுநாளே டெல்லியை நோக்கி விரைந்தோம்.

1989 டிசம்பர் கடைசி நாட்களில் டெல்லியில் குளிர் கடுமையாக இருந்தது. நாங்கள் விழித்த போது டெல்லி பனியில் மூழ்கிக் கிடந்தது. காலை ஏழரை மணிக்கு ராஜீவ் காந்தியைச் சந்திக்க அவரது வீட்டிற்குச் சென்றோம். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பல உறுப்பினர்களும் உடன் வந்திருந்தனர்.

ராஜீவ் காந்தியின் வீட்டிற்கு முன்னால் மிக நீண்ட வரிசையில் ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல் ராஜீவைச் சந்தித்து ஆறுதல் கூறும் நோக்கத்தோடு காத்து நின்றனர். எங்களை ஒரு தனி வழியில் பாதுகாவலர்கள் அழைத்துச் சென்றனர். ஒரு பிரதமரின் வீட்டில் எத்தனை கதவுகளை, எத்தனை சோதனைகளை, எத்தனை தடைகளைத் தாண்டிச் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டு மென்பதை முதன் முதலாகத் தெரிந்து கொண்டேன். எனக்குக் கொஞ்சம் எரிச்சலாகவும், சங்கடமாகவும் அவை தென்பட்டன.

ஆனால் அத்தனை காவலர்கள் ஏன் இருந்தனர் என்பதை இப்பொழுது என்னால் உணர முடிகிறது. அந்தக் காவலும் கண்காணிப்பும் இருந்தும் சில மணித்துளிகளுக்குள் சதித்திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு ஓர் உயிர் பறிக்கப்பட்டு இந்திய வரலாற்றையே கலக்கிவிட்ட ஒரு நிகழ்ச்சி- இந்தக் கண்காணிப்பு இருந்தும் கூட நடந்து விட்டது என்பதையும் இப்பொழுது என்னால் உணர முடிகிறது.

அன்றும் நெருக்கியடித்துக் கொண்டு அவரைக் காணப் பல பிரமுகர்களும் ஏராளமான மக்களும் காத்திருந்த காரணத்தால் அவருடன் அன்று உரையாடுவதற்குள்ள வாய்ப்பும் ஏற்படவில்லை. அவருக்கு நான் செந்துண்டை அணிவித்த பின், ''பெரும்பான்மையை இழந்ததால் ஆட்சி அமைக்க முயல மாட்டேன்'' என்று அறிவித்திருந்ததைப் பாராட்டிவிட்டு ''மக்கள் உங்களுக்கு கட்டாய ஓய்வு கொடுத்திருக்கிறார்கள். விரைவில் மீண்டும் பெரும் பொறுப்பைக் கொடுப்பார்கள். இந்தத் தேர்தல் முடிவும் ஒரு பாடம்தான்'' என்று கூறிவிட்டு நகர முயன்றேன். நான் கூறுகிற பொழுது, வாழப்பாடி ராமமூர்த்தியும், குமரி அனந்தனும் அருகில் இருந்தனர். மற்றும் பலர் சற்றே தள்ளி நின்றனர்.

ராஜீவ் காந்தி ஒரு கல்லூரி மாணவர் மாதிரி சிரித்துக் கொண்டு என் தோளைப் பிடித்து, ''வட சென்னையில் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டது உண்மைதானா?'' என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தார். ''இந்தத் தொகுதி

கம்ப்யூட்டர் கணக்குப்படியும் இவர்களது கருத்துப்படியும் கடடாயம் தோற்கும் என்பதாகத்தான் இருந்தது. அதனால்தான் இந்தத் தொகுதியை உங்களுக்கு ஒதுக்கவும் இவர்கள் சம்மதித்தார்கள்'' என்று கூறிவிட்டு அங்கிருந்த நண்பர்களைப் பார்த்து ஓர் அர்த்த புஷ்டியுடன் சிரித்தார். ''எப்படியோ எனக்கு மிக்க மகிழ்ச்சி. நாம் நிறையப் பேச சந்தர்ப்பம் இருக்கும்'' எனக் கூறிவிட்டு மற்றவர்களைச் சந்திக்கப் புறப்பட்டார்.

இதன் பின்னர் பாரதிய ஜனதாவின் ஆதரவையும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவையும் பெற்று வி.பி.சிங் மந்திரிசபை அமைத்தார். ராஜீவ் காந்தி எதிர்க்கட்சித் தலைவராக ஆனார். அன்று முதல் ஒன்பதாவது நாடாளுமன்றம் கலைக்கப்படுகிற வரையில் அடிக்கடி ராஜீவ் காந்தியைச் சந்திக்கவும் நீண்ட நேரம் விவாதிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்த பல தவறான கருத்துகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினேன்.

**15 மாத காலத்தில் அவருடன் பல விஷயங்களை விவாதித்ததாலும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வாய்ப்பு கிடைத்ததாலும் நாட்டை மிகவும் நேசித்த, இந்திய மக்களுக்காக மிகவும் கவலைப்பட்ட, அவர்களது நலனில் அக்கறை காட்டிய, அகங்காரப் பதவி மமதை இல்லாத, சிறிது பெரிது பாராமல் தோழமைக் கட்சிகளை மதித்து நடத்திய, மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்த ஒரு நல்ல அரசியல் தலைவராக ராஜீவ் காந்தியை நான் கண்டேன்.**

அவரை நான் சந்தித்த முதல் நாள் தொடங்கி அவரைப் பலி கொடுத்த திருப்பெரும்புதூர் கோரச் சம்பவம் வரை ராஜீவ் காந்தி என் மதிப்பீட்டில் வளர்ந்து கொண்டேயிருந்தார். அவரை நான் பிற தலைவர்களுடன் ஒப்பிட்டும் பார்த்தேன். மிகச் சிறப்பாக வளர்ந்து பழைய குறைகளை உதிர்த்து விட்டு முதிர்ந்த செழுமையான தலைவராக வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில்தான் கொடியவர்கள் கொன்று விட்டார்கள் என்பதை நினைக்கிற பொழுதுதான் கவலை அதிகரிக்கிறது.

1984-ல் பதவியேற்ற ராஜீவ் காந்தியல்லர் - 1991-ல் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தி. இந்த ஏழு ஆண்டுகளில் கடைசி 15 மாதங்களில் அவர் 70 ஆண்டு பக்குவத்தைப் பெற்றிருந்தார். அதை அவர் உலகிற்கு காட்டு வதற்கு முன், உலகம் அறிந்து கொள்வதற்கு முன், கரு உருப் பெறுவதற்கு முன்னாலேயே சதிகாரர்கள் கொன்று கெடுத்து விட்டனர்.

தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன், வி.பி.சிங் பிரதமராகவும், ராஜீவ் காந்தி எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த பொழுது நாடாளுமன்றத்தில் தோழமைக் கட்சிகளை அழைத்து அடிக்கடி விவாதிப்பதை ராஜீவ் வழக்கமாகக் கொண்டிருந்தார். அத்தகைய விவாதங்கள் பலமுறை நடந்ததுமுண்டு. அந்தக் கூட்டங்கள் அவரது வீட்டிலேயே நடைபெறும். காங்கிரஸ் கட்சி, காஷ்மீரில் உள்ள தேசிய மாநாடு, அ.இ.அ.தி.மு.க., முஸ்லீம் லீக், ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சி, கேரள காங்கிரஸ் ஆகியன இவற்றில் இடம் பெற்றிருந்தன.

தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பில் பிற்காலத்தில் தேவகௌடா மந்திரி சபையில் மந்திரியாக இருந்த பேராசிரியர் சோஸ் பங்கேற்பது வழக்கம். காஷ்மீரில் அப்பொழுது பயங்கரவாதிகளின் தாக்குதல் அதிகமாக இருந்து வந்தது. உள்துறை அமைச்சராக இருந்த முப்தி முகம்மது சயீது மகளையே கடத்திக் கொண்டு போய்விட்டார்கள். தேசிய மாநாட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினரையும் பணயக் கைதிகளாக ஒருமுறை பிடித்துக் கொண்டு போய்விட்டர்கள். 24 மணி நேரத்திற்குள் பதில் வரா விட்டால் அனைவரும் கொல்லப்படுவார்கள் என்ற எச்சரிக்கையும் வந்திருந்தது.

சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கண்கலங்கி ராஜீவ் காந்தியிடம் ஆலோசனை கேட்க வந்தார்கள். குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பாதுகாப்பிற்கு உதவி கோர வேண்டும் என்ற யோசனையும் கூறப்பட்டது. பேராசிரியர் சோஸ் உரையாடுகிற பொழுதும் சரி, நாடாளுமன்றத்தில் பேசுகிற பொழுதும் சரி, பேசத் தொடங்கி விட்டாரென்றால் அவரால் பேச்சை முடிக்க முடியாது.

மற்றவர் தலையிட்டாலும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பார். மிகுந்த கவலையோடு இருக்கின்ற நேரங்களிலும் எதையும் பொருட்படுத்தாமல் சோஸ் பேசிக் கொண்டே இருப்பது பலருக்கும் எரிச்சலையூட்டும்.

ஒருமுறை, ''இதிலிருந்து விடுதலையே கிடையாதா?'' என்று ராஜீவ் காந்தியின் காதுக்குள் ரகசியமாகச் சொன்னேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, ''இதையெல்லாம் பொறுமையுடன் கேட்டுப் பழகினால்தான் இந்திய அரசியலில் தாக்குப் பிடிக்க முடியும்'' என்றார். அவர் எரிச்சலைக் காட்டிக் கொள்ளவேயில்லை. அ.இ.அ.தி.மு.க. சார்பில் பங்கேற்ற சேடபட்டி முத்தையாவும், மேலவை உறுப்பினர் சாமிநாதனும் அங்கும் புரட்சித் தலைவியின் கருத்தைக் கேட்டுச் சொல்கிறோம் என்பார்கள்.


பின்னர் தேவகௌடா மந்திரி சபையில் மந்திரியாக இருந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர், இத்தகைய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தபோது ''இந்தக் கட்சிகளையெல்லாம் அழைத்துப் பேசி என்ன பயன்? தேசிய பிரச்சினைகளில் இவர்களால் என்ன கருத்துச் சொல்ல முடியும்? எதற்காக நேரத்தை இவர்களுடன் விவாதித்து வீணாக்குகிறீர்கள்?'' என்று கூச்சமில்லாமல், நாகரிகம் இல்லாமல் படபடவெனப் பேசிவிட்டார். எனக்கு உடனே பதில் கொடுக்கத் துடித்தது. ஆனால் சற்றே நிதானமாக ராஜீவ் காந்தி என்ன பதில் சொல்கிறார் என எதிர்பார்த்து அமைதியாக இருந்து விட்டேன்.

இந்தக் கூட்டத்தின் போது நரசிம்மராவ், சிவசங்கர், தினேஷ் சிங் ஆகியோரும் இருந்தனர். அவர்களும் சற்றே அதிர்ச்சியுடன் அந்த நாடாளுமன்ற உறுப்பினரைப் பார்த்தனர்.

ராஜீவ் காந்தி அவரைப் பார்த்து ''இத்தகைய ஆலோசனைக் கூட்டங்கள் மிக மிக அவசியம். தோழமையில் சிறிது பெரிது பார்க்கக் கூடாது. ஒரு செடி ஆரோக்கியமாக வளர அதன் சிறு வேரும் முக்கியம். சிறு கிளைகளும் முக்கியம். எதையும் அற்பமாக நினைக்கிற, நடத்துகிற பழக்கத்தை நாம் கைவிட வேண்டும்'' என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

சிலருக்கு கட்சிகளை நடத்துகிற சிரமம், மக்களை வழி நடத்துகிற அனுபவம், பலரையும் இணைத்துச் செல்லும் பக்குவம் இல்லாமல் பிறந்த வீட்டுப் பெருமை, கையிருப்புப் பண பலம் ஆகியனவற்றை வைத்து பதவிகளைப் பிடித்து பின்னர் அந்தப் பதவியை தக்க வைத்துக் கொள்ளும் கலையில் மட்டும் தேறி கொம்பு விட்டு கொம்பு தாவி எப்படியோ ஏறிக்கொண்டேயிருக்கிறார்கள்.

ஆனால் அவர்களையும் ராஜீவ் காந்தி ஒதுக்கித் தள்ளவில்லை. இந்த நிகழ்ச்சியும் ராஜீவ் காந்தியின் ஜனநாயகப் பண்பைக் காட்டுவதாக அமைந்திருந்ததால் அவர் மீது நான் கொண்டிருந்த மதிப்பு மேலும் அதிகமாயிற்று.



கோர்பச்சேவுடன் ராஜீவ் காந்தி



# கம்யூனிஸ்டுகளைப் பற்றி...

**ரா**ஜீவ் காந்தி உலக கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார். கோர்ப்பசேவுக்கு அடிக்கடி கடிதம் எழுதி வந்தார். ஒருமுறை மிகுந்த கவலையோடு ''சோவியத் யூனியனுக்கு சங்கடம் வரப்போகிறது. கோர்ப்பசேவின் பிடி தளர்ந்து வருகிறது. சோவியத் யூனியனுக்கு விபத்து நேரக் கூடாது என விரும்புகிறேன். சோவியத் யூனியனுக்கு பாதகம் ஏற்பட்டால் நம்மையும் பாதிக்கும். உலகையும் பாதிக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லையே?'' என்று கூறி கவலைப்பட்டார்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் இயக்கம் சம்பந்தப்பட்ட சில விஷயங்களை சில சமயங்களில் என்னுடன் ராஜீவ் விவாதித்திருக்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்டு) கட்சித் தலைவர் சுர்ஜித் சிங்கும் பேசியதைப் பார்த்திருக்கிறேன். அதே போல் இந்திரஜித் குப்தாவும் அவரைக் கண்டு பேசிவிட்டுப் போவதுண்டு. ஜோதிபாசுவையும் இந்திரஜித் குப்தாவையும் அங்கிள் (Uncle) என்றுதான் ராஜீவ் குறிப்பிடுவார். அவர்கள் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். 'கம்யூனிஸ்டு இயக்கமும், காங்கிரஸ் கட்சியும் ஒத்துப் போகாமல் இனி இந்தியாவில் வகுப்புவாத, பயங்கரவாத, பிரிவினைவாத சக்திகளை தடுப்பதும், நாட்டைத் திட்டமிட்ட வழியில் முன்னேற்றுவதும் சிரமமே' என உணர்ந்தும் வந்தார். அந்தக் கருத்தை வலியுறுத்தியும் வந்தார்.

ஆனால் கூட்டணி என்ற கருத்தை அவரது கட்சியிலிருந்த பல தலைவர்களும் ஒப்புக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சி தனித்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்று அன்றும் பலரும் வாதாடினார்கள். இன்றும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். தேசிய நலனில் அக்கறையுள்ள கட்சிகளின் ஒத்துழைப்பு ஏதாவது ஒரு வகையில் உருவாக்க வேண்டும் என்பதில் ராஜீவ் நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஒருமுறை கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய வளர்ச்சி தேக்கமடைந்தது பிளவுபட்டது பாரதிய ஜனதா ஆதரிக்கும் கூட்டணிக்கும் ஆதரவு தருவது ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி ''இவர்களது சொல்லையும் செயலையும் மதிப்பிடுவது கஷ்டமாக இருக்கிறதே'' என்று கூறினார்.

இன்னொரு முறை, ''1952 முதல் இதுவரை நடந்துள்ள எல்லாத் தேர்தல்களிலும் எல்லா கம்யூனிஸ்டுகளுமாகச் சேர்ந்து ஒருமுறை கூட ஆறு சதவீதத்திற்கு அதிகமாக வாக்குகளைப் பெற முடியவில்லையே, கூட்டணி வைத்தாலும் ஆறு விழுக்காட்டைத் தாண்டுவதில்லை. வைக்காவிட்டாலும் தாண்டக் காணோம். விரிவடையவுமில்லை, மற்ற கட்சிகளுக்கு நிறைய புத்திமதி சொல்லும் கம்யூனிஸ்ட் கட்சி, தான் ஏன் வளரவில்லை என்பதைப் பற்றி விவாதித்தது உண்டா?'' என்று கேட்டார். இதற்கு நான் விரிவாக பதில் சொல்ல முயன்று கொண்டிருந்த போது ஒரு பெரும் காங்கிரஸ் பட்டாளம் உள்ளே நுழைந்து விட்டது.

எனவே அன்று கூறமுடியாத பதிலை பின்னர் ஒரு முறை விளக்கினேன். ''தான் வளர முடியவில்லை என்றாலும் அதற்கு முடுக்கிவிடும் பிறரை வீழ்த்துகிற ஒரு சக்தி கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு இருக்கிறது'' என்பதைக் கூறி விட்டு பிரிந்து வந்தேன்.

இத்தகைய உரையாடல்களின் போது ஒருமுறை, ''வி.பி.சிங் மந்திரி சபை கவிழ்ந்துவிட்டால் ஜோதிபாசு தலைமையில் ஒரு கூட்டணி மந்திரி சபை அமைக்க கம்யூனிஸ்டுகள் ஒப்புக் கொள்வார்களா?'' என்று கேட்டார். இது விளையாட்டாகக் கேட்ட கேள்வியல்ல. அவர் அத்தகைய மாற்றத்திற்குத் தயாராக இருந்தார், முயன்றார் என்பது உறுதியாக வெளியாயிற்று.

1990 நவம்பர் மூன்றாம் தேதி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, மார்க்சிஸ்டுக் கட்சி தலைவர்களை அழைத்து ராஜீவ் காந்தி பேசினார். நவம்பர் மூன்றாம் தேதி மாலை ஐந்து மணியளவில் ராஜீவ் காந்தியின் வீட்டிற்கு என்னை வந்து விடுமாறு தொலைபேசியில் செயலாளர் சொன்னார். நானும் குறித்த நேரத்தில் போய்ச் சேர்ந்தேன்.

அப்போது ராஜீவ் சொன்னார். ''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் இந்திரஜித் குப்தா, பாரூக்கி ஆகியோருடன் பேசினேன். அதே போல் மார்க்சிஸ்டு கட்சித் தலைவர்கள் ஹர்கிஷன் சுர்ஜித், ஜோதிபாசு ஆகியோருடனும் பேசினேன். சிங் தலைமையில்லாத ஜோதிபாசு அல்லது இந்திரஜித் குப்தா தலைமையில் ஒரு கூட்டணி அமைத்தால் அதற்கு மந்திரி சபை அமைக்க வெளியில் இருந்து ஆதரவைத் தருவதாக யோசனை கூறினேன். குறைந்தபட்சத் திட்டம் வேண்டுமென்றாலும் நீங்களே எழுதுங்கள், நான் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கிறேன்'' என்றும் சொன்னதாகச் சொன்னார்...

1990 நவம்பர் மூன்றாம் தேதி மாலையில் நான் சந்தித்த பொழுது ராஜீவ் காந்தி மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார். கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களுடன் நடந்த பேச்சு வார்த்தை பற்றியும் உற்சாகமாகவே குறிப்பிட்டார். இந்த முயற்சி வெற்றி பெறும் போல இருக்கிறது என்று கனவு காணும் கல்லூரி மாணவன் மாதிரி சிரித்துக் கொண்டே சொன்னார். நான் பதில் கூறாமல் மௌனமாக இருந்தேன். அவர் என் பக்கம் திரும்பி ''இது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டார். நான் எழுந்து அவர் அருகில் சென்று,

''உங்களது இந்த முயற்சி வெற்றி பெற்றால் இந்த நாட்டிற்கு அதை விட வேறு நல்ல காரியம் இருக்க முடியாது. என்னைவிட மகிழ்ச்சி அடைகிற வேறு ஓர் இந்தியனும் இருக்க மாட்டான். ஆனால் இது நடக்குமா என்று சந்தேகப்படுகிறேன்'' என்றேன். ''ஏன் நடக்காது? என்ன தடை?'' என்று திருப்பிக் கேட்டார்.

நான் சிரித்துக் கொண்டே, ''இந்திய வரலாற்றின் ஒவ்வொரு முக்கிய திருப்பத்தின் போதும் விரிவாக விவாதித்து, சரியாகச் சிந்தித்து விட்டு, நேர் தவறான முடிவை எடுப்பதே கம்யூனிஸ்டுகளுடைய நெடுநாளைய வழக்கமாகி விட்டது, எனவே வரலாறு அவர்களை ஒரு தேசிய சக்திக்கு அருகில் கொண்டு வந்து, ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்து நீங்கள் நினைப்பதை, மக்கள் எதிர்பார்ப்பதை செய்து காட்டுங்கள் என்று சொன்னாலும், முடியாது என்ற மொட்டையான பதில்தான் வரும் பாருங்கள்'' என்றேன். நான் சொன்னதில் அவருக்கு உடன்பாடு இல்லை அல்லது தான் நினைத்தது நடக்க வேண்டும் என ஆசைப்பட்டார் என நினைக்கிறேன். எனவே பழையபடியும் விவாதத்தைத் தொடர்ந்தார்.

1. வகுப்புவாத பாரதிய ஜனதா கட்சியை ஆட்சிக்கு வர விடாமல் தடுப்பதுதான் முதல் குறிக்கோள் என்கிறார்கள்.

2. குறைந்தபட்சத் திட்டம் என்பார்கள். நாம் ஒன்றும் கம்யூனிஸ்டுகள் எழுதக் கூடிய திட்டத்தைக் கண்டு பயப்படுகிற நிலையில் இல்லை.

3. ''நாட்டின் பாதுகாப்பை பொறுத்த வரையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பார்கள். அதில் எனக்கு முழு உடன்பாடு, அடுத்து ஏழைகளுக்கு சாதகமான நடவடிக்கைகள் என்பார்கள். அதுவும் நல்லதுதான். முடிந்தளவு நன்மைகளைச் செய்யட்டும். நாமும் ஒத்துழைக்கலாம். இதற்கு மேல் பெரிதாக அவர்கள் ஒன்றையும் சொல்லிவிடப் போவதில்லை. பிறகு என்ன தடை?'' என்று மீண்டும் கேட்டார்.

அத்துடன் பேசிய தலைவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன், நேசமனப்பான்மையுடன் பேசியதாகவும், ஏறத்தாழ அவர்கள் நடந்து கொண்ட முறை அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது என்று கூறிவிட்டு ''தலைமைக் குழுவிடம் பேசிவிட்டு பதில் கூறுவதாக சொல்லிச் சென்றிருக்கிறார்கள்'' என்றும் குறிப்பிட்டார்.

''நடந்தால் நல்லது. ஆனால் நடக்கப் போவதில்லை'' என்று மட்டும் சொன்னேன். ஏன் என்று கேட்டதற்கு...

''கம்யூனிசம் சரியா? தவறா? என்ற விவகாரம் எழவில்லை. மனித குலத்தின் முழு விடுதலைக்கு கம்யூனிசமே இலக்கு என்பதுதான் என் நம்பிக்கை. ஆனால், நம் நாட்டில் தோழமைக் கட்சிகளை மதிப்பிட்டு அணி அமைப்பதில் இந்திய சமூகப் பிரச்சினைகள் குறித்து மேற்கொள்ளப்படும் அணுகுமுறை ஆகியவை பற்றித்தான் கருத்து வேறுபாடு. இது தொடக்கம் முதலே இருந்தது. மேலும் தொடரவே செய்யும். இதில் கட்சி மீது வெறுப்புக் கொள்ள இடம் இல்லை.''

மேலும் நான், ''அது நீண்ட கதை. உங்களுக்கு நேரம் இருக்காது. எனவே சுருக்கிச் சொல்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி என்னை சிறுமைப் படுத்தவில்லை. கொடுமைப்படுத்தவும் இல்லை. மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டேன். கௌரவமான பொறுப்புக்களையும் தந்தார்கள். பல்வகைப் பயிற்சியும் கிடைத்தது. கடைசியாக கட்சித் தலைமை ஓர் அவசரக் கோல முடிவை எடுத்து விட்டது என்பதைத் தவிர என் சொந்த

வகையில் குறைப்பட்டுக் கொள்ள ஏதுமில்லை. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்சியில் இருந்து பழகிய அனுபவம் பெற்றவன் என்ற முறையில் நீங்கள் சொல்கிற நல்ல யோசனை நிராகரிக்கப்பட்டு இருக்கிறதே என்பதை நினைத்து வேதனைப்படுகிறேன்'' என்று கூறினேன். ''அவர்களுடன் பல்லாண்டு இருந்ததால் அவர்களை நன்கறிவேன்'' எனக் கூறினேன்.

எங்களின் இந்த உரையாடல் முடியும் தருவாயில் சிவசங்கர் உள்ளே வந்தார் அவர் தள்ளிப் போய் வேறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து வந்த தினேஷ் சிங் நேராக ராஜீவ் காந்தியிடம் வந்தார் அவர் ராஜீவ் காந்தியிடம், ''உன்னுடைய அன்பிற்குரிய மாமாக்கள் இருவரையும் (ஜோதிபாசு, இந்திரஜித் குப்தா இருவரையும் அவ்வாறு அழைப்பதுதான் வழக்கம்) வழியில் சந்தித்தேன். பேசிக் கொண்டிருந்து விட்டு இப்பொழுதுதான் வருகிறேன்.

ஜோதிபாசு ரொம்பக் கோபமாகப் போகிறார் ''சிங்கை வீழ்த்த அவரைப் பகடைக் காயாக பயன்படுத்த முயல்கிறாயா? பதவி ஆசை யெனும் பெரிய வலையை வீசி பிடிக்கப் பார்க்கிறாயா? ஆனானப்பட்ட இந்திரா காந்தி விரித்த பெரிய வலையிலேயே விழாத நான் இந்தச் சிறுவன் விரித்த வலையில் விழுந்துவிட மாட்டேன்'' என்று கூறிவிட்டுப் போகிறார் என்றார் அதற்கு ராஜீவ் காந்தி மிகவும் சோர்வடைந்தவராக, ''என் நோக்கத்தையே சந்தேகிக்கிறார்களே'' என்று வருத்தப்பட்டார் (பின்னர் என் பெயரைச் சொல்லி, ''அவர்கள் ஏற்க மாட்டார்கள் என்று இப்பொழுது தான் சொல்லிக் கொண்டிருந்தார்'' என்று தினேஷ் சிங்கிடம் சொன்னார்).

அதற்கு தினேஷ் சிங், ''உங்கள் தாத்தா நேரு காலத்திலிருந்து நடக்காத காரியம் இது? இந்திரா காந்தியாருடன் இந்தியக் கம்யூனிஸ்டுகள் சில ஆண்டுகள் ஒத்துழைத்தார்கள். பின்னர் அவர்களும் எதிர்க்கத் தொடங்கி விட்டார்கள். இனி இக்கட்சிகளிடையே ஒத்துழைப்பைக் கொண்டு வருவது என்பது எளிதாக இருக்கப் போவதில்லை.

காங்கிரஸ் கட்சியிலும் ஒரு பகுதியினர் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பதை விரும்ப மாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு சிறு குழு கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பதைவிட பாரதிய ஜனதா கட்சி தேசியக் கட்சிதான் அதனுடன் ஒத்துழைப்பதில் தவறில்லை என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள் எனவே நீ நினைப்பதுபோல் இப்போதைக்கு இது நடக்கப் போவதில்லை'' எனக் குறிப்பிட்டார்.

என் பக்கமாக ராஜீவ் காந்தி திரும்பி, ''ஒரே நாளில் நாம் வெற்றியை எதிர்பார்க்கக் கூடாது, நாம் தொடர்ந்து முயல்வோம்'' எனக் கூறி என்னை வழியனுப்பினார். பிறகு நவம்பர் 4, 5 தேதிகளில் சம்பவங்கள் மிக வேகமாக நடந்தன. உதவிப் பிரதமராக இருந்த தேவிலால் மந்திரி சபையை விட்டு வெளியேறினார் சந்திரசேகர் வெளியேறினார் 50-க்கு மேற்பட்டோர் வெளியேறினார்கள். தேசிய முன்னணி உடைந்தது. நவம்பர் 7-ம் தேதி வி.பி.சிங் மந்திரி சபை கவிழ்ந்தது. அதன் பின்னர் சந்திரசேகர் பிரதமர் பொறுப்பை ஏற்றார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற இரு முக்கியமான சம்பவங்களை நினைவூட்ட வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

பிரதமராக இருந்த வி.பி. சிங் மண்டல் குழுவின் பரிந்துரையை அமல்படுத்தப் போவதாக ஒரு பொதுக்கூட்டத்தில் அறிவித்து விட்டார். அதை எதிர்த்து வட இந்திய மாநிலங்கள் பலவற்றில் எதிர்ப்புக் கலவரங்கள் பரவின. தென் இந்தியாவில் இட ஒதுக்கீடு கேட்டுப் போராட்டம் நடத்துவது வழக்கம். அதில் நமக்கு ஒரு 50 ஆண்டு வரலாறு உண்டு.

ஆனால் வடக்கில் நடந்தது இட ஒதுக்கீட்டை எதிர்த்து தீயிடுவது, தீக்குளிப்பது என்று பரவியது. கல்வி நிலையங்கள் மூடப்பட்டன.

இதே காலத்தில் அயோத்தியில் ராமருக்கு கோயில் கட்ட உரிமை கேட்டு வற்புறுத்தும் வகையில் பாரதிய ஜனதாக கட்சித் தலைவர் அத்வானி ஒரு ரத யாத்திரையையும் நடத்தினார். அமைதியற்ற சூழ்நிலை நாட்டிலும், நாடாளுமன்றத்திலும் நிலவியது.

நாடாளுமன்றம் தொடங்கிய போது தேசிய முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் ராஜீவ் காந்தியைச் சுட்டிக்காட்டி, போபர்ஸ் பீரங்கி ஊழலுடன் சம்பந்தப்படுத்திப் பேசுவது வழக்கமாக இருந்து வந்தது. சரியாக தொண்ணூறு நாட்கள் கழிந்தபின் ஒருநாள் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், ராஜீவ் காந்தி எழுந்து, அப்போதைய அவைத் தலைவராக இருந்த ரபீ ரேயிடம் அனுமதியைப் பெற்றுக் கொண்டு பேசினார்.

''தேர்தலின் போது மக்கள் வாக்களித்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால் தொண்ணூறு நாட்களுக்குள் போபர்ஸ் சம்பந்தப்பட்ட திருடர்கள் அனைவரையும் பிடித்துக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திக் காட்டுகிறேன்'' என சிங் பேசிய பத்திரிகைச் செய்தியை வாசித்து காட்டி விட்டு, ''எத்தனை திருடர்களை இதுவரை பிடித்திருக்கிறீர்கள்?'' என்று

ராஜீவ் காந்தி கேட்டார். நாடாளுமன்றமே திகைப்பில் மூழ்கியது. சிங் எழுந்து, ''இது இரு நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால், குற்றப் பத்திரிகையை சமர்ப்பிக்க கால தாமதம் ஆகிறது' என்றார்.

ராஜீவ் காந்தி எழுந்து, ''உங்களுக்கு எவ்வளவு கால அவகாசம் தேவை?'' என்று கேட்டார். ''ஏனெனில் அதுவரை இந்த ஆட்சி கவிழாமல் இருக்க நாங்களும் கவனம் செலுத்த வேண்டுமே'' எனக் கிண்டலாகக் குறிப்பிட்டார். நாங்கள் கைத்தட்டிச் சிரித்தோம். எதிர் வரிசையிலிருந்து ''சோர் சோர்'' என்று சத்தமும் வந்தது.

இதே பிரச்சினை குறித்து மேலும் மூன்று மாதங்கள் கழித்து, ''எங்கே குற்றப் பத்திரிகை?'' என்று மீண்டும் கேட்டார் ராஜீவ். வி.பி. சிங் பதினோரு மாத காலம் பிரதமராக இருந்தார் இந்த 330 நாட்களில் வி.பி.சிங்கால் ராஜீவ் காந்திக்கு எதிராக திட்டவட்டமாக எந்தக் குற்றச் சாட்டையும் சுமத்தவும் முடியவில்லை; வழக்குத் தொடரவும் முடிய வில்லை. பிரச்சாரத்தை மட்டும்தான் செய்ய முடிந்தது.

போபர்ஸ் பீரங்கி வாங்கியதில் ஊழல் நடந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர். குற்றச்சாட்டு அன்றும் நிரூபிக்கப் படவில்லை. இன்றும் அதே நிலை நீடிக்கிறது. அது ஒரு இழுபறி வழக்காக நீடிக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட ஸ்வீடன் பிரதமர் ஓல்ப் பாமேயும் சுட்டுக் கொல்லப்பட்டார். காங்கிரஸ் கட்சித் தலைவரான ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்டார். இந்துஜா சகோதரர்கள் இத்தாலிக்காரர்கள் என கதைகள் சுழன்று வருகின்றன.

ஆனால் வாரியிறைத்த சேற்றின் நாற்றமும் அழுக்கும் ராஜீவ் காந்தியின் சட்டையிலும் ஒட்டி விட்டது. காங்கிரஸ் கட்சியையும் ஒரு கலக்கு கலக்கி விட்டது. இந்த நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த பொழுது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடந்ததால் அதிலும் காங்கிரஸ் கட்சி தோற்றதால் பிற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்துவிட பல கட்சிகள் கச்சைக் கட்டத் தொடங்கின.



# இந்திய தரிசனம்

என் மனதைத் தொட்ட இன்னொரு சம்பவம் ராஜீவ் காந்தி ஒரு புதிய மனிதராக மாறிக் கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுவதாக இருந்தது. ராஜீவ் காந்தி மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா, பீகார் பயணத்தை நடத்தி முடித்துவிட்டு டெல்லிக்கு திரும்பியிருந்தார். வழக்கப்படி தோழமைக் கட்சிகளை அழைத்துப் பேசுவதை மறக்காமல் பயணத்தை முடித்துத் திரும்பியவுடன் எங்களை அழைத்திருந்தார்.

ஒரிசாவிலும், மேற்கு வங்கத்திலும், பீகாரிலும் பாதுகாப்புக் காவலர்களை நிறுத்திவிட்டு காட்டில் உழுது கொண்டிருந்த விவசாயியிடம் அவர் மட்டும் நடந்து போனாராம். அந்த உழவரின் மனைவி ராஜீவ் காந்தியை அடையாளம் கண்டு விட்டார். அவர் சத்தம் போட்டு பக்கத்து தோட்டங்களிலிருந்த பெண்களையும் அழைத்தாராம்.

பின்னர் அவருடைய குடிசைக்கு அழைத்துச் சென்று கட்டிலில் உட்காரச் சொன்னாராம். பிறகு ராஜீவ் காந்தி குடிசைக்குள் தலையை தாழ்த்தி நுழைந்து பார்த்தாராம். ஓரிரு மண்பாண்டங்கள், ஓரிரு துணிகள் தவிர செல்வத்தின் அடையாளமே இல்லாமல் வறுமை முழு நிர்வாணமாக நின்றதாக ராஜீவ் காந்தி அப்போது குறிப்பிட்டார்.

''இத்தனை வருடங்களுக்குப் பிறகும் இத்தனை கோடிகள் செலவிட்ட பிறகும் எத்தனையோ ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் இந்த ஏழைகளின் குடிசைகளில் ஒரு மாற்றத்தையும் காணோமே?'' என்று

கவலையுடன் பேசினார். ''நாம் செலவிட்ட பணமெல்லாம் எங்கே போயிற்று?'' என்று கேட்ட அவர் மன்னிக்க முடியாத ஒரு குற்றத்தை செய்த குற்றவாளி மாதிரி மிகுந்த வேதனையோடு பேசுவது தெரிந்தது. குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் மல்கியது.

என் பக்கமாகத் திரும்பி, ''மேற்கு வங்கத்திலும் சரி, பீகாரிலும் சரி, ஒரிஸ்ஸாவிலும் சரி இந்த ஏழை விவசாயிகள் கோபப்படாமல் எவ்வாறு சிரித்துக் கொண்டு என்னை அன்புடன் வரவேற்கிறார்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக நினைத்துப் பார்த்தால் அவர்கள் கோபத்தைக் காட்டியிருக்க வேண்டும்.

ஆனால் ஆச்சரியம்! அந்த அழுக்குச் சேலை அணிந்திருந்த அந்தத் தாய் அவளது குடிசைக்கு நான் வந்ததே மிகப் பெரிய பரிசு என்று கருதி முகம் மலர்ந்ததையும், சிரித்ததையும் என்னால் மறக்கவே முடியவில்லை. இந்தக் காட்சி என் மனதைக் குடைந்து கொண்டேயிருக்கிறது. இவர்களுக்கு தான தர்மம் ஒன்றும் அவசியமில்லை. அவர்கள் உழைக்கவும் முன்னேறவும் நாம் உதவிட வேண்டும். இது பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

இதைத் தொடர்ந்து சில நாட்களுக்குப் பிறகு, ''கிராமப்புறங்களை மேம்படுத்த கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரத்தையும் அதிக நிதியையும் வழங்கக் கூடிய சட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்'' என்றும் ''கிராம வளர்ச்சிப் பணிகளை அவர்களே செய்து முடிக்க அவர் களிடம் பணத்தை கொடுத்து விட வேண்டும்'' என்றும் ''இடைத் தரகர் களை நீக்கிவிட்டால் நம் நாடு வேகமாக முன்னேறும்'' என்றும் குறிப்பிட்டார்.

1984 முதல் 88 இறுதி வரையில் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி கிராமத்து குடிசைகளையும் அங்கு வாழ்ந்த ஏழைகளின் அவலங்களையும் தெரியாதவராகத்தான் இருந்திருக்கிறார். அவர் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் அவருடன் பயின்ற சக மாணவர்கள் விமான ஓட்டியாக இருந்த போது பழகியவர்கள், கட்சியிலும் சேர்ந்து சிலர் அதிகாரப் பொறுப்புக்கும் வந்து விட்டனர்.

இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட கொடுமையை நினைத்து கோபமடைந்திருந்த மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு நேரு காலத்திலும் இந்திரா காந்தியார் காலத்திலும் கிடைத்திராத அளவில் பெரும் வெற்றியைத் தந்தனர் எதிர்பாராத மாபெரும் வெற்றி, பலவீனமான எதிர்க்கட்சி,

அனுபவமும் முதிர்ச்சியும் இல்லாத நண்பர்கள் கூட்டம் இவை அனைத்துமாகச் சேர்ந்து பல தவறுகளுக்குக் காரணமாகிவிட்டது.

1984-ல் கிடைத்த மக்களின் பேராதரவை 1988 இறுதிக்குள் காங்கிரஸ் கட்சி படிப்படியாக இழக்கத் தொடங்கிவிட்டது. காங்கிரஸின் இந்த பேரிழப்புக்கும் சரிவுக்கும் மக்களின் அறியாமை, எதிர்க்கட்சிகளின் சூது விளையாட்டுகளே காரணம் எனக் கூறி அன்றைக்கு தங்களது மழுப்பல் வேலையை சிலர் சிறப்பாகச் செய்தார்கள்.

90 தேர்தலுக்குப் பிறகுதான் அவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகி மற்றவர்களுடனும் சாதாரண மக்களுடனும் பழகக்கூடிய வாய்ப்பைப் பெற்றார் சொல்லப் போனால் உண்மை இந்தியாவை இந்தக் காலத்திலேதான் அவர் தரிசிக்கத் தொடங்கினார் என நினைக்கிறேன்.

ஏழைகளுக்கு வாழ்வு கொடுப்பது, இந்தியாவை முன்னேற்றுவது, லஞ்சத்தை ஒழிப்பது, அதிகார வர்க்கத்தை திருத்தியமைப்பது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுப்பது ஆகியவற்றைப் பற்றியே அவர் பெரிதும் பேசுவது வழக்கமாக இருந்து வந்தது.



**சோனியா, ராகுல், பிரியங்கா ஆகியோருடன் ராஜீவ் காந்தி**



# விமர்சனம் கண்டு முகம் சுளிக்காதவர்

மண்டல் கமிஷன் சம்பந்தமாக வி.பி.சிங் அறிவித்ததைத் தொடர்ந்து வட இந்தியாவில் கலவரங்கள் பரவின. எனவே இது குறித்து நாடாளுமன்றத்திலும் ஒரு பெரும் விவாதம் எழுந்தது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ராஜீவ் காந்தி ஏறத்தாழ இரண்டு மணி நேரம் பேசினார் மொத்தத்தில் மண்டல் குழுவின் பரிந்துரை முழுமை பெறவில்லை. எனவே நிறைவேற்றுவது சிரமம். சரியான கணக்கெடுப்பு இல்லை. இதைச் சரிவர பரிசீலித்து முறையாக நிறைவேற்றா விட்டால் பல புதிய பிரச்சினைகள் எழும். ஆனால் பொதுவாக மண்டல் குழுவின் திசை வழியை ஏற்கிறேன்'' என்பதாகத்தான் அவரது நீண்ட சொற்பொழிவு அமைந்திருந்தது.

அவருக்கு உடல் நலம் சரியில்லாதிருந்ததால் அவைத் தலைவரின் அனுமதியுடன் அடிக்கடி தண்ணீரைக் குடித்துக் கொண்டே பேசினார். பேச்சை நிறுத்தி விட்டு தண்ணீரைக் குடிக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மறுபக்கம் இருந்தோர் வேண்டும் என்றே கிண்டலாக சத்தம் போட்டனர். அவரது சொற்பொழிவை பொதுவாகக் கேட்டவர்கள் மண்டல் கமிஷனை எதிர்த்து வாதாடுவதாக பேசிக் கொண்டுதான் வெளியில் வந்தனர்.

வெளியில் வரும்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியிடம் ''இதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கையா? இந்தப் பேச்சு முழுமையாக தமிழ்நாட்டில் பிரசாரமானால் நம் நிலை பலருக்கும் பதில் சொல்ல வேண்டியதாக அமைந்து விடுமே''

என்றேன். அதைக் கேட்ட வாழப்பாடி ராமமூர்த்தி ''இது காங்கிரஸ் கட்சியின் கொள்கை நிலை அல்ல. ஆனால் பேசியவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர். இப்படித்தான் எங்களுக்கு அடிக்கடி சங்கடங்கள் வருகிறது.''

வாழப்பாடி ராமமூர்த்தி இருவர் பெயரைக் குறிப்பிட்டு, ''அவர்களே இந்தச் சொற்பொழிவுக்கான குறிப்புக்களை தயாரித்திருப்பார்கள். மண்டல் குழு பரிந்துரை பெரிய புத்தகம், எனவே அதைப் படித்து இவர்களைக் குறிப் பெடுக்கச் சொல்லியிருப்பார். இவர்கள் தங்களது பிறவிக் கைவரிசையைக் காட்டி விட்டார்கள்'' என்று எரிச்சலோடு கூறிவிட்டுப் போனார். நான் மிகுந்த சங்கடத்துடன் வீடு திரும்பினேன்.

மறுநாள் மாலை நல்ல வேளையாக ராஜீவ் காந்தியிடமிருந்தே அழைப்பு வந்தது. நான் போய்ச் சேருவதற்கு முன்பே பலரும் கூடிவிட்டனர். விவாதமும் தொடங்கிவிட்டது. அந்த அறைக்குள் நான் உட்கார நாற்காலியும் இல்லை. அவர் என் கையைப் பிடித்து இழுத்து தன் சோபாவின் கைப்பிடி மீது உட்காரச் சொன்னார். நான் மறுத்துவிட்டு பக்கத்தில் நெருக்கியடித்துக்கொண்டு அடுத்த நாற்காலியில்அமர்ந்தேன். விவாதம் மண்டல் கமிஷன் பரிந்துரை பற்றியும், ராஜீவ் காந்தியின் விரிவான உரை பற்றியும், பாராட்டியும் புகழ்ந்தும் போட்டி போட்டு பேசிக் கொண்டிருந்தனர்.

எல்லோரும் பேசி முடித்த பின், ''நீ என்ன நினைக்கிறாய்?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். அங்கிருந்த அனைவரையும் அதிர்ச்சி அடைய வைக்கக் கூடிய வகையில் நான் பேசத் தொடங்கினேன். ''என்னை மன்னிக்க வேண்டும். நான் முற்றிலுமாக மாறுபடுகிறேன். கசப்பான உண்மைகளைச் சொல்கிறேன். கேட்கவேண்டியது உங்களது பொறுப்பு'' என்றேன். ராஜீவ் காந்தி பரபரப்படைந்தார். தயக்கம் இல்லாமல், ''சொல்லுங்கள் நானேதான் விரும்பிக் கேட்கிறேன்'' என்று சொன்னார்.

''நீங்கள் மண்டல் குழுவின் பரிந்துரைகளை எதிர்த்தும் கண்டித்தும் பேசியது தவறு'' என்று தொடங்கினேன். ''எதிர்க்கவில்லை. குறைகளைத் தானே சுட்டிக் காட்டினேன்'' என்றார் அவர். ''அதற்கு என்ன வார்த்தை களைப் பயன்படுத்தினீர்கள் என்பதை விட பேச்சைக் கேட்டவர்கள் எந்த மாதிரி புரிந்து கொண்டு திரும்பினார்கள் என்பது முக்கியம். எனவே மிக அக்கறையுடன் கேட்ட எனக்கும், மண்டல் குழுவின் பரிந்துரையை நீங்கள் விரும்பவில்லை என்றே பட்டது'' என்றேன்.

ராஜீவ் காந்தி, ''அதை அவசரப்பட்டு எப்படி நிறைவேற்ற முடியும். அதில் பல குறைகள் இருக்கிறதே'' என்றார். நிறுத்தாமல் பதில் சொல்லத் தொடங்கினேன். ''மண்டல் குழுவுக்கு ஒரு வரலாறு உண்டு. அந்தக் குழுவை நியமித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டவர் மொரார்ஜி தேசாய்தான். ஆனால் மண்டல் தனது விசாரணையை முடித்து அறிக்கையை தயாரிப்பதற்குள் மொரார்ஜி தேசாயின் மந்திரி சபை கவிழ்ந்து விட்டது. அந்தக் குழுவுக்கு தரப்பட்டிருந்த காலவரம்பும் காலாவதியாகி விட்டது.

ஆனால் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த உங்கள் அம்மா இந்திரா காந்தி அந்தக் குழு தொடர்ந்து இயங்க மேலும் கால அவகாசம் கொடுத்து மறு உத்தரவு போட்டார். பின்னர் மண்டல் தனது அறிக்கையை சமர்ப்பித்த போது பெற்றுக் கொண்டவர் பிரதமராக இருந்த உங்கள் அம்மா இந்திரா காந்திதான். அந்தக் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் அவர் வைத்தபோது அது ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுதான் நடந்த வரலாறு.

உங்கள் தாயால், அன்றைய பிரதமரால் அங்கீகரிக்கப்பட்ட குழுவையும் அவரால் ஏற்கப்பட்ட அறிக்கையையும் உங்கள் கட்சி உறுப்பினர்கள் உட்பட ஏகமனதாக ஒப்புக் கொண்ட பின்னர் பத்தாண்டு களாக பத்திரமாக வைத்திருந்துவிட்டு இப்பொழுது அதை எதிர்த்து பத்தாண்டுகளுக்குப் பிறகு பேசுகிறீர்களே இது நியாயமா?'' எனக் கேட்டேன்.

''இந்திய நாட்டின் முதல் அரசியல் சட்டத்திருத்தமே, இட ஒதுக்கீட்டுக்காகத்தான் வந்தது என்பதையும் அதைக் கொண்டு வர ஒப்புக் கொண்டவர் உங்கள் தாத்தா நேருதான் என்பதையும் மறந்து விடாதீர்கள்'' என்றும் சொன்னேன். இந்தப் பேச்சின் போது அப்துல் சமதும் என்னுடன் இருந்தார். பாராட்டினார்.

நான் பேசியதைக் கேட்ட ராஜீவ் காந்தி மிகவும் அதிர்ச்சி யடைந்தவராக, ''தவறு நடந்து விட்டதே'' என முணுமுணுத்தார். என்னைப் பொறுத்த மட்டில் கண்ணகி சிலம்புடன் வாதாடி முடித்தபின் வாதங்களின் நியாயங்களைக் கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் கலங்கி, கதறி எழுந்த அதே தோற்றத்துடன், குற்ற ஒப்புதலுடன் ராஜீவ் காந்தி இருப்பதாக எனக்குத் தோன்றியது. இது கற்பனையான வர்ணனை அல்ல. நான் நேரில் கண்ட காட்சி. நான் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி.

இந்த உரையாடலுக்குப் பின் எங்களுடன் வெளியில் வந்த நரசிம்மராவ் என் கையைப் பிடித்துக் குலுக்கி, ''நல்ல முறையில் செய்தாய்'' எனப் பாராட்டினார். நான் அவருக்கு நன்றி கூறிவிட்டு, ''உங்களைப் போன்ற மூத்த தலைவர்கள் இதை ஏன் சொல்லக் கூடாது?'' என்று சொன்ன போது ''எங்கள் காங்கிரஸ் கட்சியின் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ள உனக்கு வயது போதாது'' எனக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

இந்தியாவின் முதல் பிரதமரின் பேரன் நான்.

முதல் இந்தியப் பெண் பிரதமரின் மகன் நான்.

மிகக் குறைந்த வயதில் ஒரு பெரும் நாட்டின் பிரதமராக ஆனவன் நான்.

இன்றைக்கும் ஒரு பெரும் கட்சியின் தலைவன் நான் என்ற அகங்காரம் எதுவும் இல்லாமல், ''என் தயவில் இடம் பெற்று என் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நீயா பேசுகிறாய்?'' என்று இளப்பமாக நினைக்காமல், அகம்பாவமாக பார்க்காமல், விமர்சனத்தை ஏற்கின்ற முதிர்ந்த பண்பினை ஏற்று பக்குவத்தோடு வளர்ந்து கொண்டிருந்த ஒரு நல்ல தலைவரை நன்றி கெட்ட அநாகரிகக் கூட்டம் கொன்றுவிட்டதே என்ற கவலைதான் இந்தச் சம்பவங்களை நினைக்கும் தோறும் தோன்றுகின்றது.



தந்தை ராஜீவும் மகன் ராகுலும்



# ஈராக் மீது தாக்குதல்

**1991**-ல் ஈராக் மீது அமெரிக்கா விமானத் தாக்குதலைத் தொடங்கியது. ஈராக்கிற்கும், குவைத்துக்கும், சௌதி அரேபியாவுக்கும் இடையில் தகராறு இருந்தது. ஈராக் குவைத்தைக் கைப்பற்ற முயல்வதாகக் கூறியதாலும், அதே மாதிரி அச்சத்தை சௌதி அரேபியாவும் தெரிவித்ததோடு பாதுகாப்புக்காக அமெரிக்கப் படைகளை அந்த நாடுகள் அழைத்தன. இது போதாதா அமெரிக்காவுக்கு?

ஈராக் மீது கடுமையான விமானத் தாக்குதலைத் தொடங்கியது. மக்கள் வாழும் பகுதிகளையும், எண்ணெய்க் கிணறுகளையும் குறிவைத்துத் தாக்கியது. ஈராக்கின்அதிபர் சதாம் உசேன் அரண்மனையும் தாக்கப்பட்டது. கடற்பரப்பில் வெடித்துப் பரவிய எண்ணெய் இயற்கை வளத்தை நாசப்படுத்திக் கடலில் வாழும் உயிரினங்களையும் சாகடித்துக் கொண்டிருந்தது.

இந்தியா அது பற்றி முதல் மூன்று நாட்களில் எதையும் சொல்லாது மௌனம் சாதித்தது. உலகில் எங்கு கலவரம் மூண்டாலும், தன் சமாதான அறை கூவலை வெளியிடுவதும், ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதும் வழக்கம். ஆனால், வி.பி.சிங் தலைமையிலான மந்திரி சபை மௌனமாக இருந்தது.

இதற்கிடையில் ஈராக், குவைத்தில் பணிபுரிந்து வந்த இந்தியர்கள், யுத்த பீதியால் தாயகம் திரும்பிவிட விரும்பி, தங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு குடியரசுத் தலைவர், பிரதமர், எதிர்க் கட்சித் தலைவருக்குத் தந்தி அனுப்பி இருந்தார்கள்.

எனவே, போர் தொடங்கிய இரண்டாம் நாள் எதிர்க்கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி எழுந்து, இந்திய அரசு ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் பற்றி தன் கருத்தைத் தெரிவிக்கும்படியும், மௌனத்தைக் கலைக்கும் படியும் கேட்டார். ''இந்திய மக்களைக் காப்பாற்ற இந்திய விமானங்களை அனுப்பி, அவர்களைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுங்கள்'' எனக் கேட்டார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதாக அமைச்சர் ஆரிப்கான் அறிவித்தார். அப்பொழுது 320 ரக ஜெட் விமானங்களை, ராஜீவ் காந்தி காலத்தில் வாங்கியதில் தவறு நடந்து விட்டதாகவும், அது விபத்துக்கு உள்ளாகிறது என்றும் கூறி, 320 ரக விமானங்களைப் பறக்க விடாமல், பயன்படுத்தாமல் நிறுத்திவிட்டார்கள்.

இப்பொழுது அதே விமானங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிவிட்டது. பத்து மாத காலம் 320 ரக விமானங்கள் தரையில் நிறுத்தப்பட்டிருந்தன. இதை விசாரிக்க நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு, ''320 ரக விமானம் மிகச் சிறந்தது'' என்றும், ''விமானிகள் போதிய பயிற்சி பெறாததால் இரு விபத்துகள் ஏற்பட்டுள்ளன'' என்றும் கூறி, ''320 ரக விமானங்களைப் பயன்படுத்தாமல் நிறுத்தியதால் ஏற்பட்ட நட்டத்துக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்'' என்றும் கூறிவிட்டது. விமானத்தை ஓட்டாமல் நிறுத்தினாலும் நாள்தோறும் பராமரிப்புச் செலவு செய்தாக வேண்டும்.

இதுபற்றி ராஜீவ் காந்தி விவாதம் நடத்தக் கோரிய போதும், ஆளுங்கட்சியினரும், அதை ஆதரித்தோரும் கூச்சல் போட்டு விவாதத்தை நடத்த விடாமல் தடுத்து விட்டனர்.

விமானங்களை ஓட்டாததால் நாட்டிற்கு ஏறத்தாழ 120 கோடி நட்டம் எனக் கணக்கிடப்பட்டது.

மூன்றாம் நாள், ''ஈராக் மக்களின் அழுகுரல் கேட்கவில்லையா? எதுவும் சொல்ல மாட்டீர்களா?'' எனக் கேட்ட ராஜீவ் காந்தி, ''இந்தியாவின் குடிமகன் என்ற முறையில் ஈராக், குவைத், சௌதி அரேபியா நாடுகளுக்குப் போய் மக்களைச் சந்தித்து, இந்திய மக்களின் கவலையைத் தெரிவிக்கப் போகிறேன் இதற்கு அரசுக்கு ஆட்சேபணை உண்டா?'' என்று கேட்டார்.

''இந்திய மக்களை, விமானம் மூலம் கொண்டு வருவதற்கு 800 கோடி செலவாகும் போல இருக்கிறதே'' என்ற பதில் மட்டும் வந்தது... ''இந்தக் கணக்கு தவறு'' என்று ஒருவர் கூற மீண்டும் கூச்சல், குழப்பத்தில் முடிந்தது.

ஒரு வாரத்திற்குள் குண்டு வீச்சுக்கு ஆளான நாடுகளைப் பார்க்க ராஜீவ் காந்தி புறப்பட்டார். ஆனால், அவர் ஈராக் செல்ல அனுமதிக்கப் படவில்லை. எனவே, குவைத், சௌதி அரேபியா போகாமல், பக்கத்திலுள்ள நாடுகளுக்கு மட்டும் போய்விட்டுத் திரும்பினார். சென்ற இடமெல்லாம், ஒரு பிரதமருக்குத் தரப்படும் வரவேற்பு அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் திரும்பியவுடன் யாசர் அராபத்திடமிருந்து ஒரு தகவல் வந்திருந்ததைக் கூறினார். ஈராக் விவகாரத்தில் ராஜீவ் காந்தி எடுத்த நடவடிக்கைகள், வெளியிட்ட கருத்துக்கள், மேற்கொண்ட பயணம் காரணமாக ஒரு வல்லரசின் ரகசிய இலாகா, அவரைத் தீர்த்துக் கட்டிவிட இறுதித் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாகவும், எனவே, ராஜீவ் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதுதான் அராபத் அனுப்பிய தகவல்.

ராஜீவ் கொல்லப்பட்ட பின் இறுதி மரியாதை செலுத்த டில்லிக்கு வந்த யாசர் அராபத், இந்தத் தகவலை தான் பல மாதங்கட்கு முன்னர் சொன்னதாகப் பத்திரிகைகளுக்குச் சொன்னார்.

இந்த எச்சரிக்கை பற்றி உரிய கவனத்தோடு இருக்க வேண்டியது அவசியம் எனக் கூறிய போது, ராஜீவ் காந்தி சிறிதும் சலனமின்றிச் சொன்னார், ''துப்பாக்கிக் குண்டு ஊடுருவாத சட்டையைப் போட்டு இருக்கிறேன். மேடையில் பேசும் போது, குண்டு ஊடுருவாத கண்ணாடி வலைக்குள் நின்றுதான் பேசுகிறேன். ஆனால், தலையை எப்படி மூடுவது? நெற்றியையும், கண்களையும் வாயையும், எதைக் கொண்டு மூடுவது? நெஞ்சில் உடம்பில் குண்டு துளைக்காமல் பாதுகாக்க முயற்சி செய்யலாம். தலைதானே முக்கியம். அதற்கு ஏது பாதுகாப்பு? எனவே, அஞ்சி, அஞ்சி வாழ்ந்து பயனில்லை. நாம் செய்வதையும், செய்ய வேண்டியதையும் செய்ய வேண்டியதுதான். பிறகு வருவது வரட்டும்'' என்றார்.

சாவைச் சந்திக்கவே அவர் தயாராகிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஒரு வல்லரசின் கொலைக்கரம் அவரது உயிரைப் பறிக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதைச் செய்து முடிக்க ஒரு கூலிப்படையை ஏவிவிட்டது. அது கூலிக்காக கொன்று தீர்த்து விட்டது.

இந்த உண்மைகளைக் கண்டு நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் திறனுள்ள அரசு என்று அமையுமோ, அன்றுதான் நாட்டின் சுதந்திரத்திற்கும், தலைவர்களின் உயிருக்கும் பாதுகாப்புக் கிடைக்கும். அதுவரை பலிகள் தொடரவே செய்யும்.

1991 நவம்பர் ஏழாம் நாளன்று வி.பி.சிங் மந்திரி சபை மீது நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதம் தொடங்கியது. வி.பி.சிங் மீது மரியாதையும், அனுதாபமும் இருந்தாலும், கட்சி வாரியாக வாக்குச் சீட்டைக் கூட்டிப் பார்த்தால், வி.பி.சிங் வீழ்வது உறுதி என்றாகி விட்டது.

மார்ச் 5-ம் தேதி டில்லியில் நான் ஒரு மூத்த அரசியல் (ஆட்சி)த் தலைவரைச் சந்திக்க நேரிட்டது. அப்போது, ''வி.பி.சிங் மந்திரி சபை கவிழக் கூடும்'' என எச்சரிக்கையுடன் குறிப்பிட்டேன். அவர் சிரித்துக் கொண்டே அதை மறுத்தார்.

தாழ்த்தப்பட்ட எம்.பி.க்கள் 90 பேர், கட்சி வேறுபாடு தாண்டி வி.பி.சிங்கை ஆதரிப்பதாகவும், பிற்படுத்தப்பட்ட பிரிவு எம்.பி.க்கள் 100 பேர் ஆதரவு தந்து விட்டதாகவும் கணக்குப் போட்டு, மார்ச் 7-ம் தேதி காங்கிரஸ் கட்சி கூண்டோடு கலைக்கப்படலாம் என்றார்.

மார்ச் 4 -ம் தேதி மாலை ராஜீவ் காந்தி வீட்டில் நான் சந்தித்த தலைவர்களைப் பற்றியும், கண்ட காட்சிகளையும் கூற முடியுமோ? சிரித்து விட்டுத் திரும்பினேன்.

அப்பொழுது அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் கூடக் கிடையாது. இருந்தாலும் மத்திய மந்திரி சபையில் இருவர் மந்திரிகளாக இருந்தனர். எனவே ஈர்ப்பு இருந்ததில் வியப்பு இல்லை. கணக்குத்தான் தவறாகி விட்டது.

மந்திரிசபை கவிழும் எனத் தெரிந்து இருந்தும், வி.பி.சிங் ஆற்றிய உரை என்னை மகிழ்வித்தது.

''விண்வெளியில் கலத்தை அனுப்ப இரண்டு, மூன்று ராக்கெட் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டும், ஒரு குறிப்பிட்ட தூரம் பறந்தவுடன், அடுத்த ராக்கெட்டை ஏவிவிட்டு, எரிந்த ராக்கெட் விழுந்து விடும்.

கலத்தை ஏவுவதுதான் ராக்கெட்டின் வேலை. அது எரிந்து விழ வேண்டியதும் தவிர்க்க முடியாதது. அந்த முறையில் மண்டல் கமிஷன் என்ற கலத்தைப் பறக்க ஏவிவிட்ட பின்னர், வி.பி.சிங் ராக்கெட் எரிந்து விழத்தானே வேண்டும்'' என்றார்.

நான் பலகையைத் தட்டிப் பாராட்டினேன். வீரனாக வீழ்ந்தார் வி.பி.சிங்.

ஆனால், அதே வி.பி.சிங்கிடம், வி.பி.சிங்கிற்குப் பதிலாக, ஜோதிபாசு வருவதாக இருந்தால் ஆதரவு தர விரும்புகிறார் என்பது தெரிவிக்கப் படவில்லை. தெரிவிக்கப்பட்டு இருந்தால், சிங் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய அரசியல்வாதிதான்.

ஆனால் மார்க்சிஸ்டுக் கட்சி காங்கிரஸ் எதிர்ப்பு என்ற கண்ணாடியைக் கழற்றாமலே பார்த்ததால்,அது நடக்கவில்லை.

ஒரு கம்யூனிஸ்டு, இந்தியாவின் பிரதமராக வருவதை பூர்சுவா கட்சிகள் ஒப்புக் கொள்ளுமா? அமெரிக்கா அனுமதிக்குமா? என்ற சூத்திர வாதங்கள்தான் நடந்தன.

பின்னர் தேவகௌடா மந்திரி சபையை மாற்ற வேண்டிய நிலை வந்த போதும், ஜோதிபாசு பெயர் முன்மொழியப்பட்டது. அதை சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. அரசியல் தலைமைக் குழுவிலிருந்த நான்கு மார்க்சிஸ்டுக் கட்சித் தலைவர்கள்தான் அதைத் தடுத்தனர் அரிய வாய்ப்பைக் கெடுத்தனர். இதை இன்று நாடறியும்.

இது பதவி ஆசையில் வந்தது இல்லை. அரசியல் கடமையில் சந்தர்ப்பம் வந்தபோது தவறிவிட்ட இமாலயத் தவறு என்பதைச் சுட்டிக் காட்டாமல் எப்படி விட முடியும்? ஜோதிபாசுவே, ''வரலாற்றில் பெரும் தவறு'' எனக் கூறிவிட்டார்.

இந்தியாவைப் புரிந்து கொண்டிருந்தால்,மக்களோடு சேர்ந்து சிந்தித்துப் பழகினால் இத்தகைய தவறுகள் நிகழாது. ஆனால் சாஸ்திரிகளின் வடகலை தென்கலை வாதத்திற்கு நம்மால் விளக்கம் தர முடியுமா?



# சந்திரசேகர் மந்திரி சபை

**1991** ஜனவரி மாதத்தில் மும்பாயிலிருந்து தோழியர் ரோசா தேஷ்பாண்டே, தோழர் டாஙகே மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், அவருக்கு சிகிச்சை செய்ய ஒரு மருந்து அவசரமாகத் தேவைப்படுவதாகவும், அதை இறக்குமதி செய்ய மத்திய அரசின் அனுமதி தேவை என டாக்டர்கள் கூறுவதாகவும்,எழுதிய கடிதத்துடன், டாக்டர்களின் கடிதமும் இருந்தது. அதில் சில தினங்களுக்குள் மருந்து தேவை என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

இதை ராஜீவ் காந்தியிடம் காட்டி, ''என்ன செய்யலாம்?'' என்று ஆலோசனை கேட்டேன். ''மருத்துவக் குழுவின் ஆலோசனைப்படி, அந்த மருந்துக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும், உடனே போய் பிரதமர் சந்திரசேகரைப் பார்'' என்று கூறியவர், என் முன்னாலேயே மும்பைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது கட்சியைச் சேர்ந்த ஒரு பிரமுகரை, ஒரு மலர்ச் செண்டுடனும், தன்னுடைய ஃபாக்ஸ் கடிதத்துடனும், தோழர் டாங்கேயைப் போய்ச் சந்திக்கச் சொன்னவர், ஓரிரு வாரங்களில் மும்பை வருகிற போது, டாங்கேயைச் சந்திக்கிற நிகழ்ச்சிக்கும் நேரம் ஒதுக்கித் திட்டமிடும்படி கூறினார்.

நான் பிரதமர் சந்திரசேகர் அவர்களைச் சந்திக்கப் போனேன். அவர் அலுவலகத்தில் ஒரு பெருங்கூட்டம் காத்திருந்தது. அது அவர் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரம். அவரது நேர்முகச் செயலாளரிடம்

''அவசரமாகப் பார்க்க வேண்டும்'' என்றேன். ''உள்ளே போகலாம்'' என்றார். ''சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாராமே...'' என்று என் தயக்கத்தைக் காட்டினேன்... ''பரவாயில்லை. நீங்கள் போகலாம்'' என்றார். நான் உள்ளே போன போது சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் அருகிலுள்ள நாற்காலியில் வந்து உட்கார சைகை காட்டினார். தவறான நேரத்தில் புகுந்து தொந்திரவு செய்கிற குற்ற உணர்வு குடைந்தது. இருந்தாலும் போய் உட்கார்ந்தேன்.

அவர் ஒரு சிறு தட்டில் ஒரு ரொட்டியையும், சப்ஜியையும் வைத்து எனக்கும் நீட்டி, ''சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்'' என்றார். நான் சாப்பிட்டு வந்ததாக, நமது வழக்கப்படி ஒரு பொய்யைக் கூறிவிட்டு, ''சாப்பிடும் போது தொந்திரவு செய்வதற்கு மன்னிக்கவும், தோழர் டாங்கே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார், அவருக்கு ஒரு மருந்து அவசரமாக வேண்டுமாம், அதற்கு அரசு அனுமதி தேவையாம்'' என்று கூறிக் கொண்டே டாக்டர்கள் எழுதிய கடிதத்தை நீட்டினேன்.

''நமது பீஷ்மாச்சாரி டாங்கேக்கு இல்லாத மருந்தா? அவரை நோயால் மட்டும்தான் படுக்க வைக்க முடியும்...'' என்றவர் செயலரை மணியடித்து அழைத்தார். ''தோழர் டாங்கேயைத் தெரியுமல்லவா? அவர் நமக்கெல்லாம் பீஷ்மர் மாதிரி. அவருக்கு மருந்து தேவையாம். உடனே ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தத் தடை இருந்தாலும் அதை விலக்கி, இதற்கு அனுமதி கொடுத்து, உடனே நமது தூதுவரலாயங்களுடன் தொடர்பு கொண்டு அந்த மருந்தை வாங்கி, விமானம் மூலம் நாளைக்கே அனுப்பச் சொல். அதை இங்கே அனுப்பக் கூடாது. நேராக மும்பை மருத்துவமனைக்கு அனுப்பச் சொல்... கொஞ்சம் நில். முழுமையாகக் கேள்.

மும்பை மருத்துவத்துறைச் செயலாளருடன் உடனே பேசி, அவரைப் போய், இன்னும் வேறு என்ன உதவிகள் தேவை எனக் கேட்டு செய்யச் சொல். இதுவரை ஆன செலவுக்கும், இனி ஆகக் கூடிய செலவையும் மத்திய அரசு ஏற்கும் என்றும் மருத்துவ மனைக்குச் சொல்லிவிடு... அவர் நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர் தெரியுமல்லவா?'' என்றவர்,

''அடுத்த வாரம் மும்பை போகும்போது, டாங்கேயைப் பார்க்க நமது நிகழ்ச்சி நிரலில் நேரம் போட்டு வை'' என்றார். பிறகுதான் என் பக்கம் திரும்பி, டாங்கேயைப் பார்க்கும் போது, விரைவில் உடல் நலம் பெற தான் வேண்டியதாகக் கூறச் சொன்னார்.

டில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை, எந்த மந்திரியும், அரசு அதிகாரிகளும், காக்க வைத்திருக்க நான் பார்த்தது இல்லை. நெடு நாட்களாக, மக்கள் பிரதிநிதிகளை மதிக்கிற ஒரு நல்ல வழக்கம் டில்லியில் இருக்கிறது. அதேபோல் என்ன கடிதம் எழுதினாலும் பதில் தவறாமல் வரும்.

இதற்கும் மேலாக, நாடாளுமன்ற அவைக்குள் காரசாரமாகப் பொரிந்து தள்ளும் கட்சியினர், பொதுமன்றம் வந்தவுடன் கை கோத்து, சிரித்துப் பேசிக் கொண்டு இருப்பார்கள். இதைப் பார்க்க தமிழ்நாட்டைச் சேர்ந்த நமக்குச் சற்றே வியப்பாக இருக்கும். இங்கே மாற்றுக்கட்சி என்றால், அடிதடி காயம்தானே!

ஆமாம், தமிழன் என்ற ஒரு இனம் உண்டு.
தனியே அவர்கட்கு ஒரு குணம் உண்டு!

இது டில்லியில் இல்லை. பிறகட்சித் தலைவர்களை மதிக்கும் வழக்கம் பலரிடம் இருக்கிறது. ஆனால், அது இருக்க வேண்டியவர்களிடம் இல்லாதிருப்பதையும் கண்டேன். தோழர் எஸ்.ஏ.டாங்கே 1991 மே 23-ம் நாள் காலமானார். அந்தச் செய்தியையும் காலங்கழித்தே தெரிந்து கொண்டேன்.

பதினோரு மாதங்கள் மட்டுமே ஆட்சியில் இருந்த வி.பி.சிங் மந்திரி சபை 1991 நவம்பர் ஏழாம் நாளன்று கவிழ்ந்தது. அதை விழ விடாமல் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான்,இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களும் ராஜீவ் காந்தியை வந்து சந்தித்தனர். காங்கிரஸ் கட்சியில் வி.பி.சிங்கிற்கு பலத்த எதிர்ப்பு இருந்ததால், அந்த வேண்டுகோளை ராஜீவ் காந்தியால் ஏற்க முடியவில்லை.

எனவேதான் மாற்று யோசனையாக, ''இந்திரஜித் குப்தா அல்லது ஜோதிபாசு பிரதமராக வருவதாக இருந்தால், காங்கிரஸ் கட்சி ஆதரவு தரத் தயார்'' என்பதைச் சொன்னார். அதை இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஏற்கவில்லை. ராஜீவ் காந்தி கேட்டுக் கொண்டபடி, ஜோதிபாசு பிரதமராக அந்தத் தருணத்தில் பொறுப்பேற்க ஒப்புதல் தந்து இருந்தால், தங்களை நம்பி ஆட்சி அமைத்த வி.பி.சிங்கை, பதவிக்காக பலியிட்டு விட்டனர் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கக் கூடும். எனவே, அந்தக் கட்டத்தில், பிரதமர் பொறுப்பை ஏற்க மறுத்தது, இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நெறி வழிப்பட்ட சரியான முடிவுதான்.

ஆனால், இதற்கு முன்னர் சில மாதங்கள் மட்டுமே பிரதமராக இருந்த சந்திரசேகர், முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்தார்.

அவருக்கும் வி.பி.சிங்கிற்கும் 1990 தொடக்கத்திலேயே கருத்து மாறுபாடு ஏற்பட்டு விட்டது. அது புகைந்து 90 இறுதியில் வெடித்து விட்டது. சந்திரசேகருடன், தேவிலாலையும் சேர்த்து 60 பேர்தான் இருந்தனர். மந்திரிகளாக இருப்பதற்கே ஏறத்தாழ 70 பேர் வேண்டும். காங்கிரஸ் கட்சி வெளியில் இருந்து ஆதரவு தந்தது. மந்திரி சபையில் சேர மறுத்து விட்டது.

மூன்றாவது மாதத்தில் ஒரு சிறு விஷயத்தை வைத்து மோதல் வந்து விட்டது. ராஜீவ் காந்தி வீட்டை அரியானா மாநிலத்தைச் சேர்ந்த ரகசியப் போலீசார் உளவு பார்த்ததாகவும், அவர்களைப் பிடித்து, ராஜீவ் காந்தி வீட்டின் காப்பாளர்கள், உளவு வேலை பார்த்ததை ஒப்புக் கொண்ட வாக்கு மூலத்தை எழுதி வாங்கி விட்டதாகவும் ஒரு செய்தி பரவியது.

இந்தச் சம்பவம் நடந்த அன்று ராஜீவ் காந்தி மும்பையில் இருந்திருக்கிறார். அவருக்குத் தகவல் தரப்பட்டு இருக்கிறது. அங்கிருந்து அவர், ''காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் சபைக்குப் போக வேண்டாம்'' எனக் கூறிவிட்டார். எனவே, நாடாளு மன்றத்திற்குள் காங்கிரஸ் உறுப்பினர்கள் யாருமே போகவில்லை.

இவை நடந்த போது நான் தமிழ்நாட்டில் இருந்தேன். எனவே, எனக்கு இந்த விவரங்கள் தெரியவில்லை. நான் நாடாளுமன்றம் போன போது நுழைவாயிலில் கோவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருப்பூர் குப்புசாமி நின்று கொண்டிருந்தார். என்னைப் பார்த்தவுடன் ''மந்திரி சபை கவிழப் போகிறது'' என்றார்.

''இது நல்ல செய்தியாக இல்லையே'' என உள்ளே நுழைந்து மூத்த உறுப்பினர்கள் சிலரை நான் கேட்ட போது, அவர்கள் ''விவரம் தெரியவில்லை. வெளியில் இருக்கச் சொன்னார்கள். இருக்கிறோம்'' என்றார்கள். விவரத்தைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் வெளியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு பெரிய கட்சியின் பெரிய உறுப்பினர்களை நினைத்துச் சிரித்தேன்.

நேரில் தெரிந்து கொள்ள ராஜீவ் காந்தியின் நாடாளுமன்ற அறையை நோக்கிப் போனேன். இடையில் சுப்பிரமணிய சாமி வந்தார். அவர் அப்பொழுது அமைச்சர். ''உளவு பார்த்தது உண்மைதான். அதற்காக

வருத்தமும் தெரிவித்து இனி நடக்காது என உறுதியும் கூறிவிட்டோம். ஆனால் சமரசம் ஆகவில்லை. நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது'' என்றார்.

நான் ராஜீவ் காந்தி அறைக்குப் போன போது, காவலாளி, ''முக்கிய ஆலோசனை நடந்து கொண்டிருப்பதால் உள்ளே விட இயலாது'' எனக் கூறினார் என்னுடைய அட்டையைக் கொடுத்து, 'உள்ளே போய்க் கொடுத்து, நான் பார்க்க விரும்புகிறேன் எனச் சொல். வரச் சொன்னால் பார்க்கலாம். இல்லையேல் திரும்புகிறேன்'' என்றேன். தயக்கத்தோடு உள்ளே போனார் காவலாளி.

வெளியில் வந்தவர் மணிசங்கர் அய்யர், ''வரச் சொல்கிறார். வாருங்கள்'' என்றார். கவலையோடுதான் ராஜீவ் காந்தி இருந்தார். ஒரு விபத்தைத் தவிர்க்க வேண்டிய அவசியம் இருப்பதாக நினைத்து, நேரடியாகவே பேசத் தொடங்கினேன். ஆட்சியிலும் இருக்கிறார். எனவே, ''உங்கள் வீட்டில் உளவு வேலை பார்த்தது நெறி முறைப்படி பார்த்தால் தவறு தான்.

ஆனால், அரசியல் ரீதியில் பார்த்தால் அற்பமான விஷயம். உங்கள் முப்பாட்டனார் மோதிலால் நேரு வீட்டை வெள்ளையர் போலீஸ் வேவு பார்க்கவில்லையா? உங்கள் தாத்தா நேருவை காவல்துறை இழுத்துச் செல்லவில்லையா? உங்கள் அம்மா இந்திரா காந்தியையே கைது செய்யவில்லையா?... அதோடு ஒப்பிடுகிற போது உங்கள் வீட்டைச் சுற்றி வலம் வந்து என்ன செய்துவிடப் போகிறார்கள்? அப்படியே உளவு வேலை பார்த்தாலும், இங்கே என்ன கடத்தலா நடந்து கொண்டிருக்கிறது?

அவர்கள் செய்தது முட்டாள்தனமான செயல். அதற்காக ஓர் அரசைக் கவிழ்த்து,அதற்காக இன்னொரு தேர்தல் என்றால் ஒரு பெரும் கேள்வி எழப்போவது உறுதி. அது உங்களுக்கும், உங்கள் கட்சிக்கும் நல்லதல்ல... யோசியுங்கள்'' என்றேன்.

''ஓர் ஆட்சியைக் கவிழ்க்க ஏதாவது மக்களைப் பாதித்த பிரச்சினை வேண்டும். தேசத்திற்கு கெட்டது என்ற குற்றச்சாட்டு இருந்தால் நல்லது. என் வீட்டில் தொந்திரவு பண்ணினார்கள். அதற்காக கவிழ்த்தேன் என்றால்... யோசியுங்கள்'' என்றேன்.

**"It is a question of trust"** என்றார்'' நான் நம்பி ஆதரவு தரும்போது என்னை நம்பாமல், என் வீட்டிலேயே உளவு வேலை பார்த்தால், இதை எப்படிச் சகிப்பது?'' என மீண்டும் கேட்டார்.

''இவர்களது நம்பிக்கையை விட்டுத் தொலையுங்கள். உங்கள் மீதும், நேரு குடும்பத்தின் மீதும் மக்கள் வைத்திருக்கிற நம்பிக்கையை கருத்தில் கொண்டு முடிவெடுங்கள்'' என்றேன்.

''இந்தக் காரணத்திற்காக கவிழ்க்கக் கூடாது. வேறு காரணம் வரும் போது பார்க்கலாம்'' என்றேன்... சற்றே யோசித்தார். அதற்குள் சுப்பிர மணிய சாமி வந்தார்...''மாலையில் பேசி ஒரு சமரசத் தீர்வு காணலாம். இதைச் சந்திரசேகரிடம் கூறுங்கள்' என அவரை அனுப்பி விட்டார்.

ஆனால், சுப்பிரமணிய சாமி நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்குள் சந்திரசேகர், தான் பதவி விலக விரும்புவதாகவும் நேராகக் குடியரசுத் தலைவரிடம் கடிதத்துடன் போவதாகவும் கோபத்தோடு அறிவித்தார். உள்ளே இருந்த பா.ஜ.க.வினர் கைத்தட்டி வரவேற்றனர். இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளும், ஜனதா தள உறுப்பினர்களும் சந்திரசேகரைப் பாராட்டினர்...

ஒரு மந்திரி சபை கவிழ்ந்தது. மற்றொரு தேர்தல் மக்கள் மீது திணிக்கப்பட்டது. அதில்தான் ராஜீவ் காந்தி களப்பலி ஆனார்.

**"சிரம் அறுத்தல் மன்னருக்கு விளையாட்டு;**
**நமக்கோ உயிரின் வதை"**
என்ற பாரதிதாசனின் பாடல் நினைவுக்கு வந்தது.

வி.பி.சிங் மந்திரி சபை மீது நவம்பர் ஏழாம் நாள் வாக்கெடுப்பு நடக்க இருந்தது. நவம்பர் ஐந்தாம் நாள் தோழமைக் கட்சிகளை அழைத்து ராஜீவ் காந்தி பேசினார். முஸ்லிம் லீக் தலைவர்கள் மூவர் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். சுலைமான் சேட், பானத்வாலா, அப்துல் சமது ஆகியோர் தான் அந்த மூவரும். இவர்களில் அப்துல் சமதும், நானும் 'கை' சின்னத்தில் போட்டியிட்டவர்கள். முஸ்லிம் லீக். வி.பி.சிங்கிற்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்து விட்டது. எனவே, கைச் சின்னத்தில் போட்டியிட்ட அப்துல் சமதுக்கு அனுமதி தருமாறு கேட்டார்கள்.

சிறிது கூடத் தயக்கமின்றி, ''நீங்கள் விரும்புகிறபடி, மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள்'' என்று கூறிவிட்டார். என்னைப் பார்த்து. ''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' எனக் கேட்டார். ''மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த விரும்புவதால், வி.பி.சிங்கை ஆதரிக்க விரும்புவேன்.

ஆனால், பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவு பெற்று மந்திரி சபை அமைத்ததால், அவருக்கு வாக்குப் போட மாட்டேன்'' எனக் கூறியவுடன், ''பா.ஜ.க. தான் இப்பொழுது அவரை எதிர்க்கிறதே'' என்றார்.

''நாளுக்கொரு கொள்கை. வேளைக்கொரு வேஷம் கூடாது. ஆகவே எதிர்க்கிறேன்'' என்றேன். ''உங்கள் கட்சி பா.ஜ.க.வை ஆதரித்தால், அப்பொழுது உங்களுக்கு நேர் எதிராக நிற்பேன்'' என்றேன்.

இதை வெகுவாகப் பாராட்டிய ராஜீவ் காந்தி, ''இவ்வளவு உறுதியாக நிற்பவர்கள் என் கட்சியில் எத்தனை பேர் எனச் சொல்ல முடியாது. எங்கள் கட்சி சிறுபான்மையாகி பா.ஜ.க. மந்திரி சபை அமைத்தால், உடனே அங்கே போய்விடக் கூடிய பல நண்பர்கள் என்னைச் சுற்றி இருப்பது தெரியும். என் கட்சிக்கு தன்னம்பிக்கை போய் விட்டது. அதை உருவாக்க என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை,'' எனக் கவலையுடன் பேசினார்.

''இடதுசாரிகளும் இணங்கி வருவதாகத் தெரியவில்லை. உன்னை மாதிரிப்பட்டவர்கள் இங்கே வர மறுக்கிறீர்கள்... என்ன செய்வதென்றே புரியவில்லை'' என்று மிகுந்த கவலையுடன் அன்று பேசினார்.

அவர் சொன்னது எவ்வளவு உண்மை என்பதை மோகன் குமார மங்கலத்தின் மகன் ரங்கராஜன் குமாரமங்கலம் பா.ஜ.க.வுக்கு பறந்த வேகத்தில் காண முடிந்தது.

வாழப்பாடி ராமமூர்த்தி கட்சியில் சேரவில்லை என்றாலும் மந்திரி சபையில் சேர்ந்தது, கோவிந்த வல்ல பந்த் மகன் கே.சி.பந்த் மனைவியோடு பா.ஜ.க.வில் சேர்ந்தது, கூட்டம் கூட்டமாக காங்கிரசார் பா.ஜ.க. கூடாரத்துக்குள் நுழைந்து கொண்டிருந்த வேளையில்தான் ராஜீவின் மனைவி, கணவர் விட்ட பணியைத் தொடர காங்கிரசுக்குள் நுழைந்தார்...

முயல்கிறார்... பார்க்கலாம்.



# ரணகளத்தை நோக்கி...

**மே** 20-ம் நாள் (1991) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் 21-ம் நாள் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டிற்கு வருவதாகவும் மே 2-ம் தேதி பிற்பகலில் நான் ஏற்கெனவே போட்டுள்ள தேர்தல் பிரச்சார வேலைகளை ரத்து செய்து விட்டு 3 மணியளவில் விமான நிலையத்திற்கு வந்து விட்டால் நல்லது எனவும் தெரிவிக்கப்பட்டது.

''நீங்கள் ராஜீவ் காந்தியுடன் திருபெரும்புதூர் வரை செல்ல வேண்டும். நீங்கள் அவரது சொற்பொழிவை மொழிபெயர்க்க வேண்டும். திருபெரும் புதூருக்குப் பிறகு அவருக்கு மொழிபெயர்ப்புக்குத் துணையாக யாரை அனுப்புவது என்பது குறித்து அவர் வந்தபின் அவருடன் பேசி தீர்மானித்துக் கொள்ளலாம்'' என்று சொல்லப்பட்டது.

மே 21-ம் தேதி காலையில் மீண்டும் ஒரு தொலைபேசி செய்தி வந்தது. அதில் நான் வேட்பாளராக போட்டியிட்ட வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் ஓர் இடத்தில் ராஜீவ் காந்தி பேசுவார் என்றும் பின்னர் திருபெரும்புதூர் செல்ல இருக்கிறார் என்றும் சொல்லப்பட்டது. பகல் 2 மணியளவில் மீண்டும் ஒரு தொலைபேசிச் செய்தி வந்தது.

அதன்படி நான்கு மணிக்கு மேல் விமான நிலையத்திற்கு வந்தால் போதும் என்று தகவல் தரப்பட்டது. அரை மணி நேரம் கழித்து உங்கள் தொகுதியில் போரூரில் பொதுக் கூட்டம். எனவே நீங்கள் அந்த மேடை


யிலேயே இருங்கள். விமான நிலையத்திற்கு வரவேண்டிய அவசிய மில்லை என்ற தகவல் தரப்பட்டது.

தேர்தல் காலத்தில் தலைவர்களின் சுற்றுப்பயணம் நாம் நினைக்கிறபடி குறிப்பிடுகிற நேரங்களில் நடைபெறுவதில்லை. காலதாமதம் ஆவது ரத்தாவது தேதி மாற்றி வைக்கப்படுவது போன்றவை நமக்கு மிகவும் அனுபவப்பட்டவைதான்.

24 மணி நேரம் 36 மணி நேரம் எம்.ஜி.ஆர் வருவார் வருவார் என மக்கள் காத்திருந்து கேட்ட கூட்டங்களும் உண்டு. அவர் வரக்கூடும் என எதிர்பார்த்து போடப்பட்ட மேடை கலைக்கப்படாமலும் கட்டப்பட்ட விளக்குக் கம்பங்கள் தொடர்ந்து நாலைந்து நாட்கள் கலைக்கப்படாமல் இருந்து கூட்டம் நடைபெறாமலே போய் விட்ட சம்பவங்களும் உண்டு. எனவே செய்திகள் மாறி மாறி வந்ததை நான் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. மே 21 பிற்பகல் நிகழ்ச்சி எல்லாவற்றையும் ரத்து செய்துவிட்டு அவரை வரவேற்கத் தயாராக இருந்தேன்.



**சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ராஜீவ் காந்தி**



கடைசி பிரஸ் மீட்



# மே 21-ம் தேதி

**பி**ற்பகல் மூன்றரை மணியளவில் நான் போரூர் சென்றடைந்தபோது மைதானத்தைச் சுற்றி சில காவல் துறையினர் நின்று கொண்டிருந்தனர். மக்கள் 200, 300 பேர்தான் திரண்டிருந்தனர். ஆனால் நெடுஞ்சாலை நெடுகிலும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் நின்று கொண்டிருந்தனர். நான் மேடைக்கருகில் சென்ற பொழுது ஒரு காவல் துறை அதிகாரி என்னை அணுகி, ''ராஜீவ் காந்தி வருவது சந்தேகம் என ஒரு செய்தி வந்துள்ளது. இதை ஒரு தகவலுக்காக உங்களுக்குக் கூறுகிறேன். எதற்கும் காங்கிரஸ் கட்சியிடமிருந்து அதிகார பூர்வமாக தகவல் வருகிற வரையில் நாம் இதைவெளியில் சொல்லத் தேவையுமில்லை'' என கூறிவிட்டுப் போனார்.

சிறிது நேரத்தில் ஆந்திராவிலிருந்து கிளம்ப வேண்டிய அவரது விமானத்தில் கோளாறு என்றும் எனவே அவர் வருவது சந்தேகம்தான் எனச் செய்தி வந்தது. வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக போட்டியிட்ட ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கத் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான ஜி.காளன் வந்து சேர்ந்தார். அவருக்கும் அதே தகவல் கிடைத்திருக்கின்றது. ''இதுதேர்தல் காலம் தானே. எனவே நாம் ஒலி பெருக்கியை வைத்து மக்களிடம் பேசிக் கொண்டிருப்போம். ஒருவேளை ராஜீவ் காந்தி வரவில்லை என்று உறுதியாகிவிட்டால் நாம் பேசி முடித்த பின்பு அதைக் கடைசிச் செய்தியாக சொல்லிவிட்டு கூட்டத்தைக் கலைத்து விடலாம்'' என்று நான் யோசனை சொன்னேன். அதன்படியே முதலில் சில நண்பர்களை நமது தேர்தல் அணியை ஆதரித்துப் பேசுமாறு சொன்னோம்.



போரூர் கூட்டத்தில் ராஜீவ் காந்தியின் சொற்பொழிவை
தா. பாண்டியன் தமிழாக்கம் செய்கிறார்.

கூட்டத்தில் நான் பேசத் தொடங்கிய போது ராஜீவ் காந்தி சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கி விட்டதாகவும் போரூர் கூட்டத்திற்கு நேரடியாக வந்து கொண்டிருப்பதாகவும் எனவே பேச்சை முடித்து விடாமல் இழுத்துக் கொண்டே இருக்கும்படி ஒரு துண்டுச் சீட்டில் எழுதி என் கையில் திணித்தார்கள். அவர் வரும் செய்தி மகிழ்ச்சியைத் தந்தது. அவர் வந்து கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிவித்தவுடன் கூட்டம் பெருகத் தொடங்கிவிட்டது. பேசிக் கொண்டிருந்த எனக்கும் சரி, கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்கும் சரி, ராஜீவ் காந்தியை எதிர்பார்க்கும் உணர்வே மேலோங்கியிருந்தது.

ஒலிபெருக்கியின் முன் பேசிக் கொண்டிருந்த நான் தண்ணீர் குடிப்பதற்காக நிறுத்துவது போல நிறுத்திவிட்டு சட்டமன்ற வேட்பாளரை அழைத்து கூட்டத்தின் தலைவர்,அந்தப் பகுதியின் காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர் தவிர வேறு யாராக இருந்தாலும் மேடையை விட்டு இறக்கி விடும்படி கூறினேன். அதே போல் மாலைகள், துண்டுகள் அணிவதையும் நாம் அனுமதித்த பிறகுதான் மாலையிட விரும்புவோர் மேடையில் ஏறமுடியும் என்பதையும் அறிவித்துவிட்டேன்.

மேடைக்கு அருகில் சில காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவர்களை மேடையை விட்டு இறக்கியதைக் கண்டித்தும், ''ஒரு கம்யூனிஸ்ட்டை உள்ளே விட்டால் நம் அனைவரையும் மேடையை விட்டு துரத்தி விட்டான் பார்'' என்றும் திட்டிக் கொண்டிருந்தார்கள். அவை நன்றாகவே என் காதில் விழுந்தன. இந்தச் சந்தடி முடிவதற்குள் ராஜீவ் காந்தி மேடைக்கு வந்து விட்டார் அவருக்கு நானும் சட்டமன்ற வேட்பாளரும் பெரிய மாலைகளைப் போட்டோம்.

அது நாங்கள் அவருக்கு அணிவிக்கும் கடைசி மாலை என்று அப்பொழுது தெரியவில்லை. வழக்கமாக அவருக்கு சிவப்பு நிற சால்வையை நான் அணிவிப்பது வழக்கம். அன்று புறப்படும் முன்னர் என் மகளிடம் நல்ல சால்வையாக ஒன்றை எடுத்து வைத்திருக்குமாறு சொல்லி இருந்தேன். மாலையைப் போட்ட பின்னர், சால்வை போர்த்த நான் பையைத் திறந்தபோது வெள்ளை நிறச் சால்வை வந்தது. பை மாறிவிட்டதா என ஒரு நொடி திகைத்தேன்.

விசாரிக்க, சோதிக்க அது நேரம் அல்ல. எனவே, வெள்ளை நிறச் சால்வையைப் போர்த்தினேன். உடனே ராஜீவ் காந்தி ''உங்கள் சிவப்பு நிறச் சால்வை என்ன ஆயிற்று?'' என்று கேட்டார் அதற்குள் ராஜீவ்

காந்தியிடம் சால்வையைக் கேட்டுப் பல பெண்கள் மேடை அருகே கைகளை நீட்டினார்கள். முன்னாலிருந்த ஒரு அம்மையாரிடம் அந்தச் சால்வையைக் கொடுத்து விட்டார்.

''நீங்கள் களைப்பாக இருப்பது போலத் தெரிகிறது. இங்கு தேர்தல் நிலை நமக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. நீங்கள் இந்தச் சுற்றுப் பயணத்தைத் தவிர்த்து இருக்கலாமே!'' என்றேன். ''தமிழ்நாட்டுக்கு வருவது என்றால் மகிழ்ச்சி தானே. ஏன் நான் வந்தது பிடிக்கவில்லையா?'' என்றார். ''அப்படிச் சொல்வேனா... ஆயிரம் முறை வாருங்கள். இங்கேயே தங்கி விடுங்கள். தேர்தல் பிரச்சாரத்துக்கு அவசியமில்லை'' என்று மீண்டும் கூறினேன்.

இதற்கிடையில் மாலை அணிவிப்புப் படலம் முடிந்து அவர் சுருக்கமாகப் பேசினார். நான் மொழி பெயர்த்தேன். மேடையை விட்டு இறங்கும் போது என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே இறங்கி விட்டார். தன் காரில் தன் அருகில் உட்கார வற்புறுத்தினார். காரின் பின்பக்கம் மூன்று பெண்கள் இருப்பதைக் கண்டவுடன் ''நீங்கள் முன் இருக்கையில் இருங்கள். நான் பின் இருக்கையில் அவர்களுடன் இருக்கிறேன்'' எனக் கூறிக் கொண்டே பின் இருக்கையில் இடது ஓரமாக உட்கார்ந்தேன். வலது ஓரத்தில் மரகதம் சந்திரசேகரும், அவரை அடுத்து எனக்கு அறிமுகமில்லாத இரண்டு பெண்களும் இருந்தனர்.



எம்.ஜி.ஆர். படம் பரிசளிப்பு

பின் இருக்கையிலிருந்த என் பக்கமாக ராஜீவ் காந்தி பார்த்தபடி பேச்சைத் தொடங்கினார் பக்கத்திலிருந்த பெண்கள் ''எங்கள் கேள்விக்கான பதிலை முடித்து விடுங்கள்'' என்றார்கள். அப்பொழுதுதான் அவர்கள் இருவரும் பத்திரிகை நிருபர்கள் என ராஜீவ் காந்தி அறிமுகம் செய்தார். அவர்களது பேட்டி முடியாமல் தொடர்ந்து கொண்டிருந்தது.

என் பக்கமாகத் திரும்பிய ராஜீவ் காந்தி ''உங்கள் தொகுதி தேர்தல் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது?'' எனக் கேட்டார். ''வாய்ப்பு நன்றாகவே உள்ளது. தமிழ்நாடு பூராவிலும் பொதுவாக அதுவே நிலை'' என்றேன். ''உங்கள் தொகுதியிலுமா வெற்றி வாய்ப்பு உறுதி?'' என்று மீண்டும் கேட்டார். ''ஆமாம்'' என்றேன். ''சில மாநிலங்களில் இருந்து வரும் பதில்கள் உற்சாகம் தருவதாக இல்லை'' என்று கூறினார். அதற்குள் நிருபர்கள் தங்கள் வேலையைத் தொடங்கிவிட்டார்கள். ''தேர்தலுக்குப் பிறகு தாங்கள் அமைக்கப் போகும் மந்திரி சபை எத்தகையதாக இருக்கும்? எப்படிப் பட்டவர்களை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வீர்கள்?'' மடக்கி மடக்கி அவர்கள் மந்திரி சபை பற்றியே கேட்டுக் கொண்டிருந்தனர்.

''மந்திரி சபை சம்பந்தமாக நான் எதுவுமே சிந்திக்க வில்லை. தேர்தல் முடியட்டும். பிறகு யோசிப்போம்'' எனக் கூறினார். அவர்கள் விட்ட பாடாக இல்லை. ''அரசு அமைக்கும் வாய்ப்புக் கிடைத்தால், எத்தகைய மந்திரிகளைத் தேர்ந்து எடுப்பீர்கள். அதன் நோக்கம் எப்படி இருக்கும்?'' என மீண்டும் அதைப் பற்றியே கேட்டனர். ''ஏழ்மையை ஒழிப்பதை முதற் கடமையாகக் கொண்ட ஒரு மந்திரி சபைதான் இனி அமைய வேண்டும். ஆனால் நபர்களைப் பற்றி நான் ஒன்றும் யோசிக்க வில்லை. தேர்தல் முடியட்டும் பார்க்கலாம்'' என்றார்.

இவ்வாறு பேசிக்கொண்டு கார் நகர்ந்து கொண்டிருந்தபோது எங்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே பக்கவாட்டில் இருந்த கண்ணாடியைத் திறந்து கொண்டு சாலையோரத்தில் நின்ற மக்களுக்குக் கைகளை ஆட்டி அசைப்பதும் சில இடங்களில் துண்டுகளையும் சால்வை களையும் வீசி எறிந்து கொண்டும் வந்தார். சிலர் உற்சாக மிகுதியால் காருக்கு அருகில் ஓடிவந்து அவரது கையைத் தொட முயன்றனர்.

இதைக் கண்ட நானும் மரகதம் சந்திரசேகரும் ஏக காலத்தில் ''அவ்வாறு செய்ய வேண்டாம்'' எனக் கேட்டுக் கொண்டோம். ''யாராவது கையை பிடித்துத் தொங்கி உங்களைக் காயப்படுத்தக் கூடும். அல்லது அவர்கள் விழுந்து அடிபட நேரிடலாம்'' என்று மரகதம் சந்திரசேகர் சத்த

மாகவே சொன்னார். அதைத் தொடர்ந்து ''மேடைக்குப் போனபிறகு துண்டுகளை வேண்டுமானால் வாரி வழங்குங்கள். இப்படிச் செய்வது ஆபத்து'' என்று நானும் எச்சரித்தேன்.

எங்கள் பக்கம் திரும்பி சிரித்தாரேயொழிய பதிலேதும் சொல்ல வில்லை. நிருபர்களைப் பொறுத்தவரையில் அந்தச் சம்பவம் எங்களது உரையாடல் ஆகிய எதையும் பொருட்படுத்தாமல் தேர்தல் சம்பந்தமாகவும் வர இருக்கின்ற மந்திரி சபையைப் பற்றியும் மடக்கி மடக்கி வெவ்வேறு கோணங்களில் கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருந்தனர். அவர்களது நச்சரிப்பு எனக்கு கொஞ்சம் எரிச்சலையூட்டியது. இருந்தாலும் எவ்வித பதற்றமுமின்றி ராஜீவ் காந்தியும் பிடி கொடுக்காமல் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தார். இதற்குள் நாங்கள் சென்ற வண்டி பூந்தமல்லியில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் பிரச்சார மேடையை நெருங்கிவிட்டது.

பூந்தமல்லியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏராளமான பேர் நெருக்கியடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். மேடையில் ஏறும் பொழுதே, ''நான் சில வரிகள் தான் பேசுவேன். நீங்களும் சுருக்கமாக மொழி பெயர்த்து விடுங்கள்'' என்று கூறிக் கொண்டே மேடையில் ஏறினார். மாலைபோட வேண்டியவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு முந்தி வந்தனர். சந்தடி அதிகமாக இருந்தது. மேடை ஒழுங்காக அமையவில்லை. ஒரு சில வரிகளே பேசிவிட்டு ராஜீவ் இறங்கி விட்டார். மேடையை விட்டு இறங்கியவுடன் வாழப்பாடி ராமமூர்த்தியை அழைத்தார் அவரை ''முன்னால் காரில் சென்று திருபெரும்புதூர் மேடையில் அதிக ஆட்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' எனக் கூறி அனுப்பிவிட்டார். அதைத் தொடர்ந்து எங்களுக்கு முன் சென்ற ஜீப்பில் வாழப்பாடி ராமமூர்த்தி நின்றவாறு கூட்டத்தை விலகச் சொல்லி சைகை காட்டிக் கொண்டே வேகமாக எங்களுக்கு முன் பயணமானார் அவரைத் தொடர்ந்து பூந்தமல்லியை விட்டு திருபெரும்புதூர் எனும் படுகளத்தை நோக்கி எங்கள் வண்டி புறப்பட்டது.

மீண்டும் நிருபர்கள் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்கள். ராஜீவ் காந்தி, ''நீங்கள் கேள்வி கேட்கவும் ரொம்ப நேரம் அவகாசம் இருக்கிறது. அதை விட மந்திரி சபைக்கும் அவகாசமும் இருக்கிறது. எனவே அதை விடுத்து வேறு எதையாவது கேளுங்கள்'' என்றார்.

ஒரு நிருபர், ''உத்திரப்பிரதேசத்தில் உங்களது கட்சி ஒரு பெரும் தோல்வியை சந்திக்கும் போலத் தெரிகிறது. எனவே எந்த மாநிலத்தில் வெற்றி பெற்று அதை ஈடுகட்டப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''தேர்தல்

முடிவு அறிவிக்கப்பட்டவுடன் இதற்குப் பதில் கிடைத்துவிடும்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

இன்னொரு நிருபர், ''மீண்டும் பெரும்பான்மை பெறாமல் எதிர்க்கட்சி நிலைக்கு தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு ராஜீவ் காந்தி, ''ஜனநாயக நாட்டில் ஒரு பொறுப்புள்ள கட்சி மக்களின் தீர்ப்புக்கேற்ப ஆட்சிப் பொறுப்பை ஏற்கவோ அல்லது எதிர்க் கட்சியிலிருந்து பணியாற்றவோ எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். எனவே மக்களின் தீர்ப்பு எதுவோ அதற்கேற்ப நடந்து கொள்வோம்'' என்றார்.

நிருபர்கள் சோனியா காந்தியைப் பற்றியும் பிரியங்காவைப் பற்றியும் ஏதோ ஒரு கேள்வியைக் கேட்கத் தொடங்கினார்கள். ஆனால் அந்தக் கேள்வி முற்றுப் பெறுவதற்கு முன் கார் நின்றது. ராஜீவ் காந்தி பதிலேதும் கூறாமல் இறங்கிவிட்டார். எங்களைக் காரை விட்டு இறங்க வேண்டாம் எனக் கூறிவிட்டு அவர் மட்டும் இறங்கிச் சென்றார்.

நான் காரில் இருந்தவாறே அவர் மட்டும் இறங்கிப் போவது ஏன் என்று பார்த்தேன். அங்கே ஒரு பெரும் கூட்டம் இந்திரா காந்தியின் சிலையைச் சுற்றி நின்று கொண்டிருந்தது. அதற்கு மாலையணிவித்து விட்டு ராஜீவ் காந்தி திரும்பி வந்தார். மீண்டும் காரில் ஏறும் போது ''கூட்டம் நடக்கிற இடத்திற்கு வந்து விட்டோமோ? இனி அருகில் இருப்பதாகத்தான் சொன்னார்கள்'' என்று சொல்லிக் கொண்டே ஏறினார் மீண்டும் கண்ணாடிக் கதவை இறக்கி விட்டு துண்டுகளையும், சால்வைகளையும் எறியத் தொடங்கினார். மீண்டும் தடுக்க முயன்றேன். ஆனால் என் முயற்சி வெற்றி பெறவில்லை.

சில மணித் துளிகளுக்குள் மைதான மேடைக்குச் செல்லும் வழியில் காரை திடீர் என நிறுத்திவிட்டு ராஜீவ் காந்தி இறங்கப் போனார். ''நேராக மேடைக்குப் போகலாம் இப்படிக் கண்ட இடத்திலும் இறங்க வேண்டாம்'' என்று சொன்னேன். அவ்வாறு சொல்லும் போது ஒரு பெரும் விபத்தை நோக்கி நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம் என்று எனக்குத் தெரியாது. நேரத்தை வீணாக்காமல் அவரை மேடைக்குக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்ற உணர்வுடன்தான் பேசினேன். ஆபத்து பற்றிக் கிஞ்சித்தும் நான் எதிர்பார்க்கவில்லை. அத்தகைய நினைப்பே இல்லை. மரகதம் சந்திரசேகரும் நேராக மேடைக்குப் போகலாம் என்று வேண்டினார்.

''மாலைகளோடு பெண்கள் வெகு நேரம் காத்துக் கொண்டு நிற்கிறார்கள் போலத் தெரிகிறது. தமிழ் மக்கள் என்னை நேசிக்கிறார்கள்.

நான் தமிழ் மக்களை நேசிக்கிறேன்'' என்று கூறிய வண்ணம் சிரித்துக் கொண்டே இறங்கினார் இதுதான் அவர் எங்களிடம் பேசிய கடைசி வார்த்தைகள் ராஜீவ் காந்தியின் வாயிலிருந்து உதிர்ந்த கடைசி வார்த்தைகளும் இவைதான்.

**''தமிழ் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். தமிழ் மக்களை நானும் நேசிக்கிறேன்''** இதைத் தொடர்ந்து அவரது வழக்கமான புன்சிரிப்பு. ராஜீவ் காந்தி காரைவிட்டு இறங்கி வெகு வேகமாக கூட்டத்தை நோக்கி நடந்தார். அந்தக் கூட்டத்தினரும் முண்டியடித்துக் கொண்டு ஓடி வந்தனர். ராஜீவ் காந்தியின் மீது அவர்கள் மோதாமலும் தள்ளாமலும் இருப்பதற்கு அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றேன். இரண்டு மூன்று கனத்த பெண்கள் என்னைத் தள்ளி விட்டார்கள். அவர்களை நிறுத்துவதற்குப் பதிலாக நிற்க முடியாமல் நான் தள்ளாடிக் கொண்டிருந்தேன். என் வலது கால் பாதத்தில் தனது செருப்புக் காலால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாத வேகத்தில் ஒருவர் மிதித்தார் வலிதாங்க முடியாமல் அவர்களைத் தள்ளி முறைப்படுத்தப் போராடிக் கொண்டிருந்தேன்.

ஓர் இளைஞன் ராஜீவ் காந்தியின் கழுத்தில் துண்டைப் போட்டு அவரது கையையும் தோளிலே போட்டுக் கொண்டு ராஜீவ் காந்தியை திணற அடித்தது போதாதென்று ஒரு கேமராக்காரரை சீக்கிரம் படம் எடு என்று விரட்டிக் கொண்டிருந்தான். எங்களைத் தொடர்ந்து மரகதம் சந்திரசேகரும் மிகச் சிரமப்பட்டு மூச்சு வாங்க நடந்து வந்து சேர்ந்தார்.

ஆர்வமுள்ள நண்பர்கள். ஆனால் முற்றிலுமாக கட்டுப்பாடே இல்லாத ஒரு காட்டுக் கூட்டமாக நடந்து கொண்டது. அவரோடு சேர்ந்து படமெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதிலே காட்டிய அக்கறை, ஒரு பெரும் தலைவரிடம் எத்தகைய மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற பண்பாட்டையே சாகடித்து விட்டது.

காங்கிரஸ் கட்சியினர்க்கு அவரது கட்சியின் தலைவரை மரியாதையாக நடத்துவது எப்படி? பாதுகாப்புக் கொடுப்பது எப்படி? ஒரு பொதுக்கூட்ட மேடை அமைப்பது எப்படி? என்பது போன்ற பல சாதாரண விஷயங்கள் காங்கிரஸ் கட்சியை விட்டு அகன்று பல ஆண்டுகள் ஆகி விட்டதாக நான் நினைக்கிறேன். அந்தக் கட்டுப்பாடற்ற கூட்டத்தின் மத்தியில் ஒரு கருநாகம் ஊர்ந்து கொண்டிருந்தது எனக்கும் தெரியவில்லை. கூட்டத்தினருக்கும் தெரியவில்லை. காவல் துறையினர்க்கும் தெரியவில்லை.



காத்திருக்கும் கொலையாளி



கொலையாளி குனிந்து குண்டை வெடிக்கச் செய்கிறாள்

இந்தக் கூட்டத்தை முறைப்படுத்த போராடிக் கொண்டிருந்த நேரத்திலேதான் ராஜீவ் காந்தியின் தனிக்காவலர் என் தோளைப் பிடித்து ''நீங்கள் மேடைக்குச் செல்லுங்கள். நான். ராஜீவ் காந்தியை அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்றார் நான் மேடையைப் பார்த்த போது மேடையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மட்டும் நின்று கொண்டிருந்தார். ராஜீவ் காந்தியின் பாதுகாவலரைத் தொடர்ந்து தமிழ்நாடு காவல்துறை அதிகாரி ஒருவர் என் அருகில் வந்தது தெரிந்தது. ஆனால் நான் அவரது முகத்தைப் பார்க்கவில்லை. அவர் பெயரும் எனக்குத் தெரியாது.

ராஜீவ் காந்தியை காவலர் அழைத்துவர விட்டுவிட்டு மேடைக்குச் செல்லலாம் எனத் திரும்பிய பொழுது அவரது தோளுக்கும் என் தோளுக்கும் இடையில் ஓர் அடி இடைவெளி இருந்திருக்கலாம். வழக்கமான என் செந்துண்டு என் தோளில் இருந்தது. நான் திரும்புவதற்காக இடது காலை எடுத்து வைத்தபோது வேட்டு வெடித்தது. சத்தம் கேட்டது. வெடித்த போது வரவேற்புக்கான வான வேட்டுப் போடும் நண்பர்கள் முட்டாள்தனமாக மைதானத்திற்குள் வெடித்து விட்டதாக ஒரு நொடி நினைத்தேன்.

ஆனால் தொடர்ந்து சிந்தித்துப் பார்க்க வழியே இல்லாத வகையில் ஆறு, ஏழு அடிகளுக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டேன். தூக்கியெறியப்பட்டு விழும்போது வலது கையை ஊன்றியதால் என் வலது கை சதை சிதைந்தும் முன் கைப்பகுதி மேலே ஏறியும் விட்டது. சில நொடிகள் என்ன நடந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒரு தீப்பந்தம் எழுந்ததையும் வெடிச்சத்தம் கேட்டதையும் உணர்ந்தேன். ஆனால், அதனால் என்ன நடந்தது என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சில நிமிடங்களுக்குப் பிறகுதான் நான் பிரக்ஞை பெற்று மீண்டும் எழுந்திருக்கக் கூடும் என நினைக்கிறேன்.

ஏதோ ஒன்று நடந்து விட்டது என்பது மட்டும் தெரிந்தது. நான் எழ முயன்றேன். எழுந்திருக்க முடியவில்லை. இடது கையை ஊன்றி தலையைத் தூக்கிச் சுற்றிப் பார்க்க முயன்றேன். கண்களில் எரிச்சல் அதிகமாக இருந்தது. தலையிலிருந்தும் காது, மூக்கிலிருந்தும் ரத்தம் பீறிடுவது தெரிந்தது. வலது பக்க விலா எலும்பு கால் பாதம் வரையில் நூற்றுக்கணக்கான நெருப்புக் கம்பிகள் குத்துவது மாதிரி ஒரு சகிக்க முடியாத வேதனை. வெடி விபத்து நடைபெற்றிருக்கிறது. அடிபட்டு காயம் பட்டுவிட்டோம் ஆனால் சாகவில்லை. இனி என்ன ஆகும்? என்று

நினைத்தபோதுதான் ராஜீவ் காந்தி எங்கே? என்ற எண்ணம் பகீரென்று எழுந்தது.

அவரது பெயரைச் சொல்லி ஓங்கிக் கத்தினேன். ஆனால் அந்த நேரத்தில் என் சத்தம் பிறருக்கு கேட்டதா எனத் தெரியவில்லை. பதிலேதும் வரவில்லை. என் கண்களால் எதையும் தெளிவாகப் பார்க்கவும் முடிய வில்லை. இருப்பினும் இடது கையை ஊன்றி மீண்டும் எழப் போராடிக் கொண்டு இருந்தேன். எனக்கு மிக அருகில் இரண்டாக துண்டிக்கப்பட்ட ஒரு உடல் வெட்டப்பட்ட ஒரு ஆடு மாதிரி துடித்துக் கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் ஒருவர் 'ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கத்துவது கேட்டது. முகத்தில் ரத்தத்தை கையால் துடைத்துக் கொண்டு பார்க்க முயன்ற போது பல உடல்கள் துள்ளிக் கொண்டும் பலர் மரண பீதியுடன் அலறிக் கொண்டிருப்பதும் தெரிந்தது. ஒரு பயங்கரமான ரண களத்தில் பலர் உயிரை இழந்தும், பலர் உயிருக்காகப் போராடிக் கொண்டுமிருந்த போது எப்படி எழுவது என்பது பற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ராஜீவ் காந்தியைத் தேட வேண்டும் என விரும்பினேன். ஆனால் எழவும் முடியவில்லை. நகரவும் முடியவில்லை. சரியாகப் பார்க்கவும் முடியவில்லை.

நல்ல வேளையாக என்னுடன் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் எனக்குத் துணையாகவும் இருக்க வந்திருந்த சென்னைத் துறைமுகச் சங்கத்தின் செயலாளராக இருக்கும் தோழர் அஜூவும், கட்சித் தோழர் கார்த்திக்கும், என் தம்பியின் மகனும், முகப்பேரைச் சேர்ந்த விஸ்வநாதனும், கோவைத் தோழன் மணியும், எங்களுடைய ஓட்டுநர் விசுவநாதனும், என் சிவப்புச் சால்வை கிடப்பதை அடையாளமாக வைத்து மைதானத்தை நோக்கி ஓடி வந்தனர். ஆனால் என்னுடைய சால்வை ராஜீவ் காந்தியுடைய உடலோடு சேர்ந்து பறந்து அவர் உடம்பிற்கு அருகிலேயே கிடந்திருக்கிறது என்பதைப் பின்னர் அறிந்தேன். நான் அதற்குப் பல அடிகளுக்கு அப்பால் கிடந்தேன். தோழர்கள் என் கைகளையும் கால்களையும் பிடித்துத் தூக்கினார்கள். பல இடங்களில் இருந்தும் வடிந்த ரத்தத்தை பார்த்து பயந்து போனார்கள். நான் அவர்களுக்கு தைரியமூட்டி ''என்னை ஜீப்புக்குக் கொண்டு போங்கள்'' என்றேன்.

என் கைகளையும் கால்களையும் பிடித்துத் தூக்கிக் கொண்டு அவர்கள் நடக்கத் துவங்கிய போது மேடையில் நின்ற வாழப்பாடி ராமமூர்த்தி தலையில் அடித்துக் கொண்டு கதறி அழுவதையும் நாலு பேர் அவரைப்

பிடித்து உட்கார வைக்கப் போராடிக் கொண்டிருந்ததையும் பார்த்தேன். மறுபுறம் ஜீ.கே.மூப்பனார் வேட்டி நுனி ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு மைதானத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருப்பதையும் பார்த்தேன். நாங்கள் நாலு எட்டு வைப்பதற்குள் காயம்பட்டுக் கிடந்த காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் 'என்னைக் காப்பாத்துங்கள்' என்று கத்தினார்.

நான் அவர் பக்கம் திரும்பி 'நீங்கள் பயப்பட வேண்டாம். என்னை ஜீப்பில் போட்ட் பிறகு என் தோழர்கள் உங்களையும் தூக்க வருவார்கள்' எனக் கூறிவிட்டு 'ராஜீவ் காந்தி எங்கே?' என அவசரமாகக் கேட்டேன். ''அவர் சிறு காயங்களுடன் தப்பி விட்டார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டார்கள். உங்களையும் ஆஸ்பத்திரிக்கு போகச் சொல்லியிருக்கிறார்'' என்று ஒருவர் மாறி ஒருவராக நால்வரும் சொன்னதை நான் நம்பி விட்டேன். அந்த நேரத்தில் அவர் அப்படித் தப்பியிருக்க வேண்டும் என நம்புவதற்கே என் மனமும் விரும்பியது.

அந்த நேரத்தில் அவரது சாவைப் பற்றிய செய்தியைக் கேட்கவோ, நம்பவோ என் மனம் தயாராக இல்லை. ஆனால் என் தோழர்கள் சொன்ன பதில் சாமர்த்தியமான சமயோசிதமான கெட்டிக்காரத்தனமான பொய் என்பதை பின்னரே தெரிந்து கொண்டேன். ஜீப்பில் என்னைப் போட்டவுடன் வண்டியை வேகமாக எடுக்க டிரைவர் முயன்றார். நான் அவரைத் தடுத்து நிறுத்தி 'நாம் விட்டு விட்டு வந்த காவல் துறைக்காரரை, மீண்டும் தூக்கி வரும்படி' சொன்னேன். துரிதமாக அந்தக் கடமையைச் செய்தார்கள். பின்னர் ஜீப் வேகமாகக் கிளம்பிற்று. அதே நேரத்தில் காவல் துறையைச் சேர்ந்த பலர் ஓட்டமாகவும், வண்டிகளிலும் பல திசைகளை நோக்கி ஓடிக் கொண்டிருந்த மறக்க முடியாத இழிவான நிகழ்ச்சிகளையும் கண்ணால் கண்டேன்.

அதே நேரத்தில் விபத்து நடந்த இடத்திற்கருகில் சில காவல் துறையினர் கைத்துப்பாக்கிகளுடன் 'பிடி, விடாதே' எனக் கத்திக் கொண்டு ஓடியதையும் கண்டேன். மைதானத்தில் அவ்வாறு நின்றவர்கள் சிலர். மைதானத்தை விட்டு உயிருக்காக ஓடியவர்கள்தான் பலர்.

காவலுக்காக வந்திருந்த காக்கிச்சட்டை அணிந்திருந்த போலீசார் தலை தெறிக்க ஓடிக் கொண்டு இருந்தனர். மூன்றே மூன்று உயர் போலீஸ் அதிகாரிகள் மட்டும் ரிவால்வருடன் வெடிகுண்டு வெடித்த இடத்தைச் சுற்றி ஓடிக் கொண்டும், கத்திக் கொண்டும் இருந்தனர். அவர்களில் ஒருவர் கம்பத்திற்கருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன், மாவட்ட உதவி போலீஸ் அதிகாரி.




மண்ணில் சிதைந்த மாமனிதன்

போலீஸ் வேன்கள் மிகவேமாக ஓடத் தொடங்கின. சில உயர் அதிகாரிகள் விசிலடித்து அவர்களை நிறுத்தக் கத்தியும் வண்டிகள் நிற்காமல், பிழைத்தால் போதும் என ஓடிவிட்டன. கோழைகளைப் போல காவல் துறையினர் ஓடக் கண்டேன். அரசியல்வாதி மூப்பனார் களம் நோக்கி வேட்டியை மடித்துக் கொண்டு ஓடிவந்ததையும் கண்டேன். வாழப்பாடி பதறிப் பதறி கதறி உருண்டு அழுததையும் கண்டேன்... இருந்தும் ராஜீவ் இறந்து விட்டதாக, கொல்லப்பட்டு விட்டதாக அப்போது நான் நம்பவும் இல்லை. நினைக்கவும் இல்லை.

ஜீப் சிறிது தூரம் சென்றவுடன் ''எங்கு போகிறீர்கள்?'' என்று தோழர் களைக் கேட்டேன். ''காஞ்சிபுரம் மருத்துவமனையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம்'' என்றார்கள். ''வேண்டாம், வண்டியை சென்னை அரசாங்கப் பொது மருத்துவ மனையை நோக்கி விடுங்கள்'' என்று சொன்னேன். மறுப்பின்றி வண்டியை சென்னை நோக்கித் திருப்பி வேகமாக ஓட்டத் தொடங்கினார்கள்.

ரத்தம் தொடர்ந்து வடிந்ததால் வேதனையும் அதிகமாயிற்று. நாக்கு வறண்டு தாகம் அதிகமாயிற்று. எனவே ''தண்ணீர் வேண்டும்'' என்று கேட்டேன். ஒரு பாட்டிலில் பாதி அளவில்தான் தண்ணீர் இருந்தது. அதை நான் வாங்கிக் குடிக்க முயல்வதற்குள் காயம்பட்டுக் கிடந்த காவல்துறைக்காரர் தனக்கும் தண்ணீர் வேண்டும் என்று கத்தினார். லேசாக நாக்கையும் உதடுகளையும் நனைத்துக் கொண்டு தண்ணீர் பாட்டிலை அவருக்குக் கொடுக்கச் சொல்லி விட்டேன். அவ்வாறு நாங்கள் அதிகமாக தண்ணீர் குடிக்காதது நல்லதாகப் போய்விட்டது. காயம்பட்டு ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிற நேரத்தில் நாக்கு எவ்வளவு வறண்டாலும் தண்ணீரைக் குடிக்கக் கூடாதாம். அத்தகைய நேரங்களில் தண்ணீரைக் குடித்தால் ரத்தம் வழிவது தீவிரமடையுமாம். எனவே கூடுமான வரையில் எவ்வளவு கதறி அழுதாலும் தண்ணீரைக் கொடுக்காமலிருப்பது அல்லது உதட்டை மட்டும் லேசாக நனைப்பது என்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமாம்.

நான் மருத்துவமனையில் சேர்ந்த பிறகு நான் உயிர் பிழைத்த அதிசயங்களில் தண்ணீர் கிடைக்காமல் போனதும் ஒன்று என்று டாக்டர்கள் சொன்னார்கள். தண்ணீரை அதிகமாகக் குடித்திருந்தால் பாதி வழியிலேயே செத்திருக்கக் கூடிய அபாயம் இருந்தது என்றும் சொன்னார்கள். திருபெரும்புதூரிலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்களுக்குள் டிரைவர் விஸ்வநாதன் கொண்டு வந்து சேர்த்ததையும் வெகுவாகப் பாராட்டி னார்கள். இன்னும் ஐந்து நிமிடங்கள் கால தாமதம் ஆகியிருந்தால் சிகிச்சை செய்தும் பலனளிக்காமல் செத்திருக்கக்கூடும் என்றும் சொன்னார்கள்.



ராஜீவின் இறுதிப் பயணம்

திருபெரும்புதூரிலிருந்து சென்னையை நோக்கிப் புறப்பட்ட ஜீப்பை கண் மண் தெரியாத வேகத்தில்தான் டிரைவர் ஓட்டியிருக்கிறார். போகும் போது டிரைவரை எச்சரித்த தோழர் அஜு ''குண்டு விபத்திலிருந்து தப்பி வந்த நம் தோழரை இப்பொழுது வேகமாகப் போய் எங்காவது மோதி முடித்துவிடாதே, ஒருவருக்கு பதிலாக ஆறேழு பேர் சேர்ந்து சாகப் போகிறோம்'' என்று அவர் எச்சரித்ததும் என் காதில் விழுந்தது. எவ்வளவு தூரம் வந்து விட்டோம் என்று ஒருமுறை கேட்டேன். ''பூந்தமல்லியைத் தாண்டிவிட்டோம்'' என்று பதில் வந்தது.

வலது கையும் காலும் வலி தாங்க முடியவில்லை. அதை மட்டும் ஏதாவது துணியைச் சுற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு மேல் அதிகமாகப் பேச முடியவில்லை. பார்க்க முயன்றேன். எரிச்சல் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. ரத்தமும் துப்பாக்கி மருந்து கலந்த புகைத் தண்ணீரும் நெற்றியிலிருந்து வடிந்து கண்ணுக்கு எரிச்சலை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. சிறிது தூரம் சென்ற பின் கண்களைத் துடைத்துக் கொண்டு எந்த இடம் என்று பார்க்க முயன்றேன். நிறையக் கட்டடங்கள் தெரிந்தன. ஆனால் என்னால் எந்த இடம் என்று உறுதி செய்ய முடிய வில்லை.

பூந்தமல்லியைத் தாண்டி ஜீப் சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த போது விபத்து நடந்த செய்தி பரவி சென்னையின் தெருக்களில் தீ வைப்பு அடிதடி பரவியிருக்கிறது. அமைந்தக்கரையைத் தாண்டிய போது கல்லெறியும் தீ வைப்பும் நடந்து கொண்டிருந்தது. ஜீப்பிலிருந்த தோழர்கள் நின்று கொண்டு, 'மருத்துவமனைக்கு காயம் பட்டவரை, பாண்டியனைக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம். விலகுங்கள். கல் எறியாதீர்கள்!' என்று தங்கள் சக்தி முழுவதையும் கொண்டு கத்திக் கொண்டே போயிருக்கிறார்கள். மிகப் பெரிய ஆச்சரியம், ஜீப்பை யாரும் தடுக்கவில்லை. அத்தனை ஆயிரம் கற்கள் பறந்த போது ஒரு கல் கூட ஜீப் மீது விழவில்லை. மருத்துவமனையின் நுழைவாயில் அருகில் ஜீப் இன்னொரு வண்டியோடு மோத இருந்திருக்கிறது. ஆனால் நூலிழையில் தப்பிவிட்டதாக பின்னர் சொன்னார்கள்.

ஒரு கிறிஸ்துவ தேவாலயத்தில் நியான் விளக்கினால் எழுதப்பட்ட வாசகம் தெரிந்தது. ''பயப்படாதே உன்னுடனே நான் இருக்கிறேன்'' என்பதுதான் அந்த வாசகம். அந்த நேரத்தில் அதை ஒருவர் நேரில் நின்று எனக்கு உறுதி கூறுவதைப் போலத் தோன்றியது. அந்த வார்த்தைகள் வேதனையை மறந்து அசாத்திய நம்பிக்கை கொள்ள வைத்தது. சாவை

எதிர்த்துப் போராடுகிற ஓர் உறுதி மனத்தில் ஆழமாக வளர்ந்தது. குழந்தை மாதிரி நான் சாகப் போவதில்லை. சாக மாட்டேன் என முடிவு செய்துகொண்டேன். அவ்வாறு நினைத்துக் கொண்ட போது, 'அது என்ன உன் கையிலா இருக்கிறது?' என்ற கேள்வியும் மனத்தில் எழுந்தது. இதையெல்லாம் டாக்டர்களிடம் விட்டு விடு' என்று என் கம்யூனிஸ்ட் மூளையும் புத்தி சொல்லிக் கொண்டிருந்தது.

நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என நான் மீண்டும் கேட்ட போது ''அமைந்தக்கரையைத் தாண்டி விட்டோம்'' என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நடந்தது எதுவும் எனக்குத் தெரியவில்லை. பேச்சும் வரவில்லை. கண்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை. மூச்சு அடங்குவது மாதிரி ஓர் உணர்வு. நான் மயக்கமடைந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

பொது மருத்துவமனையைச் சேர்ந்ததும் டாக்டர்களை தோழர்கள் அணுகி பதற்றத்தோடு நடந்ததைச் சொல்லி என்னைச் சீக்கிரமாக அவசர சிகிச்சைப் பிரிவிற்கு தூக்கிச் செல்லுமாறு வற்புறுத்தினார்கள். தோழர்கள் பதறியது, உரத்த குரலில் பேசியது டாக்டர்களுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. டாக்டர்கள் அஜுவுடன் கோபமாக வாதாடுகிற சத்தம் கேட்டு நான் ஒருவாறு சமாளித்து மீண்டும் பேச முற்பட்டேன். டாக்டர்களை அருகில் வரச்சொல்லி ''சடங்குகளைப் பாராமல் உடனடியாக ரத்தக் கழிவை நிறுத்த உள்ளே கொண்டு செல்லுங்கள். ராஜீவ் காந்திக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. மேலும் பலர் மருத்துவமனைக்கு வரக் கூடும். தயாராகிக் கொள்ளுங்கள். இனியும் தாமதிக்க வேண்டாம்'' என்று பேசுகிற வரையில் என் சக்தி முழுவதையும் திரட்டிப் பேசிவிட்டேன்.

மீண்டும் மயக்கமாகி விட்டேன். படுக்கையில் போட்டவுடன் பல டாக்டர்கள் என்னைச் சுற்றி நிற்பதும் பரபரப்புடன் பேசுவதும் ஓரளவு எனக்கு விட்டு விட்டுத் தெரிந்து கொண்டிருந்தது. ஒரு டாக்டர் குனிந்து வந்து என் காதருகில், ''உங்கள் தலையை உடனடியாக மொட்டையடிக்க வேண்டும் உங்கள் சட்டையையும் பனியனையும் கழற்ற முடியாது. கத்தரிக்கோல் வைத்து வெட்டத்தான் வேண்டும்'' என்றார். இதை ஓரளவு புரிந்து கொண்ட நான் என் மனவலிமை முழுவதையும் திரட்டி, ''நான் இப்பொழுது நோயாளி. நீங்கள் டாக்டர்கள் செய்ய வேண்டியது எதுவானாலும் செய்யுங்கள்'' எனக் கூறிவிட்டு மீண்டும் மயங்கிவிட்டேன்.

தலை ரோமத்தை ஒருவர் வழித்து எடுக்கிற அதே நேரத்தில் இன்னொருவர் கத்தரிக் கோலால் சட்டையையும் பனியனையும் துண்டு

துண்டாக வெட்டியெடுத்தார் ரத்தம் வழிந்ததால் சட்டையிலும் பனியனிலும் தோய்ந்து அது உடம்போடு ஒட்டிக் கொண்டு விட்டது. எனவே அதை பிரித்தெடுப்பதற்காக அவர்கள் வெட்டியெடுக்க நேரிட்டது.

இதற்கிடையில் ஒரு சுவையான வேறு ஒரு வகை விபத்தும் நடந்தது. வெடிகுண்டு விபத்து நடந்த விவரம் என் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் தெரியாது. என் முதல் மகள் அருணாவின் முதல் மகள் நீதிமதிக்கு அன்று பிறந்த நாள். எனவே அன்று இரவு விருந்து வைத்து அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து விருந்து அருந்திக் கொண்டிருந்த நேரம். நானும் வந்து விருந்தில் கலந்து கொள்வேன் என்றும் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அப்போது தொலைபேசி மணி அடித்திருக்கிறது. காவல் நிலைய அதிகாரி பேசுவதாகச் சொல்லிவிட்டு என் மகளிடம், ''உங்கள் அப்பா கொல்லப்பட்டு விட்டார். நாளை காலை அரசு மருத்துவமனைக்கு வந்து அவரது உடம்பைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று சொன்னவுடன் என் மகளுக்கு எதுவும் புரியாமல், ''அய்யோ அப்பாவைக் கொன்று விட்டார்களாம்'' என்று கத்தியபடி கீழே சாய்ந்து விட்டாராம். என் மனைவி பதறிப் போய் ஓடி வந்து தொலைபேசியை எடுத்து, ''நீங்கள் பேசுவது யார்? என் கணவர் ராஜீவ் காந்தியுடன் அல்லவா போனார்? எப்படிக் கொலை நடந்தது. பார்த்தீர்களா?'' என்பது வரை நிதானமாகக் கேட்டி ருக்கிறார். மறு பக்கத்திலிருந்து ''அப்பாவிற்கு ரொம்பவும் வேண்டியவன் தானம்மா பேசுகிறேன். குண்டு வெச்சு ராஜீவ் காந்தியையும் இன்னும் பலரையும் கொன்று விட்டார்களம்மா'' என்று சொல்லிவிட்டு அவரும் அழுதிருக்கிறார்.

பிறகென்ன... விருந்து நடந்து கொண்டிருந்த வீடு இழவு வீடாக மாறிவிட்டது. சில நிமிடங்களில் செய்திகள் தெருக்களிலும் பரவிவிட்டது. பக்கத்து தெருக்களிலிருந்த ஆண்கள், பெண்கள் எல்லோருமாக வீட்டிலே வந்து திரண்டு விட்டார்களாம். நாங்கள் அப்பொழுது குடியிருந்த வீடு முச்சந்தி முனை வாயில் முகப்புச் சுவற்றில் ஒரு பிள்ளையாரை வைத்திருந்தார்கள். அந்தப் பிள்ளையாருக்குத் தினந்தோறும் ஒருவர் வந்து பூஜை செய்வது வழக்கம். ஒரு சில ஆஸ்திகப் பெண்மணிகளும் நாங்கள் இருந்த வீட்டிற்கே வந்து செடிகளில் பூப்பறித்து அந்தப் பிள்ளையாருக்குப் பூஜை செய்வது வழக்கம்.

இதைத் தினந்தோறும் நான் வேடிக்கை பார்ப்பேன். சில சமயங்களில் பூக்கள் அவர்களுக்கு எட்டாத உயரத்தில் செடியில் இருந்தால் அதன்

கிளைகளை அவர்களுக்கு எட்டுகிறாற் போல வளைத்துக் கொடுப்பதும் உண்டு. அவர்களுக்கு அதிலே ஒரு மகிழ்ச்சி. எனக்கு ஒருவகை பொழுது போக்கு. இவ்வாறு வழக்கமாக வந்து பூஜை செய்யும் வயதான அம்மையார் ஒருவர் அந்தக் களேபரம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் வாசலருகே நின்று பிள்ளையாருடன் உரத்த குரலில் சண்டை போட்டாராம்.

அது ஒரு சின்ன கதை. இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஓராண்டுக்கு முன்னால் என்னிடம் சான்றிதழ் பெறவும், சிறு வேலைகட்காகவும் என்னை வந்து சந்திக்கும் வழக்கமுடைய ஒரு கட்சியைச் சேர்ந்த வட்டார முக்கியஸ்தர், அந்தப் பிள்ளையாரைக் கண் வைத்து, கடப்பாரையை வைத்துப் புரட்டிதூக்கிக் கொண்டு போய்விட்டார். ஓராண்டுக்கு முன்னால் ஒரு நாள் காலை வீட்டின் முன்னால் இதே போல ஒரு கூட்டம்! பூஜை செய்ய வந்தவர்கட்கு பிள்ளையார் அங்கு இல்லை. சிலர் அழுதனர் ''அதைத் திருப்பிக் கொண்டு வர முயல்கிறேன். அல்லது வீட்டுக்காரரிடம் சொல்லி புதிது வைத்து விடலாம்'' எனக் கூறினேன். ஒருவாறு ஆறுதல் அடைந்து சென்றனர்.

''ஆனால் அதைக் காவல் துறையினர் தேடிக் கண்டு பிடிக்க பல மாதங்களாகி விட்டன. ஒரு கிணற்றிலிருந்து அதை எடுத்து வந்தனர். எடுத்த பிரமுகரையும் கையோடு கொண்டு வந்து என்னிடம் அறிமுகம் செய்தனர் நான் திருடிய பிரமுகரைக் கண்டு அதிர்ச்சி அடைந்து போனேன். ஆனால் அடிக்க வேண்டும் போல இருந்தது. அதைத்தான் காவல்துறை செய்திருக்குமே என விட்டு விட்டேன்.

திருடியவன் கொஞ்சம் கூடக் கூசாமல் ஒரு விளக்கம் சொன்னான். மூன்று தெருக்கள் கூடுமிடத்தில் கட்டப்படும் வீடுகளின் முன்னால் கட்டாயம் பிள்ளையாரை வைக்க வேண்டுமாம். அது சாத்திரமாம். அந்தப் பிள்ளையாரையும் கடையில் வாங்கி வைத்தால் சக்தி இருக்காதாம். எங்காவது வீட்டிலிருப்பதைத் திருடி வைத்தால்தான் சக்தியுண்டு என்று சொன்னதால், நாங்கள் வீட்டடில் இல்லாதிருந்த நேரம் பார்த்துக் கிளப்பிக் கொண்டு போய்விட்டாராம்!


இத்தனையும் நடந்த பிறகு அந்த ஆள் மீது வழக்குப் பதிவு செய்யாமல் விட்டுவிட பெரும்பாடு பட வேண்டியதாகிவிட்டது. அவர் அந்தக் கட்சியின் வேட்டி துண்டோடுதான் நடமாடிக் கொண்டிருக்கிறார். இதுதான் பிள்ளையாரை மீட்ட படலம்.

இதைச் சுட்டிக் காட்டி அந்த அம்மையார் பிள்ளையாரிடம் சண்டை போட்டிருக்கிறார். ''நீ காணாமல் போன போது உன்னைக் காவல் துறை மூலம் மீட்டுக் கொண்டு வந்து வைத்தார். இன்றைக்கு அந்த மனிதரை நீ உயிருடன் இந்த வீட்டுக்குக் கொண்டு வரா விட்டால், உன்னை என் கையாலேயே உடைக்கிறேன் பார்'' எனச் சத்தம் போட்டாராம்! பிறகு நேராக வீட்டுக்குள் நுழைந்து அழுது கொண்டிருந்தவர்களைச் சத்தம் போட்டு அடக்கினாராம். ''அவர் சாகவில்லை. எந்த முட்டாள் சொன்னது. பழையபடியும் வருவார் பார்'' எனக் கூறியதோடு என் மனைவியிடம் சென்று, ''அவர் சாகமாட்டாரம்மா. அவர் பல புண்ணிய காரியங்கள் செய்கிறார் எனவே என் கடவுள் காப்பாற்றுவான்'' எனக் கூறிவிட்டுப் போய்விட்டாராம்.

நான் இறந்து போனதாக அதிகார பூர்வமாக காவல்துறை கூறிவிட்டது. தெருக்களிலிருந்து வந்த பல பிரமுகர்களும் ''அப்படித்தான் கேள்விப் படுகிறோம்'' எனக் கூறிவிட்டனர். எனவே பெரியம்மாவின் வார்த்தைகள் ஆறுதலுக்காக கூறப்படுவதாகத்தான் என் மனைவிக்குப் பட்டதாம்.



**சிதைக்கு ராகுல் தீ மூட்டுகிறார்**



ராஜீவ்காந்தியை தீக்கு இரையாக்கியபின்
ராகுல் காந்தியும் மற்றவர்களும்



# மருத்துவ மனையில்...

காவல் துறையைச் சார்ந்தவர்களும், பல பிரமுகர்களும் பாண்டியனும் ராஜீவ் காந்தியுடன் கொல்லப்பட்டு விட்டதாகவே மீண்டும் மீண்டும் தகவல் தந்ததோடு உடலை சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறிவிட்டதால், அங்கே சென்று தகவலைத் தெரிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனக் கருதி, என் மகன் ஜவகரும், மருமகன் என்ஜினியர் பி.பி.ஆர்.ராவும், சென்னை பொது மருத்துவமனைக்குப் போக டாக்சி, ஆட்டோவைத் தேடினர். யாருமே கலவரம் நடந்து கொண்டிருந்தபடியால் வண்டியை ஓட்டத் தயாராக இல்லை.

கடைசியாக தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் சந்து பொந்து வழிகளில் சென்னை ரிப்பன் கட்டிடம் வரை வந்து சேர்ந்து விட்டனராம். அங்கிருந்து நடந்தே மருத்துவமனை நுழை வாயிலை அடைந்தனராம். ஆனால், காவல் பலமாக இருந்தது. யாரையும் உள்ளே விடாமல் துரத்திக் கொண்டிருந்தார்களாம். என் மகன் காவல் துறை அதிகாரியைச் சந்தித்து தான் பாண்டியனின் மகன் என்பதைக் கூறி அனுமதிக்கக் கேட்ட பின், அவர் தயக்கத்தோடு, ''நில் பார்க்கலாம்'' என்றாராம்.

நல்ல வேளையாக அந்தப் பக்கமாக எட்டிப் பார்த்த டாக்டர் என் மகனை அடையாளம் கண்டு, உள்ளே அனுமதிக்கும்படி காவல் துறையினரிடம் கூறினாராம். என் மகனை உள்ளே விட்ட காவல்

துறையினர், எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டும் என் மருமகனை அனுமதிக்க மறுத்து விட்டனராம். பிறகு அந்த இருட்டு வேளையில், கலவரம் நடந்து கொண்டிருந்த சூழ்நிலையில், எந்த வண்டியும் ஓடாத நிலையில், தெருவெல்லாம் பல இடங்களில் கல் எறியும், டயர்கள், போஸ்டர்களைப் போட்டு தீ வைப்பதும் நடந்து கொண்டிருந்த தெருக்கள் வழியாக சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலிருந்து அண்ணாநகர் மேற்கு வரை அடிபடாமல் தப்பி, நடந்தே போய்ச் சேர்ந்தாராம் என் மருமகன். அவர் வீடு சேரும் போது அதிகாலை நான்கு மணி இருக்குமாம்!

''அவர் உயிருடன்தான் இருக்கிறாராம். ஆனால் காயம் பட்டிருக்கிறார். என்னால் பார்க்க முடியவில்லை.'' இது காவல் அதிகாரி சொன்ன செய்தி. ''ஜவஹர் மருத்துவமனைக்குள் போய் இருப்பதால், செய்தி வரக்கூடும் பொறுமையாக இருங்கள்'' எனக் கூறினாராம். நிச்சயமாகச் செத்து விட்டார் என்ற கவலையில் மூழ்கியிருந்தவர்கள் இப்பொழுது ''உயிர் இருக்கிறதாம். ஆனால் எப்படியோ...?'' என்ற சந்தேக நிலைக்கு வந்து விட்டனராம்.

''அவருக்குக் கைகால்கள் இருக்கிறதா?'' ''முகம் இருக்கிறதா?'' என அவரவர்க்கு உள்ள சந்தேகக் கேள்விகளைக் கேட்டனராம். அவரோ பார்க்கவில்லை. என்ன பதிலைச் சொல்வார்? ''உயிர் இருக்கிறதாம். டாக்டர்கள் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள்'' என்று கூறினாராம்.

இதே நேரத்தில், மருத்துவமனையிலிருந்து தொழிற்சங்க அலுவலகத்திற்கு திரும்பிவிட்ட தோழர் அஜு தொலை பேசியில் வீட்டோடு தொடர்பு கொண்டிருக்கிறார். ''அவரை மருத்துவமனையில் சேர்த்து ரத்தம் ஏற்றிய பிறகு இப்பொழுதுதான் இங்கு வந்தேன். அவர் உயிருடன்தான் இருக்கிறார். வதந்தியைக் கேட்டுக் கலங்காதீர்கள். அவரது கைகால்கள் சேதம் அடையவில்லை. ஆனால் காயம்பட்டு இருக்கிறார். உங்களுக்குத்தான் தெய்வ பக்தி உண்டே ஜெபியுங்கள்'' என்று கூறி னாராம். ''என்னை ஆறுதல் படுத்தச் சொல்கிறீர்களா? அல்லது உண்மை தானா? சத்தியமாகச் சொல்லுங்கள்'' எனப் பலமுறை கேட்டு,அவரும் சத்தியமாக என்று சொன்ன பிறகுதான் தொலைபேசியை என் மனைவி கீழே வைத்தாராம்.

விடியற்காலை வரை இத்தகைய செய்திக் கணைகள் அழுகை கண்ணீர். எப்படியோ என் குடும்பத்தினர் என் சாவுக்காக முன்கூட்டியே

அழுது விட்டனர். ஓரிரவு துக்கத்தையும் அவர்கள் கடைப்பிடித்து முடித்து விட்டனர்.

காலையில் மருத்துவமனையிலிருந்து திரும்பிய என் மகனும் என் தம்பி மகனும், டிரைவர் விசுவநாதனும் வரிசையாக வந்து பார்த்த சங்கதிகளைக் கூறி ஒருவாறு அமைதிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் டாக்டர்கள், ''மூன்று நாட்களுக்குப் பிறகுதான் உங்கள் அப்பாவின் நிலை பற்றி திட்டவட்டமாகக் கூற முடியும். அவரது உடம்பு வேகமாக வீங்குகிறது. வெடி குண்டில் விஷம் கலந்திருக்கக் கூடும் எனக் கருதுகிறோம்.அதற்கும் தடுப்பு மருந்து கொடுத்துள்ளோம். உடம்புக்குள் உள் உறுப்புக்களில் ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்கிறதா? என்பதையும் ஸ்கேன் பண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதைய நிலையில் அவரை அசைக்க முடியாது. நாங்கள் முழுக் கவனம் செலுத்துகிறோம். ஆளுநர் இரவு நேரில் வந்து பார்த்து சகல மருத்துவ உதவிகளையும் செய்ய உத்தரவிட்டுள்ளார். நம்பிக்கையோடு இருங்கள்'' என்று கூறி என் மகனை அனுப்பி வைத்தார்களாம்.

மறுநாள் என் உடம்பு, தலை முதல் கால் வரை இரண்டு மடங்காக பலூன் மாதிரி ஊதிப் பெருத்து விட்டதாம். டாக்டர்கள் கலக்கமடைந்தது அவர்களது உரையாடலில் தெரிந்தது. மே 22 பலர் வந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. ஆனால் எங்கே என்ன நடக்கிறது எனத் தெரியவில்லை. ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தியும் எனக்குத் தெரியாது. கண்களில் எரிச்சல் தொடர்ந்தது. தெளிவாக எதுவும் தெரியவில்லை.

பொதுவாக அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சரிவரக் கவனிப்பது இல்லை என்ற பொதுவான கருத்து உண்டு. ஆனாலும் என்னை மிக அக்கறையுடன்தான் கவனித்தனர். எல்லாத் துறைகளையும் சார்ந்த பயிற்சி பெற்ற சிறந்த மருத்துவர்கள் பலரும் வந்து சிகிச்சை தந்தனர்.

பஞ்சு, துணி, மருந்து எனப் பல பற்றாக்குறைகள் இருந்தன. டாக்டர்கள், நர்சுகளின் மனக்குறைகளும் நிறைய உள்ளன.

மருத்துவமனையை வாட்டும் மூல நோயைத் தீர்க்க எல்லோரும் சேர்ந்து முயல வேண்டும்.



# மே 23

**மே** 23 காலையில்தான் என்னைச் சந்திக்க என் மனைவியை அனுமதித்தனர். அவள் அழுது, முகம் வீங்கியிருந்தது. எதிர் பார்த்தது தான். என்னைப் பார்த்தவுடன் தேம்பி அழுதவள், விடாமல் அழுதததால், அழுகையை நிறுத்துமாறு கடிந்தேன். அவள் தொண்டை விம்ம, ''ராஜீவ் காந்தியைப் பாவிகள் கொன்று விட்டார்கள்...!'' அவள் பேச்சும் முடியவில்லை. அழுகையும் நிற்கவில்லை. நானும் மௌனமானேன். குண்டு வெடித்த போது உணராத ஓர் ஈட்டி இப்பொழுது நெஞ்சில் பாய்ந்தது.


மே 23 காலையில் என்னை மருத்துவமனையில் பத்திரிகை நிருபர் துரைராஜ் பார்க்க வந்திருந்தார். சிரமப்பட்டு கண்களை விரித்துப் பார்க்க முயன்றேன். அவர் பக்கத்தில் குனிந்து, ''நான் ஒரு மோசமான செய்தியைச் சொல்லப் போகிறேன். நீங்கள் தைரியமாகக் கேட்க வேண்டும்'' என்ற பீடிகையுடன் தொடங்கினார். தொடங்கிய முறையிலிருந்தே ராஜீவ் காந்தி பற்றித்தான் என யூகித்தேன் மே 21, நடந்த விபத்தில் ராஜீவ் காந்தி அதே இடத்தில் கொல்லப்பட்டு விட்டார். பக்கத்திலிருந்து தப்பிய ஒரே ஆள் நீங்கள்தான்! அதே இடத்தில் மேலும் 18 பேர் கொல்லப்பட்டனர் .மேலும் பலர் காயம் அடைந்தனர். பங்கரமான சம்பவம். எப்படியோ நீங்கள் தப்பித்தது ஆச்சரியம்'' என்று கூறினார்.

முதலில் நெஞ்சை அழுத்திக் கொண்டேன். அழுகை பொங்கிற்று. ஆனால் நொடிப் பொழுதில் அழுகை, ஆத்திரமாக, ஆங்காரமாக,

வெறிபிடித்து என் உடம்பு நெருப்பாக எரிவது எனக்குத் தெரிந்தது. அந்தச் சண்டாளர்களைப் பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும் என்ற வெறி பொங்கிற்று.

வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, ''ராஜீவ் இருந்த இடத்தில் நான் இருந்து இறந்திருந்தாலும் பரவாயில்லை. அவர் என் மாதிரி காயம் பட்டு உயிர் தப்பி இருந்தால்... இந்திய வரலாற்றில் அது எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கும். அவரோ என்னைவிட வயதில் பல்லாண்டுகள் இளையவர். இளம் வயதிலேயே உலகின் அங்கீகாரம் பெற்ற அறிமுகமான தலைவர். ஆனால் என் சாவால் அத்தகைய பெரும் இழப்பு ஏற்பட வழி இல்லை.''

அரசியல் ரீதியில்தான் அந்த சோக சம்பவத்தையும் பரிசீலித்துக் கொண்டிருந்தேன். டாக்டர்கள் வந்ததால் பார்க்க வந்திருந்தவர்கள் வெளியேறிவிட்டனர்.



மருத்துவமனையில் தா.பா.வுடன் குடும்பத்தினர்



# சில நிமிடங்கள் கழித்து...

**ம**ருத்துவமனையில் கெடுபிடியான காவல் இருந்தது. இருந்தும் தன்னுடைய ஒலிப்பதிவு செய்யும் கருவிகளுடன் பி.பி.சி. நிருபர் என் படுக்கைக்கு அருகில் வந்து விட்டார். என் கட்டிலுக்கருகில் காலை மடக்கி உட்கார்ந்து கொண்டு, ''சிரமத்திற்கு மன்னிக்கவும். ஒரு சில கேள்விகள் தான். சில நொடிகள்தான். தயவு செய்து பதில் சொல்லுங்கள்'' என்று தொடங்கினார். டாக்டர்கள் வந்தால் துரத்துவார்கள் என்பதை அறிவேன். எனவே ''சரி சீக்கிரம்'' என்றேன்.

**பி.பி.சி. நிருபர்:** *ராஜீவ் காந்தியை யார் கொன்று இருக்கக் கூடும் என்று கூற முடியுமா?*

**பதில்:** யார் என்று நபரின் பெயரைக் கேட்டால் என்னால் கூற முடியாது. கொன்ற நபர் யார் எனத் தெரியாது.

**நிருபர்:** *கொலையைப் பற்றி என்னதான் நினைக்கிறீர்கள்?*

**பதில்:** இது சதி செய்து நடத்தப்பட்ட அரசியல் படுகொலை.

**நிருபர்:** *யார் அந்தச் சதியைச் செய்து நிறைவேற்றி இருக்கலாம் என நினைக்கிறீர்கள்?*

**பதில்:** அமெரிக்காவின் மத்திய உளவு இலாகா இதற்குத் திட்டம் தீட்டியிருக்கும். ஆனால் எல்.டி.டி.ஈ.யை வைத்து,அதன் மூலம்தான் நிறைவேற்றி இருக்கும் என்று நினைக்கிறேன்.

**நிருபர்:** *எல்.டி.டி.ஈ. இதில் சம்பந்தப்பட்டிருக்கும் என்று நம்புகிறீர்களா?*

**பதில்:** சந்தேகத்திற்கு இடமில்லை. இதை எல்.டி.டி.ஈ. தான் செய்திருக்கும். இத்தகைய முட்டாள்தனமான கொலைகளை அவர்கள் தான் செய்வார்கள் அக்கூட்டம் கூலிக்காகவும் கொல்லும். சொந்த சகோதரனையும் கொல்லும். பரம எதிரியுடனும் கூட்டுச் சேர்ந்து, தாயைக் கொல்லவும் கூசாத பேய்க் கூட்டம் அது.

**நிருபர்:** *அக்கட்சிதான் என்று எப்படி அடித்துக் கூறுகிறீர்கள்?*

**பதில்:** நீதிமன்ற சாட்சிகளை வைத்து இதை நிரூபிப்பது கஷ்டம். ஆனால் அவர்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்த கொலைகளின் உச்சகட்டம்தான் இது. அவர்களது நடவடிக்கையை வைத்து அவர்கள்தான் கொன்றிருக்க வேண்டும் என்கிறேன்.

**நிருபர்:** *தி.மு.க.வுக்கும் இந்தக் கொலைக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?*

**பதில்:** ஆம் உண்டு. சதித்திட்டத்தில் தி.மு.க. பங்கேற்று இருக்காது. குண்டு தயாரிப்பிலும் பங்கேற்று இருக்காது. கொலையிலும் நேரில் தலையிட்டு இருக்காது. ஆனால் இந்தக் கொலை நடைபெறுவதற்கான சூழ்நிலை தமிழ் நாட்டில் ஏற்படவும், கொலைகாரர்கள் தமிழ்நாட்டில் நடமாடவும் வழி வகை செய்த அரசியல் குற்றவாளி தி.மு.க.

**நிருபர்:** *தமிழ் நாட்டில் தி.மு.க.தான் இந்தக் கொலைக்குக் காரணம் எனப் பரவலாக மக்கள் பேசுகிறார்களே!*

**பதில்:** கொலைகாரக் கும்பலுக்கு தி.மு.க. காட்டி வந்த அனுதாபம், கொடுத்து வரும் ஆதரவு தமிழ் மக்களுக்குத் தெரியும். எனவே, சந்தேகப்படுவது இயற்கையே...

டாக்டர்கள் நுழைந்ததால், நிருபர் சொல்லிக் கொள்ளாமல் நழுவி விட்டார். இந்தப் பேட்டி மறுநாளே பி.பி.சி.யில் ஒலிபரப்பானது என நண்பர்கள் சிலர் வந்து கூறினர். ராஜீவ் காந்தியின் படுகொலை நடந்த மறுநாள் தோழர் எஸ்.ஏ டாங்கே காலமாகி விட்ட துக்கச் செய்தியும் வந்தது. வாக்குப் பதிவு செய்யும் நாள் தள்ளி வைக்கப்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்ல முடியவில்லை. தேர்தல் பிரச்சாரத்திற்காக நான்கு நிமிடங்கள் ஓடும்

அளவில் ஒரு வேண்டுகோளை நாடாவில் ஒலிப்பதிவு செய்து அதை தொகுதி முழுவதும் விநியோகிக்கச் சொல்லியிருந்தேன்.

அந்தப் பேச்சிலும், தி.மு.க.வை ராஜீவ் காந்தியைக் கொன்ற குற்றவாளிகள் என்றோ, சதியில் பங்கெடுத்தவர்கள் என்றோ நான் குற்றம் சாட்டவில்லை. ''அவர்களது ஆட்சிக்காலத்தின் போது கொலைகாரர் களைத் தமிழ்நாட்டில் பதுங்கி இருக்கவும், நடமாடவும் விட்டதன் விளைவுதான், அந்த வகையில் செய்த அரசியல் பிழைதான் ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணம்'' என்று குற்றம் சாட்டினேன். அன்றும் நான் அவசரப்பட்டு கொலைகாரர்கள் என்று குற்றம் சாட்டவில்லை. இன்றும் அவர்களை அரசியல் குற்றவாளிகள் என்று நான் சுமத்திய குற்றச்சாட்டில் இருந்து மாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை.

எல்.டி.டி.ஈ மீது தி.மு.க கொண்டிருந்த தவறான அணுகுமுறையும், மதிப்பீடும், உறவும்தான் அவர்களது ஆட்சியில் இருந்த போது எல்.டி.டி.ஈ.யைச் சேர்ந்தவர்கள் காவல் துறையினரைக் கொன்ற போதும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏராளமான திருட்டுக்களில் ஈடுபட்ட போதும் நடவடிக்கை எடுக்கவில்லை. தேசவிரோதப் பிரச்சாரம் செய்த போதும் தடுக்கவில்லை. பெட்ரோல், மருந்து, ஆயுதக் கருவிகள் கடத்தப் பட்டதையும் தடுக்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக சென்னை மாநகரத்தில் பத்மநாபாவும் அவருடன் இருந்த 13 பேரும் கொல்லப்பட்ட போது எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தின் போது எல்.டி.டி.ஈ எனும் கொலைகார - கொள்ளைக் கும்பலுக்கு தமிழ்நாட்டில் ஓர் அந்தஸ்தும் சுதந்திரமும் இருந்தது. ஆனால் அவர்களைப் பிடித்து ஒடுக்க வேண்டிய காவல் துறையினருக்கு வாய் மூலம் அரசியல் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தது.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது மத்திய அரசு அவரிடம் சொன்ன ஒரு ரகசியத் தகவலை எல்.டி.டி.ஈ.க்கு தெரிவித்து விட்டார் என்றும் குற்றம் சாட்டி அன்று பிரதமராக இருந்த சந்திரசேகர் கருணாநிதி ஆட்சியை டிஸ்மிஸ் செய்ததையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது இலங்கையில் இருந்து திரும்பிய இந்திய அமைதிக் காப்பு படையை வரவேற்க மறுத்ததுடன் ''அது தமிழர்களைக் கொன்ற இரத்தக் கறையுடன் வந்திருக்கிறது'' என்று குற்றம் சாட்டினார் என்பதையும் மறந்து விட முடியாது. 1995 இறுதிவரை நான் கூறிய இதே குற்றச்சாட்டுகளை ப.சிதம்பரம் பேசி வந்தார். ஆனால் 1997-ல்

நாடாளுமன்றத்திலும் ஜெயின் கமிஷன் முன்னாலும் தி.மு.க.வை ஒரு நிரபராதிக் கட்சி என வாதாடி அவரது வக்கீல் திறமையைக் காட்டி யிருக்கிறார். இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால் 1984 முதல் 1988 வரை ராஜீவ் காந்தியின் பாதுகாப்பிற்கு பொறுப்புள்ள அமைச்சராக இருந்தவர்தான் சிதம்பரம்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின் அவர் கொல்லப்பட்டதன் பின்னணியை விசாரிக்கச் செய்யவும் அது பற்றி அறிக்கை தரவும் நரசிம்மராவ் இவரிடம்தான் பொறுப்பை ஒப்படைத்திருந்தார் என்பதையும் நாடறியும். அது அங்குலம் கூட முன்னேறாமல் இருக்கிறதே என்ற கவலையையும் சோனியா காந்தி பகிரங்கமாக அறிவித்த போது துரிதமாக விசாரித்துக் கொண்டிருப்பதாக பதில் சொன்னவரும் இதே சிதம்பரம்தான்.

கருணாநிதி போன்றவர்களைத் தொடக்கத்திலிருந்து அவர்கள் கொண்ட கொள்கைகள், சார்ந்திருந்த கட்சிகள், முன்வைத்த கோரிக்கைகள், நடத்திய போராட்டங்கள், எழுதிய எழுத்துகள், பேசிய பேச்சுகள், மாறி மாறி வைத்த உறவுகள் ஆகிய அனைத்தையும் வைத்து அவரைப் பற்றிய ஒரு திட்டவட்டமான கருத்தைக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் தேசியவாதிகளாக தேசியக் காங்கிரஸ் கட்சியிலிருந்த பல காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ராஜீவ் காந்தி இருந்த போதும், பின்னர் கொல்லப்பட்ட பின்னரும் அவர்கள் தெரிவித்த கருத்துகள், அவரது கொலை பற்றிக் காட்டிய அக்கறை, காட்டப்பட்ட அனுதாபம் ஆகியவற்றை வைத்துப் பார்க்கிற பொழுது எனக்கு மிகுந்த ஆச்சரியமும் கவலையும் ஏற்பட்டது. பலரது போலித்தனத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் தேசிய காங்கிரஸ் கட்சியில் இருக்கிற காரணத்தாலேயே அவர்களுக்கு தேசபக்தர்கள் என்ற பட்டத்தைச் சூட்டுவது மிகப் பெரும் தவறாகும். அந்த இயக்கத்திற்கு தேசபக்த பாரம்பரியமும் சுதந்திரப் போராட்ட வரலாறும் உண்டு. ஆனால், அந்த இயக்கத்திற்குள் லாபம் கருதி. ஆதாயம் தேடி அரசியல் வியாபாரிகள் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நடைமுறை உண்மையாகும்.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின் மருத்துவ மனையில் என்னையும், காயம்பட்டிருந்த வேறு சிலரையும் வந்து சந்தித்து நடந்த படுகொலையைப் பற்றி அக்கறையுடன் விசாரித்து ராஜீவ் காந்தி கொல்லப் பட்டதற்காக பலர் கண்ணீர் வடித்து விட்டுப் போவதை நாள் தோறும் சந்தித்துக் கொண்டிருந்தேன்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு உடனடிக் காரணம் என்ன என்று படுத்தவாறு சிந்தித்துக் கொண்டேயிருந்தேன். ஏனெனில் 1991-ல் நடைபெற்ற தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறும் வாய்ப்பு இருப்பதாக எந்தப் பத்திரிகையும் எழுதவில்லை.

எனவே ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராகி படை கொண்டு தாக்கப் போகிறார் என எல்.டி.டி.ஈ நினைக்கத் தேவையில்லை. அடுத்து தேர்தலுக்கு சில வாரங்கள் முன்பாக எல்.டி.டி.ஈ.யைச் சேர்ந்தவர்கள் அல்லது அக் குழுவின் நண்பர்கள் ராஜீவ் காந்தியை சந்தித்த போது அவர் அவர்களிடம் பரிவுடனே நடந்து கொண்டதாகத் தெரிகிறது. எனவே எரிச்சலூட்டக் கூடிய சம்பவம் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

ராஜீவ் காந்தியுடன் பலமுறை இலங்கைத் தமிழர்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக எல்.டி.டி.ஈ பற்றியும் நான் பேசியிருக்கிறேன். 1990 ல் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தமிழ் நாட்டில் பயங்கர வாதம் வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டி நான் பேசினேன். அவ்வாறு பேசும் போது, ''இதே நிலை தொடர்ந்தால் பயங்கர அரசியல் படுகொலைகள் தமிழகத்தில் நடக்கும். அத்தகைய பெரிய பலியைக் கொடுத்த பிறகுதான் டெல்லி இதை உணரும் போல இருக்கிறது'' என்று எச்சரித்துப் பேசினேன்.

அன்றைய பிரதமர் வி.பி.சிங், ''தமிழகத்தில் நடந்து வருவதை எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் சேதங்கள் ஏற்படாமல் முன் கூட்டியே தடுப்போம்'' என்று பேசினார்.

அன்று மாலை ராஜீவ் காந்தியை சந்தித்து நான் எல்.டி.டி.ஈ. பற்றிப் பேசியதையும் அதற்கு வி.பி.சிங் சொன்ன பதில் குறித்தும் பேசினோம். ராஜீவ் காந்திக்கு எல்.டி.டி.ஈ. மீது எந்த வகையான வெறுப்பும் இருந்ததில்லை. எனக்கிருந்த அளவிற்குக்கூட அவருக்கு அவர்கள் மீது கோபமும் இல்லை. ''எதார்த்தம் அறியாத மூர்க்கத்தனமான நல்ல இளைஞர்கள்'' என்று மட்டும் வர்ணிப்பது உண்டு. ''யார் பேச்சையும் கேட்க மாட்டார்கள் போல் இருக்கிறதே'' என்று வருத்தப்படுவார்.

ஒருமுறை கூட எல்.டி.டி.ஈ. பற்றி எரிச்சலுடன் அல்லது ஆத்திரத்துடன் அவர் பேச நான் கண்டதே இல்லை. இலங்கைத் தமிழ் மக்கள் மீதும் அவருக்கு அளவற்ற அனுதாபம் இருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் போய்விட்டது குறித்து வருத்தப்படுவது வழக்கம். ''அவர்களே ஒரு முடிவுக்கு வரட்டும்'' என்பதை மட்டும் திரும்பத் திரும்பச்

சொல்லிக் கொண்டிருந்தார். எனவே இவ்வளவு அன்பும் அனுதாபமும் காட்டிய ஒரு நண்பரையே எல்.டி.டி.ஈ.யினர் கொன்று விட்டார்களே என்பதால் எனது கோபம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

1983 முதல் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு உதவ வேண்டும் என வற்புறுத்தி தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் பல வகையான போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். இரண்டு முறை ஒரு சக்கரம் கூட சுழலாத முறையில் முழுக் கடையடைப்பையும் நடத்திக் காட்டியிருக் கிறோம். அவதிப்படும் ஈழத் தமிழனுக்கு சரியாக மத்திய அரசு உதவவில்லை என்று மத்திய அரசு மீது குற்றம் சாட்டினோம்.

சீக்கியனுக்காக மத்திய மந்திரி லண்டனுக்கும், அமெரிக்காவுக்கும் பறப்பார். ஆனால் தமிழனுக்காக டெல்லி மந்திரி இலங்கைப் பக்கம் திரும்பவும் மாட்டார் எனக் குத்திப் பேசியதும் உண்டு. இந்நிலையில்தான் அகதிகளாக இந்தியாவில் வந்து தஞ்சமடைந்த ஈழத் தமிழர்களுக்கு இந்திரா காந்தி ஆட்சியின் போது பல வகை உதவிகளைச் செய்தார்கள்.

அத்தகைய உதவிகளை அதிகம் பெற்றதில் மிகவும் பலன் பெற்றது எல்.டி.டி.ஈ. எனவே இந்த நன்றியை மறந்து ராஜீவ் காந்தியைக் கொன்றிருப்பார்களா? என்றும் எனக்குள் வாதாடிக் கொண்டேன். பின்னர் எம்.ஜி.ஆர். முதல்வராக ஆனவுடன் இங்கிருந்த குழுக்கள் திரும்புகிற போது நான்கு கோடி ரூபாயை எம்.ஜி.ஆர் நன்கொடையாகக் கொடுத்தனுப்பியதையும் உலகறியும். அவ்வாறு பெற்ற நன்கொடையைக் கொண்டே துப்பாக்கிகளும் குண்டுகளும் வாங்கித் தமிழ் மண்ணை ரத்தக்கறை படியச் செய்திருப்பார்களா? அவ்வாறு நினைக்கவும் செய்யவும் மனித இதயம் இடம் கொடுக்குமா? என்றும் வாதிட்டுக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு உணவுக்கே தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் படகுகள் மூலம் உணவுப் பொருட்களை ராஜீவ் காந்தி அனுப்பினார். அதைக் கரை சேரவிடாமல் இலங்கை அரசு தடுத்தது. இதைக் கண்டு வெகுண்ட ராஜீவ் காந்தி ராணுவ விமானங்கள் மூலமே இலங்கைக்குச் சென்று உணவுப் பொருட்களைப் போட வைத்தார்.

இதை நான் ஓர் இந்தியன் என்று கண்ணை மூடிக் கொண்டு தேச பக்தி என்ற பெயரால் நியாயப் படுத்தலாம் என்று இருந்தாலன்றி இதை நியாயப்படுத்துவது சிரமம். சர்வதேச சட்டப்படி நடுநிலையாளர் யாரைக் கேட்டாலும் கூசாமல் தயங்காமல் இதைப் பச்சையான ஆக்கிரமிப்பு என்று தான் கண்டிப்பார்கள். உலகமே ராஜீவ் காந்தியைக் கண்டித்தது. தமிழ் நாட்டு மக்களாகிய நாம் மட்டும்தான் பாராட்டினோம்.

உதாரணமாக காஷ்மீரில் உள்ள இஸ்லாமிய மக்களுக்கு சவுதி அரேபியா நாட்டு விமானமோ அல்லது பாகிஸ்தான் நாட்டு விமானமோ பறந்து வந்து காஷ்மீரில் உணவுப் பொட்டலங்களைப் போட்டால் இந்தியா பார்த்துக் கொண்டிருக்குமா? நாம் சிரித்து, வரவேற்று இருப்போமா? இலங்கை போன்ற ஒரு சிறிய தீவு என்பதால் இந்தியா போன்ற வலிமை மிக்க நாடு இலங்கையின் ஒரு பகுதியையும் இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதி ஈழத் தமிழர்களையும் இந்தியத் தமிழர்களாகவே கருதி உதவி என்ற பெயரால் சர்வதேசச் சட்ட மீறுதலைச் செய்தது. தமிழர்கட்காக சட்ட மீறுதல் செய்து நமக்காகப் பழி ஏற்றவர் ராஜீவ் காந்தி.

''பஞ்சசீலக் கொள்கைகளை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவரான நேருவின் பேரன் அதற்குத் தீயிட்டு விட்டான்'' என்றும் சிலர் கண்டித்தனர். வேறு சிலர், ''சீனாவுக்குள்ளே போய் உன் விமானம் பருப்பை போட்டு விட்டுத் திரும்பியிருக்குமா?'' என்றும் கிண்டலாகப் பேசினார்கள். இதே தமிழகத்தைச் சேர்ந்த கருணாநிதி, ''ராஜீவ் காந்தி பலசரக்குக் கடை பொட்டலங்களைத்தானே போட்டார், என்ன குண்டா போட்டுவிட்டார்?'' என நக்கலான ஓர் அறிக்கையை விட்டார் (இப்பொழுது அவதிப்படும் ஈழத் தமிழர்களுக்கு பருப்பைப் போடவும் ஆளைக் காணோம். விமானத்தை பறக்க விடவும் ஆட்சியைக் காணோம். ஆனால் தமிழர் நாடகம் தொடர்கிறது).

ஈழத் தமிழர்களுக்காக அனுதாபம் கொண்டு விமானத்தின் மூலம் உணவுப்பொட்டலம் போட்டதை உலக நாடுகள் பலவும் கடுமையாகக் கண்டித்தன. அந்தப் பழியையும் ராஜீவ் காந்தி ஏற்றுக் கொண்டார். பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவாயிற்று. அப்பொழுதும், ''இந்தியா தன் வலிமையைக் காட்டி மிரட்டி சின்னஞ்சிறு தீவான இலங்கையை ஏறத்தாழ ஓர் அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட வைத்துவிட்டது'' என்று பல நாடுகள் விமர்சித்தன.

இலங்கையின் முக்கிய மந்திரிகள் பலர் கையெழுத்திடும் நிகழ்ச்சியின் போது வெளிநடப்பே செய்தனர். கையெழுத்து முடிந்து இந்தியாவுக்குத் திரும்ப இருந்த ராஜீவ் காந்திக்கு வழியனுப்பி வைக்க அணிவகுப்பு மரியாதை நடந்தபோது ஒரு சிங்கள வீரன் ஆத்திரத்தில் துப்பாக்கியின் கட்டையால் ராஜீவ் காந்தியை மண்டையில் அடித்துக் கொல்ல முயன்றான். ராஜீவ் இளைஞராக இருந்ததால் சுறுசுறுப்புடன் நகர்ந்து தப்பி விட்டார். இந்த ஒரு நிகழ்ச்சி சிங்களர்களின் ஆத்திரத்தைக் காட்டப் போதுமானது.

அந்த ஒப்பந்தத்தால் இதுவரை இலங்கைத் தமிழர்களுக்கு இல்லாதிருந்த சில உரிமைகள் கிடைத்தன. மேலும் சில உரிமைகள் கிடைக்க வழி வகுத்தது. உடனே கிடைத்து விட வேண்டுமென எல்.டி.டி.ஈ. தலைமை கருத்தை வெளியிட்டது. பின்னர் நடந்த தேர்தலைப் புறக்கணித்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியுடன் ஒத்துழைக்க மறுத்தது. அந்த ஆட்சியைக் கலைக்கவும் சிங்கள அரசுடன் ரகசிய உடன்பாடு செய்து அவர்களிடமிருந்து ஆயுத உதவிகளைப் பெற்று இந்திய அமைதிக் காப்புப் படையைத் தாக்கத் தொடங்கியது. எனவே பரம வைரியுடனும் சேர்ந்து கொண்டு சொந்தச் சகோதரர்களையே கொல்வதற்கு கூசாதவர்கள்.

இவர்களால் கொல்லப்பட்ட தமிழ் போராளிக் குழுக்களின் தலைவர்கள் சிறீ சபாரத்தினம், முகுந்தன், அமிர்தலிங்கம், பத்மனாபா என்று பட்டியல் நீளமானது. பல்கலைக்கழக துணை வேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர், இதர அரசியல் வாதிகள் என இவர்களால் கொல்லப்பட்ட பட்டியலும் நீளமானது. சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்ட தமிழர்களை விட இந்த வெறிக் கும்பலால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகும்.

செய்ந்நன்றி மறந்த இந்தக் கொலைகாரக் கும்பல்தான் ராஜீவ் காந்தியை கொன்றிருக்க வேண்டும் என்றே நான் உறுதியாக நம்புகிறேன். இவர்களை அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனம் தூண்டி விட்டிருக்கும் என்றும் சந்தேகப்படுகிறேன். அன்றும் இன்றும் என் கருத்து ஒன்றேதான். ஆனால் 1991 முதல் 1996 வரை ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொண்ட விதத்தையும் எடுத்த சில நடவடிக்கைகளையும் எழுத வேண்டியது மிக முக்கியக் கடமை என்று கருதுகிறேன்.



**ரஷ்ய பத்திரிகை நிருபருக்கு தா.பா. பேட்டியளிக்கிறார்**



# 1991 முதல்

**நா**டாளுமன்றத்திற்குள் விசுவாசப் பிரமாணம் எடுக்க நான் சென்ற போது அரை குறையாகத்தான் தேறியிருந்தேன். ஊன்றி நடக்கத் தடியும், வெந்து போனதால் பாதிப் பகுதி முளைக்காத முடியுடனும், கருகிப் போன கன்னங்களுடனும், வலது காலை நொண்டி இழுத்துக் கொண்டுதான் உள்ளே சென்றேன். என் உடல் நிலை இருந்த நிலையில் விசுவாசப் பிரமாணம் எடுப்பதையே தள்ளிப் போட்டிருக்கலாம். ஆனால் ஏதோ ஓர் ஆங்காரம் என் பிடரியைப் பிடித்து தள்ளிக் கொண்டிருந்தது.

தடியை ஊன்றிக் கொண்டே மரபுப்படி விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்ட பின் நான்கு படிகளில் ஏறி அவைத் தலைவரை வணங்கி விட்டு வலது பக்கமாக நான்கு படிகள் இறங்கி எதிர்க்கட்சித் தலைவருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு சபாநாயகருக்குக் கீழாக அமர்ந்துள்ள நாடாளு மன்றச் செயலாளரிடம் தேர்தல் ஆணையம் தந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தற்கான சான்றிதழைச் சமர்ப்பித்து விட்டு கையெழுத்துப் போட முடியவில்லை. கைரேகைதான் வைத்தேன்.

1991-ல் கையெழுத்துப் போடாமல் கைரேகை வைத்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்திருக்கிறார் என வருங்காலத்தில் ஆராய்ச்சியாளர் யாராவது ஒருவர் பார்த்து விட்டு சிரிக்கக் கூடும். நான் முதலில் நரசிம்மராவிற்கு வணக்கம் சொல்லிவிட்டு சிரமப்பட்டு படியில் ஏறிய போது அவர் ஏறிட்டும் பார்க்காமல் எதையோ படித்துக் கொண்டிருந்தார். நரசிம்மராவின் இத்தகைய செயலைப் பல உறுப்பினர்கள் அன்றைக்கே கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள்.

இதற்கு நேர் மாறாக வாஜ்பாய் நான் தள்ளாடி இறங்குகிற பொழுது, பார்த்து இறங்கு என்பதைப் போல இந்தியில் ஏதோ சொல்லிக் கொண்டு விழப்போகிற எனக்கு உதவுவது மாதிரி தனது கையையும் நீட்டினார். இது முடிந்து லாபிக்கு நான் வந்த போது, என் கரங்களைப் பிடித்துக் கொண்டு பொதேதர் எதுவும் பேசாமல் கண்ணீர் வடித்தார்.

''நீ எந்த நாட்டிற்குப் போய் வைத்தியம் செய்து கொள்ள விரும்பினாலும் உன்னை அனுப்பி வைக்கிறேன்'' என்றும் கூறினார். ''இங்கு வந்து அலைய வேண்டாம். ஓய்வு எடு'' என்றும் சொன்னார். தேர்தல் முடிந்து சென்னையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நாட்களிலேயே என்னை அண்ணாநகர் வீட்டிலேயே வந்து பார்த்தார் பொதேதர். அன்று திருபெரும்புதூரில் நடந்த பயங்கரச் சம்பவத்தை நான் விளக்கிய போதும் தாங்க முடியாமல் அழுதவர் பொதேதர். நேருவின் குடும்பத்தின் மீது அவருக்கு பற்று என்பதை விட அவரையும் நேரு குடும்பத்தில் ஒருவர் என்றுதான் கூறவேண்டும்.

அதேபோல் ராஜேஷ் பைலட்டும் மிகுந்தஅக்கறையுடன் நடந்த சம்பவம் பற்றி விசாரித்தார். அவரும் மனம் வருந்தி கண்ணீர் விட்டதைக் கண்டேன். காலஞ்சென்ற கல்பனாத் ராய் கவலையோடு, கதறவும் செய்தார் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்பதிலும் அதிதீவிர கவனம் செலுத்தினார். அடிக்கடி வழக்கு பற்றி விசாரிப்பதும் வழக்கம்.

இதற்கு மாறாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. வாஜ்பேய் லாபிக்கு வந்து, என்னருகில் அமர்ந்து, விபத்து நடந்த விதத்தை விளக்கக் கேட்டார். பெருமூச்சு விட்டார். ''நம் நாட்டுத்தலைவர் ஒருவரை இன்னொரு நாட்டுக்காரன் கொன்றதை நாம் லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ராஜீவ், இளைஞர்! அவர் கொல்லப்பட்டது அநியாயம்! அவரது குழந்தைகள் பாவம்! நினைத்தால் வேதனையாக இருக்கிறது. இந்த விபத்தில் கடவுள் உன்னைக் காப்பாற்றி இருக்கிறார். நீ ஏதோ செய்ய வேண்டுமென கடவுள் உன்னை விட்டு வைத்திருக்கிறார்! விரைவில் குணமடையக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்றார் அவர்.

மீண்டும் திரும்பி குவாலியர் ராஜமாதாவுடன் வந்தார். என்னைப் பற்றி அவரிடம் ஏதோ சொல்வது தெரிந்தது. ராஜமாதாவை நான் பார்த்திருக்கிறேன். பேசிப் பழக்கம் இல்லை. அந்த மாதா என் தலையில் கையை வைத்து கடவுளிடம் ஏதோ ஜெபம் செய்தார் விரைவில் குணமடைய வாழ்த்தி விட்டுப் போனார்.

இதற்கு நேர் மாறாக என்னுடன் பழகிய பல காங்கிரஸ் கட்சி நண்பர்கள், அடுத்த மந்திரி சபையில் இடம் பிடிப்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தது திருபெரும்புதூர் வேட்டு விபத்தை விட பெரும் விபத்தாக எனக்குப் பட்டது. என்ன செய்ய!

அதனால்தான் ஐந்தாண்டுகள் பதவியில் இருந்தும், ராஜீவ் கொலை பற்றி உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதன்பின்னர் சோனியா காந்தியைச் சந்தித்து ஆறுதல் கூறப் போனேன். அவரைச் சந்தித்த போது வார்த்தைகள் வராமல் அமைதியாகச் சாய்ந்து விட்டேன். பிரியங்கா கண்ணீர் வடிப்பதை அன்று மட்டும்தான் கண்டேன்.

இதே பிரியங்கா, முகமது சயீது மகள் கடத்திச் செல்லப்பட்ட அன்றைக்கு ராஜீவ் காந்தியிடம், ''என்னைக் கடத்திக் கொண்டு போனால் அதற்காக அழ வேண்டாம். யாரையும் மன்னித்து விடுவிக்க வேண்டாம். நானே போராடி வருவேன் அல்லது சாவேன்'' எனப் பேசிய போது, உயர்நிலைப்பள்ளி மாணவியின் துடிப்பான பேச்சு என்று மட்டும்தான் நினைத்தேன். பின்னர், பல சந்தர்ப்பங்களில் அந்தப் பெண்ணின் துணிவைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இன்றைக்கோ, கண்ணீர் விட்டார்! நான் ஆறுதல் கூற வந்தவன், ஆறுதல் தேடி நின்றேன். நெடுநேரம் கழித்து சோனியா நடந்த விவரத்தைக் கேட்டார் குண்டு வெடித்தது வரை கூறிவிட்டு, பின்னர் அடிபட்டு விட்டதால்... என்று முடித்துவிட்டேன்.

அந்த முகத்தில் தேங்கியிருந்த சோகம் ராஜீவின் மீது அவர் கொண்டிருந்த பாசத்தைக் கொட்டிக் காட்டிற்று!

'கணவரை இழந்தோர்க்கு காட்டுவது இல்' என்ற சிலம்பின் அறிவுரை நினைவுக்கு வந்தது.

இப்பொழுது துணிந்து களத்தில் நிற்பதைக் காணும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.



# தோழமைக் கட்சிகளின் கூட்டம்

**ரா**ஜீவ் காந்தி உயிருடன் இருந்தபோது தோழமைக் கட்சிகளான அ.தி.மு.க., ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய மாநாடு, கேரள காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டத்தை அடிக்கடி நடத்துவது உண்டு. அத்தகைய கூட்டங்கள் சிலவற்றில் நரசிம்ம ராவும் பங்கெடுத்தது உண்டு. எனவே அதை நினைவூட்டி நரசிம்மராவிற்கு ஒரு கடிதம் எழுதி அத்தகைய கூட்டத்தை அவரும் நடத்த வேண்டும் என்று எழுதினேன். அத்துடன் திருபெரும்புதூரில் நடந்த சம்பவம் பற்றி அவரைச் சந்தித்து நேரில் பேச விரும்புவதால், நேரம் குறிப்பிடும்படியும் கேட்டு எழுதியிருந்தேன். இரண்டு கடிதங்களுக்கும் நெடு நாட்களாகியும் எந்த பதிலும் வரவில்லை.

மீண்டும் நினைவூட்டல் கடிதம் எழுதி அதில், ''பாதிக்கப்பட்டவன் என்ற முறையில் சன்மானம் கேட்டோ சலுகையை நாடியோ நான் வர விரும்பவில்லை. சம்பவத்தின் அரசியல் பின்னணியைத் தெரிவிக்க காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இந்தியாவின் பிரதமராகவும் நீங்கள் இருப்பதால் உங்களைச் சந்திக்க வேண்டியது அவசியம் எனக் கருதுகிறேன்'' என்று எழுதினேன். அதற்கும் பதிலில்லை. கடிதம் கிடைத்தது என்ற வழக்கமான செயலாளரின் குறிப்பு மட்டும் வந்து சேர்ந்தது.

இதற்கிடையில் ராஜீவ் காந்தியின் வழக்கு சம்பந்தமாகவும், விசாரணை சம்பந்தமாகவும் இருந்த ஒரு முக்கியக் கோப்பு பிரதமரின் அலுவலகத்திலிருந்து காணாமல் போய்விட்டதாக ஒரு செய்தி

நாடாளுமன்றத்திற்குள் சூறாவளி போல் சுழன்றது. நான் ராஜேஷ் பைலட்டை சந்தித்துக் கேட்ட போது, ''ஆமாம் வெட்கக்கேடு. வெளியில் சொன்னால் அவமானம். நமக்குள்ளேயே திருடர்கள் இருக்கிறார்கள். தேடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதன்பிறகு அன்றைய அமைச்சராக இருந்த சிதம்பரத்திடம் கோப்பு காணாமல் போனதைப் பற்றிக் கேட்டேன். அவர் நின்று அக்கறையோடு பதில் சொல்லவும் இல்லை. பதிலும் முழு மழுப்பலாக இருந்தது. நரசிம்ம ராவையோ சந்தித்துப் பேசவே முடியவில்லை.

மீண்டும், மீண்டும் கடிதமெழுதி பதில் வராவிட்டாலும் நான் விடுவதாக இல்லை. 1994-ல் அவரை வீட்டிலேயே போய்ச் சந்தித்தேன். நான் பேசத் தொடங்கிய போதுதான் கேபினெட் கூட்டத்திற்கு செல்ல வேண்டியிருப்பதாகச் சொன்னார். எனவே இன்றைக்கும் பேச்சைத் தவிர்க்க விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்டு திருபெரும்புதூர் நிகழ்ச்சி பற்றி நான் எழுதிய நீண்ட கடிதத்தை அவரிடம் கொடுத்தேன்.

கொடுக்கும் போது, ''திருபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக'' என்று வாயைத் திறந்தேன். உடனடியாக நரசிம்மராவ், ''அது மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்தது. அதற்கு இப்பொழுதென்ன?'' என்று கேட்டார். அந்தப் பதிலில் தொனித்த குரலில் மனிதாபிமானமற்ற அதிகார வர்க்க வாசனை வீசிற்று. நான் பதில் கூற விரும்பாமல், ''கடிதத்தில் எழுதி இருக்கிறேன், படித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி வந்து விட்டேன்.

இது குறித்து நான் ஜி.கே.மூப்பனாரிடமும், வாழப்பாடி ராம மூர்த்தியிடமும் சொன்னேன். மூப்பனார் வாயில் எதையோ மென்று கொண்டே இருந்தார். பதிலேதும் சொல்லவில்லை. பிறகு ஒரு நாள் ''அதிர்ச்சி அடையாதீர்கள். இந்தக் கட்சியில் இப்படித்தான் நடந்து கொள்வார்கள்'' என்று சொன்னார். வாழப்பாடி ராமமூர்த்தியோ என்னை விட ஆத்திரத்துடன் ''காங்கிரஸ் கட்சியை நாசமாக்குவதற்கே இப்படிச் சிலர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். எனக்கு விதியில் நம்பிக்கையில்லை. ஆனால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின் இவர் பிரதமராக ஆக்கப்பட்ட வேகம், நடந்து கொண்டிருக்கிற காரியங்கள் ஆகியவற்றைப் பார்க்கும் போது விதி, யோகம் என்பதையெல்லாம் நம்ப வேண்டும் போல இருக்கிறது. எப்படியோ விதி நம்மை ஆட்டுகிறது'' என்று கூறிவிட்டுக் கிளம்பினார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற 6 மாதங்களுக்குப் பிறகு தமிழ்நாடு காவல் துறையில் உயரதிகாரி ஒருவர் என் கடிதம் பிரதமர் மூலம் அவருக்கு

கிடைத்ததாகவும் அதற்காக எனக்குப் பதில் எழுதுவதாகவும் குறிப்பிட்டு திருபெரும்புதூர் விபத்தில் காயமடைந்த காவல் துறையினருக்கு நிதியுதவியும் பதவி உயர்வும் சட்டப்படி வழங்கப்பட்டு விட்டதாக எனக்கு எழுதியிருந்தார்.

நான் மிகவும் நொந்து போனேன். நான் நரசிம்மராவிற்கு எழுதியது நாம் அரசியல் ரீதியில் விவாதித்து அரசியல் முடிவு சிலவற்றை எடுக்க வற்புறுத்தியிருந்தேன். ஆனால் அதை சரிவரப் படிக்காமல் ஒரு கோரிக்கை மனுவாகக் கருதி காயம் பட்டவர்களுக்கு டிஞ்ச்சர் தடவப்பட்டதா, கட்டுப் போடப்பட்டதா என சம்பவம் நடந்த மூன்று வருடங்களுக்குப் பின்னால் எழுதிக் கேட்ட பிரதமரின் சுறுசுறுப்பையும் ராஜீவ் காந்தியின் இறப்பு குறித்து அவர் காட்டிய கவலையையும் என்னால் மறக்க முடியாது!

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட முதலாண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் 1992 மே 21-ந் தேதியன்று திருபெரும்புதூரில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நரசிம்மராவ் வந்திருந்தார். முதலமைச்சர் ஜெயலலிதாவும் வந்திருந்தார் மேடை ஏற்பாட்டை தமிழக அரசு செய்ததால் மேடையில் பிரதமர், முதல்வர் ஆகிய இருவருக்கு மட்டுமே இரண்டு நாற்காலிகள் இருந்தன. அமைச்சர்களாக இருந்த பலரும் கீழே நின்று கொண்டுதான். மொழி பெயர்ப்பதற்காக என்னை மேடைக்கு வரும்படி ரங்கராஜன் குமாரமங்கலம் அழைத்தார். நான் மேடைக்குச் செல்ல மறுத்துவிட்டேன். ''பிரதமர் பேசுகிற போது வருகிறேன். இப்போதே வந்து கொலு பொம்மையாக நிற்க வேண்டாம்'' எனக் கூறி விட்டேன்.

பின்னர், பிரதமர் பேசத் தொடங்கிய போது மேடைக்குப் போனேன். ரங்கராஜன் மரபு காரணமாகவோ அல்லது அன்பினாலோ ''இதே திருபெரும்புதூரில் அதிக காயம் அடைந்தவர் இப்பொழுது உங்கள் பேச்சை மொழிபெயர்க்க இருக்கும் தா. பாண்டியன்'' என்று சொன்னது என் காதில் விழுந்தது. ஆனால் நரசிம்மராவ் அந்தத் திசையின் பக்கம் கூடத் திரும்பவில்லை. மொழி பெயர்ப்பு முடிந்து இறங்கப் போகும் போது ''ரங்கராஜன் மீண்டும் நரசிம்மராவிடம் ஓடி வந்து, காயம் பட்ட காங்கிரஸ் கட்சியினரும், காவல் துறையினரும் தங்களைக் காண மேடைக்கருகில் நிற்கிறார்கள். ஒரு நொடி பார்த்து விட்டுப் போகலாம்'' என்று சொன்னார். அப்பொழுது ரங்கராஜன் அவரது சக மந்திரி. இருந்தும் நரசிம்மராவ் யாரையும் பார்க்காமல் வணக்கம் செலுத்துகிறவர்களுக்கும் பதிலுக்கு கையைக் கூட அசைக்காமல் நேராக வண்டிக்குப் போய்விட்டார்.

இவ்வாறு பல்வேறு சம்பவங்களைத் தொகுத்து ஒன்றாக நான் இணைத்துப் பார்த்த போது ராஜீவ் காந்தி பற்றி பற்று எதுவும் இவருக்கு இருந்திருக்க நியாயமில்லை. மாறாக ஆழமாகப் புதைந்து இருக்கும் வெறுப்பு இருந்திருக்கிறது என்றே என் யூகத்திற்குப் பட்டது. இக்கருத்தை மாற்றிக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சி எதுவும் இன்றுவரை நடைபெறவில்லை. சந்திராசாமி பற்றி முழு விசாரணை முடிந்து,அந்தச் சாமியார் உருவில் நடமாடும் அரசியல் சூத்திரதாரி மனம் விட்டுப் பேசினால் உலகம் உண்மையைப் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கலாம்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் யாராவது பதவிப் பொறுப்பிற்கு வந்துவிட்டால் - அவர்கள் மூலம் பதவியைப் பெற முடியும் என்ற அதிகாரச் சூழ்நிலையும் இருந்தால் - அவர்களைப் புகழ்ந்து சூழ்ந்து கொண்டு வலம் வருவதே வழக்கமாக இருக்கிறது. இக்கட்சியின் அண்மைக் கால முக்கிய அசியல் பணி என்பது விமான நிலையத்திற்குப் போய் திரளாக நின்று திரளாகச் சேர்ந்து வழி அனுப்புவது, நள்ளிரவில் விமானம் வந்தாலும் திரண்டு வந்து வரவேற்க வேண்டியது, டெல்லியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து டெல்லிக்கும் செல்லுகிற ஒருவருக்கு வழி அனுப்பி வரவேற்பு டம்பம் ஏன் என்பது இன்னும் புரியவில்லை. அதாவது தேசிய இயக்கம் தன் பாரம்பரியத்தைக் கைவிட்டு விட்டு ஒரு மாநிலக் கட்சியின் சினிமாத்தனத்திற்குப் பலியாகி விட்டதைத்தான் இவை போன்ற நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை எடுத்துச் சொல்லவும் அல்லது காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் திட்டமிட்டு சுட்டிக் காட்டிய சாதனை களைப் பட்டியல் போட்டுக் காட்டவும், வகுப்பு வாதத்தை, பயங்கர வாதத்தை, பிரிவினை வாதத்தை ஏன் எதிர்க்கிறோம் என்பதையும் காங்கிரஸ்காரர்கள் பத்துப் பேர் கூடுகிற இடத்தில் கூடி விவாதிப்பதை நான் காணவில்லை. ஒன்று ஒரு குழுவைப் பற்றி சாடிப் பேசுவார்கள். அல்லது தொழில் நடத்துவது சம்பந்தமாக வியாபார ரீதியில் பேசுவார்கள். தேசிய உணர்வுடன் தேச விரோதச் சக்திகளைச் சாட வேண்டுமென்ற கடமைப் பொறுப்பு விவாதிக்கப்படும் என எதிர்பார்த்தால் நாம் ஏமாற்றமே அடைவோம்.

ஒரு பிரதமர் என்ற முறையில், நிர்வாகத் தலைவர் என்ற வகையில் சில அரிய சாதனைகளை நரசிம்மராவ் செய்தார் என்பதை ஒப்புக் கொள்கிறேன். பஞ்சாபில் அமைதியை மீட்டது. காஷ்மீரில் தேர்தல் நடத்தத் திட்டமிட்டது. பொருளாதாரத் துறையில் தற்காலிக மேம்பாடு கண்டது.

சிறுபான்மைக் கட்சியை பெரும்பான்மை பெற வைத்தது ஆகியவை சாதாரண வெற்றிகளல்ல, மகத்தான சாதனைதான். அவருக்கு மண்டை மூளை கூர்மையாக இருந்தது. இன்னும் இருக்கிறது. ஆனால், இதயம் என்பது இருக்கிறதா? என்பது ஆராயப்பட வேண்டும். ஆகவேதான் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் நெருக்கடிகளைச் சமாளித்து வழி நடத்த முடிந்த அவரால், கட்சித் தலைவர் என்றமுறையில் தானும் தோற்று, கட்சியையும் தோற்கடிக்க அவரே காரணமாகவும் இருந்தார்.

தமிழகத்தில் 99 பேர் சொன்னதை நிராகரித்து ஓரிரு ஜோதிடர்களும், அரசியல் புரோக்கர்களும் சொன்ன யோசனைப்படி தேர்தல் உறவை நரசிம்மராவ் முடிவு செய்த பொழுதே அவர் அரசியல் கட்சியை நடத்துகிற மக்களின் மனமறிந்த, அறியக் கூடிய தலைவர் அல்லர் என்பது நிரூபணமாகி விட்டது. ஒரு நல்ல அரசியல் வாதிக்கு கூர்மையான மூளையும் குளுமையான இதயமும் சேர்ந்து இருக்க வேண்டும். இதில் ஒன்று மட்டும் இருந்து ஒன்று இல்லாத போதுதான் கட்சிக்கு அழிவே தொடங்கும்.

1991 மே-க்குப் பின் எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன. ராஜீவ் காந்தியைக் கொன்றவன் யார்? சதி செய்த கூட்டம் எது? என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் தலைவர் கொல்லப்பட்டதால் விழுந்த காலியிடத்தில் உட்காரும் வாய்ப்பைப் பெற்று பிரதமரான நரசிம்மராவும், புதிய பிரதமரை விண்ணளவும் புகழ்ந்து மந்திரிகளாக ஆன தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளும் ஐந்து முழு வருடங்கள் நாட்டையே கட்டி ஆளுகிற அதிகாரத்துடன் இருந்தும், தங்கள் கட்சியின் ஒப்பற்ற தலைவனை, அநியாயமாகக் கொன்ற அந்தச் சதிகாரக் கும்பல் எது என்று தெரிந்து கொள்ள அக்கறையே செலுத்தாமல் மாதச் சம்பளம் வாங்கி ஐந்தாண்டு காலத்தையும் முடித்து விட்ட கோலத்தையும் நினைக்கிற பொழுது மனம் கொதிக்கிறது. ஒரு தேசிய இயக்கத்தின் வீழ்ச்சிக்கான காரணமும் புரிகிறது.

ராஜீவ் காந்தியை எதிர்த்த, அவரது திட்டங்களை எதிர்த்த கட்சியுடன் ஒரு நொடிப் பொழுதில் ஒரு பெரும் பகுதி ஆலிங்கனம் செய்து கொண்ட வேகத்தையும், நிபந்தனை ஏதுமின்றி தொடர்ந்து ஆதரிப்பதும் சுட்டிக் காட்டுவது சிந்திப்பதற்காகத்தான். வகுப்பு வாதம் என்ற பேய் டெல்லிக் கோட்டையின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்த நேரம் அது. அதை எதிர்க்க இடதுசாரிக் கட்சிகளுக்குத்தான் கொள்கைத் தெளிவும் இலட்சிய

வெறியும் உண்டு. ஆனால் பல மாநிலங்களில் குறிப்பாக பாரதிய ஜனதாக் கட்சி பரவியுள்ள இந்தி பேசும் மாநிலங்களில் கம்யூனிஸ்ட் இயக்கம் பலவீனமாக இருக்கிறது. எனவே, வகுப்புவாத எதிர்ப்பு என்பது ஒரு கொள்கைப் பிரகடனமாக இருக்கிறதேயொழிய நடைமுறைப் படுத்தக் கூடிய செயல்திட்டமாக இல்லை. எனவே, அதை ஈடுகட்ட என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இடதுசாரிக் கட்சிகள் முடிவு செய்ய வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது, அதன் தலைவராக இருந்த ராஜீவ்காந்தி ஆற்றியுள்ள உரை காங்கிரஸ் காரர்களால் மீண்டும் மீண்டும் படிக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிடப் படும் அந்த நூற்றாண்டு விழா சொற்பொழிவில் காங்கிரஸ் கட்சியின் பலவீனங்கள் அனைத்தையும் கட்டிக் காட்டி இருந்தார் அரசாங்கத் திட்டங்கள் மக்களுக்கு போய்ச் சேருவதில்லை என்பதையும் ஒப்புக் கொண்டிருந்தார்.

அதன் பிறகு தான் எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் இந்திய மக்களைப் பற்றியும் இடதுசாரிக் கட்சிகளைப் பற்றியும் அதிகமாக சிந்திக்கத் தொடங்கியிருந்தார். துரதிர்ஷ்டவசமாக வளர்ச்சி பெறுவதற்கு முன்பு அவர் மேலும் மேலும் மக்களைப் பற்றி சிந்திக்கிற, கவலைப்படுகிற தலைவராக வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் கொல்லப்பட்டு விட்டாரே என்பதுதான் வேதனைக்குரியதாகும்.

அவரது கொலைபற்றி தொடர்ந்து விசாரணை நடத்தி சதித்திட்டம் போட்ட கும்பலையும் அந்தக் கொடிய செயலைச் செய்து முடித்த மனித மிருகங்களையும் கண்டுபிடித்தே ஆக வேண்டும். இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு அதன் தலைவர் ஒருவரைக் கொன்ற குற்றவாளிகளைக் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற அவப்பெயர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய நாடு சீரழிந்து போகாமல் தடுக்க தேசியக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் ஒத்துழைக்க ஒரு வழி காண வேண்டும். அது கொள்கை, திட்ட அடிப்படையில் உருவாக வேண்டும்.



# சிறப்பு நீதி மன்றத்தில்...

பூந்தமல்லியில் ஒரு தனி நீதி மன்றம் ராஜீவ் காந்தியைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளை விசாரிக்க அமைக்கப் பட்டது. அதில் சாட்சியம் அளிக்க என்னையும் அழைத்திருந்தார்கள். நான் சென்றிருந்த நாளில் குற்றவாளிகளுக்காக வாதாடி வந்த வழக்கறிஞர்கள் ஏதோ புகார் செய்ததால் அன்று விசாரணை நடைபெறவில்லை.

பின்னர் ஒரு முறை, அழைக்கப்பட்டு சென்றிருந்தேன். சிறப்புக் காவல் துறையின் தலைமை அதிகாரி கார்த்திகேயனும் அங்கே இருந்தார். 10.30-க்கு தொடங்கிய விசாரணை இடைவேளை மதியச் சாப்பிட்டிற்காக 45 நிமிடம் நீங்கலாக மாலை 6.30 மணி வரையில் நடந்தது. குற்றவாளிகள் சார்பில் ஆஜரான வக்கீல்களில் சிலர் என்னுடன் நெருக்கமாகப் பழகிய நல்ல நண்பர்கள்.

குறுக்கு விசாரணையின் போது நான் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன்? கம்யூனிஸ்ட் கட்சியில் என்ன பொறுப்புகள் வகித்தேன்? கம்யூனிஸ்ட் கட்சியில் ஏன் பிளவும் ஏற்பட்டது? இந்திய நாட்டை பல நாடுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் சுதந்திர நாடாக அறிவித்து விடலாம் எனச் சொன்னது உண்டா? இல்லையா? இந்திய பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தீர்களா? இல்லையா? பங்களாதேஷ் அமைந்ததை வரவேற்ற நீங்கள் சுதந்திர ஈழத்தமிழகம் அமைவதை ஏன் எதிர்க்கிறீர்கள்? டிராட்ஸ்கீ யார்? மாசேதுங்கின் கலாச்சாரப் புரட்சியைக் கண்டித்து ஏன் கட்டுரை எழுதினீர்கள்? உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா? இந்த வகையில்தான் பெரும்பான்மையான கேள்விகள் அமைந்திருந்தன.

நீதிபதியும் ஓர் அரசியல் விவாதம் நடப்பதை சுவாரசியமாக கேட்டுப் பதிவு செய்து கொண்டிருந்தார். அவர்கள் கேட்ட சில குறும்புத்தனமான கேள்வி களுக்கு நானும் வழக்கறிஞர் என்பதால் அவர்கள் குத்தலாக கேட்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அதைவிட கூர்மையான குத்தலுடன் பதிலடி கொடுத்தேன். வழக்கறிஞர்களும் புரிந்து சிரித்துக் கொண்டார்கள்.

பின்னர் சிறிது நேரம்தான் என்னைப் பற்றியும் ராஜீவ் காந்தியைப் பற்றியும் கேள்விகளைத் தொடுத்தனர் அவற்றில் சில முக்கியக் கேள்விகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

''காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராஜீவ் காந்தியுடன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான நீங்கள் எவ்வாறு அவருடைய காரில் பயணம் செய்தீர்கள்?

அவரும், நீங்களும் மைதானத்தில் நடந்து சென்ற போது வேறு எந்த காங்கிரஸ் தலைவரும் பக்கத்தில் இருக்கவில்லையே ஏன்?

நீங்கள் அருகில் இருந்து அடிபட்டு காயம்பட்டிருக்கிற போது பல காங்கிரஸ்காரர்கள் அடிபட்டதாகக் காணோமே ஏன்?

குண்டு வெடிக்கப் போகிறது என்பதைத் தெரிந்துதான் காங்கிரஸ் காரர்கள் வரவில்லை. அது தெரியாததால்தான் நீங்கள் போனீர்கள் என்கிறேன். இது சரியா?'' எனவும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

இந்தக் கேள்விக்கு நடந்த விவரத்தை தெரிந்தவன் என்ற முறையிலே சொன்னேன். ''எங்களுடன் வரவிருந்த வாழப்பாடி ராமமூர்த்தியை ராஜீவ் காந்திதான் அழைத்து தான் வருவதற்கு முன்பாக வண்டியில் சென்று மேடையை நெருக்கடியில்லாமல் வைத்திருக்குமாறு சொல்லியனுப்பியதை நான் அருகிலிருந்து கேட்டேன். ராஜீவ் காந்தி சொன்னதன் பேரில்தான், சொன்னபடிதான் வேறு ஒரு ஜீப்பில் வழிகாட்டிக் கொண்டு பயணம் செய்தார்.

எனவே விஷயம் தெரிந்து குண்டுக்குப் பயந்து அவர் விலகி ஓடியதாகச் சொல்வது பொய். அவர் ஓடக் கூடிய கோழையும் அல்லர். தெரிந்திருந்தால் குற்றவாளிகள் அழிக்கப்பட்டிருப்பார்கள். அதே போல் மற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அவரவர் காரில் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். எனவே விபத்து நடந்த இடத்திற்கு அவர்கள் வந்து கூடாதது இயற்கையே'' என்றும் பதில் சொன்னேன்.

மரகதம் சந்திரசேகர் கொலைகாரர்களுக்கு உதவியிருக்கக் கூடுமா? எனப் பொருள்படும்படியாக சில கேள்விகளையும் தொடுத்தார்கள். அதை அடியோடு மறுத்தேன். ''அந்த அம்மாவை எனக்குப் பல்லாண்டுகளாகத் தெரியும். நேருவின் குடும்பத்தின் மீது அசைக்க முடியாத பற்றுக் கொண்டவர். அவர்கள் அந்தக் குடும்பத்தை எதிர்த்து கொலை செய்ய உதவுவார்கள் என்பது அபாண்டம்'' எனவும் மறுத்தேன்.

இதையடுத்து குற்றவாளிகளில் ஒருவர் (ஓர் இளைஞன்) தானே நேரில் கேள்வி கேட்பதாக எழுந்தார். அவர் கேட்ட கேள்வி நாடக பாணியில் அமைந் திருந்ததால் நீதிபதி உட்பட அனைவரும் சிரித்து விட்டார்கள். அந்த இளைஞர் நானும் ராஜீவ் காந்தியும் எவ்வளவு நெருக்கமாக நடந்து சென்றோம்? நின்றபோது எத்தனை அடி இடைவெளி இருந்தது? குண்டு வெடித்த போது அவர் இருந்த இடத்திலிருந்து நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தீர்கள்? என்று கேட்டு விட்டு அதற்குப் பதிலாக எங்கள் இருவருக்கும் இடைவெளியில் இரண்டு அடிதூரம் கூட இருக்காது என்று கூறி முடித்தவுடன்,

''தா. பாண்டியன் அன்று அதே இடத்தில் கொல்லப்பட்டு விட்டார். அதை அன்று சில பத்திரிகைகளும் செய்திகளாக வெளியிட்டன. வானொலியிலும் பாண்டியன் இறந்து விட்டதாகத்தான் அறிவிப்பு வந்தது.

எனவே காவல்துறை பொய்ச்சாட்சி சொல்வதற்காக ஆள் மாறாட்டம் செய்ய உன்னைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். நீ யார்?'' என்று கேட்டார். நானும் சிரித்துவிட்டேன். பிறகு நிதானமாக என் பதிலைச் சொன்னேன். ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த கார்த்திகேயனும் சிரிப்பை அடக்க முடியாமல் கர்ச்சீப்பை வைத்து முகத்தை மூடிக் கொண்டிருந்தார்.

''நான்தான் பாண்டியன். நான் கொல்லப்பட்டு விட்டதாக சிலர் நினைத்திருக்கலாம். தவறாக தகவலும் பரவியிருக்கலாம். ஆனால், நான் தப்பியதோடு தொடர்ந்து என் கடமைகளைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் கடமைகளில் ஒன்று இந்தத் தமிழ் மண்ணில் ரத்தக் கறை படிய வைத்து தமிழ்ப் பண்பாட்டிற்கே வேட்டு வைத்த அந்த அநாகரிகக் கும்பலை எதிர்ப்பதும், ஒழிப்பதும் எங்கள் கடமைகளுள் ஒன்று'' என்றேன்.

இந்த இடத்தில் அந்த இளைஞர் நீதிபதியிடம் நான் மிரட்டுவதாகப் புகார் செய்தார். பின்னர் என் பக்கம் திரும்பி, ''ராஜீவ் காந்திக்கு வலது பக்கத்தில் இருந்தவரும் பின்னால் நின்ற ஏழு பேரும் சற்றுத் தள்ளியிருந்த

மேலும் பலரும் ஆக மொத்தம் பதினெட்டுப் பேர் அதே இடத்தில் கொல்லப்பட்ட போது நடுவில் இருந்த நீ மட்டும் எப்படித் தப்பினாய்?'' என்றும் கேட்டார்.

காவல் அதிகாரி என்னை மேடைக்குப் போகச் சொன்னதையும் நான் திரும்ப முயன்றபோது குண்டு வெடித்ததையும் விளக்கினேன். அந்த இளைஞர் நீதிபதியைப் பார்த்து, ''அவருக்குப் படத்தைப் போட்டுக் காட்டுங்கள், பார்த்துவிட்டு பதில் சொல்லட்டும்'' என்றார். எனக்கு என்னவென்று புரியவில்லை.

ஆனால் சிறிது நேரத்தில் தொலைக்காட்சித் திரையில் ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் வந்து இறங்கியது தொடங்கி குண்டு வெடிப்பதுவரை எடுக்கப்பட்ட வீடியோ படம் போடப்பட்டது. அப்பொழுதுதான் அவரும் நானும் இறங்குவது, நடப்பது, பேசுவது அனைத்தையும் மீண்டும் நானே தெளிவாகப் பார்க்க முடிந்தது. படம் எடுத்தவர் குண்டு வெடித்தவுடன் கேமராவைக் கீழே போட்டு விட்டார்.

எனவே குண்டு வெடித்து புகை கிளம்புவது அதில் சில மனித உடல்கள் மேலே தூக்கியெறியப்படுவது ஆகியவற்றுடன் என் தோளில் இருந்த செந்துண்டு பறப்பதும் தெரிகிறது. அத்துடன் புகைமண்டலமாக படம் முடிந்து விடுகிறது. நான் குறிப்பிட்ட காவல் துறை அதிகாரி என் கையைப் பிடித்து மேடைக்குப் போகச் சொல்கிற காட்சியும் இருக்கிறது. நான் திரும்பி நடக்க இருப்பது போலவும் தெரிகிறது. அப்பொழுதுதான் குண்டு வெடிக்கிறது. படமும் முடிந்து விடுகிறது.

படத்தைப் பார்த்தவுடன் மீண்டும் நான் அந்த ரணகளத்திற்கே போய்விட்டேன். வெடித்துக் கிளம்பிய புகை மண்டலத்தோடு ராஜீவ் காந்தியின் உடலும் சென்றிருக்க வேண்டும் என்று கற்பனையாக நினைத்த போது கோபம் பீறிட்டு வந்தது. அந்த இளைஞர், ''படத்தைப் பார்த்து விட்டீர்கள். எப்படி நீங்கள் மட்டும் தப்பினீர்கள்?'' என்று மீண்டும் கேட்டார்.

''தூக்கியெறியப்பட்டேன் என்பது தெரியும். காயம் பட்டது தெரியும். நான் பேசிக் கொண்டிருப்பதால் நான் சாகவில்லை என்பது உனக்கும் தெரிந்திருக்க வேண்டும்'' என்று கூறினேன். எல்.டி.டி.ஈ. பற்றி அந்த இளைஞர் கேட்ட கேள்விகளுக்கும் நான் தந்த பதில் சற்று காட்டமாகவே தான் இருந்திருக்க வேண்டும்.

பொதுவாக இந்த விசாரணையில் பொழுதை வீணடிக்கிற குறுக்குக் கேள்வி முறைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. குற்றவாளிகளுக்கு சிறப்பான முதல் வகுப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அவர்கள் விரும்புகிற உணவை விரும்புகிற முறையில் தயாரித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. புதிதாக கல்யாணம் ஆகி மாமனார் வீட்டிற்கு வந்த புது மாப்பிள்ளை மாதிரி அவர்கள் சௌகரியமாகவே இருப்பது தெரிகிறது.

அந்த நீதிமன்றத்தைக் காவல் காக்க நெடுஞ்சாலைப் போக்குவரத்தே தடுக்கப் பட்டிருக்கிறது. ஏராளமான காவல் துறையினர் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். கோடிக்கணக்கில் பணம் செலவாகியிருக்கிறது. 6 ஆண்டுகளும் இப்படியே ஓடி ஏழாம் ஆண்டில்தான் தீர்ப்பு வந்தது.

ராஜீவ் காந்தி வண்டியை விட்டு இறங்கும் போது, ''தமிழ் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். நான் அவர்களை நேசிக்கிறேன்'' என்பதுதான் அவர் கடைசியாகப் பேசிய வார்த்தைகள். அவரது கழுத்தில் நாங்கள் போட்ட மாலைகள் தான் அவர் வாழும் போது போட்ட கடைசி மாலைகள். அவர் சிந்திய ரத்தம் தமிழ் மண்ணிலே கலந்தது. அதே இடத்தில் என் ரத்தமும் பாய்ந்தது. மேலும் பலர் ரத்தப் பொட்டிட்ட பின் மாண்டனர்.

ரணகளமாக மாற்றப்பட்ட ரத்தம் குடித்த அந்த பூமியில் இன்று ஒரு நினைவு மாளிகை எழுந்து கொண்டிருக்கிறது. ராஜீவ் காந்தி விரும்பிய இந்திய மாளிகையை எதிர் நோக்கி நிற்கிறார்கள் இந்திய மக்கள். கொலையை மறந்துவிடக் கேட்கிறார் பிரபாகரன். அமைதி வேண்டி அனைத்தையும் மறக்கச் சொல்கிறார்கள் வேறு சிலர்...



# எதிர்பார்க்கிறது நாடு

**1948** ஜனவரி முப்பதாம் நாளன்று தேசப்பிதா காந்தியடிகள் இந்துமத வகுப்பு வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 1984 நவம்பர் 30-ம் நாளன்று காலிஸ்தானிய இன வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பஞ்சாப் பயங்கரவாதத்தைத் தடுத்து அமைதித் தீர்வுகாண ராஜீவ் காந்தியோடு ஒப்பந்தம் போட்ட சீக்கிய மதத் தலைவர் லோங்கோவால், காலிஸ்தானிய வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1991 மே 21-ம் நாள் திருபெரும்புதூரில் மனித வெடிகுண்டைப் பயன்படுத்தி ராஜீவ் காந்தியை எல்.டி.டி.ஈ. தமிழ் வெறியர்கள் கொன்றார்கள்.

பஞ்சாப் பயங்கரவாதத்தை ஒடுக்க முயன்ற பியாந்த்சிங், வெடிகுண்டு வைத்துக் கொல்லப்பட்டார்.

இவ்வாறு பயங்கரவாதத்திற்கும், மதவெறிக்கும், இனவெறிக்கும் பலியான பல முக்கியத் தலைவர்களுக்கு உரிய பங்கைச் செலுத்த வேண்டும்.

அதே போல, நாட்டின் சுதந்திரத்திற்குப் போராடிய கட்சி, இந்திய அரசியல் சட்டத்தை வகுப்பதில் முக்கிய பங்காற்றிய கட்சி.

நவீன இந்தியாவைக் கட்டி வளர்க்க சுதேச மன்னர்களின் ஆட்சியை மாற்றி நாட்டை ஒருங்கிணைத்த பெரும் சாதனை...

ஜமீன், இனாம் முறைகளை ஒழித்த சாதனை. திட்டமிட்ட பொருளாதா ரத்தின் மூலம், அணைகளைக் கட்டி, நீர்ப் பாசனத்திற்கு வழி வகுத்தது.

தொழிற் சாலைகளைக் கட்டியமைத்தது.

மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தது.

வங்கிகளை, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை அரசுடைமை ஆக்கியது.

மன்னர் மானியத்தை நீக்கியது.

விஞ்ஞானத் துறையில் வளர்ச்சிக்கு வித்திட்டது.

எரிவாயு எண்ணெய் எடுத்து சுத்திகரித்தது...

எனத் தொடர்ந்து வளர்ந்த வளர்ச்சிப்பாதை 1991-க்குப் பின் உலக மயம் என்ற வலைக்குள் வீழ்ந்த பின்னர்,

சிறு, பெரும் தொழில்கள் நசியவும், விவசாயம் சீரழியவும், கல்வி - பண்பாட்டுத் துறையில் நாச சக்திகள் நுழையவும், மத சாதிச் சண்டைகளில் மக்கள் கொல்லப்படுவதும்... தொடரும்போது-

நேரு கட்டி வளர்த்த பொதுத்துறை விற்கப்படும்போது காங்கிரஸ் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்...

வங்கிகளை தனியாரிடம் விற்க முயலும் போது தடுக்க வேண்டும்...

சுருங்கச் சொன்னால், நேரு, இந்திரா காந்தி கட்டிய இந்தியாவை இடிக்கும் போது காங்கிரஸ் கட்சி போராட வேண்டும். தேசிய இயக்கம் கனவு கண்ட இந்தியாவுக்குப் பதிலாக ''மனுநீதி'' ஆதிக்க சாதி ஆட்சி சமூக அமைப்பை உருவாக்க முயல்வதை யாரையும் விட காங்கிரசல்லவா முதலில் எதிர்க்க வேண்டும்... ராஜீவின் ரத்தம் தமிழ் மண்ணில் கலந்த பிறகும் அந்த பலிக்குத் துணை நின்றோரை எதிர்ப்பதிலும் காங்கிரஸ் தானே முதலில் நிற்க வேண்டும்...

இடதுசாரிக் கட்சிகள் மீதும் ஒரு பெரும் பொறுப்பை வரலாறு சுமத்தியிருக்கிறது. ராஜீவ் இருந்திருந்தால், என நினைக்க வேண்டி வருகிறது. இடதுசாரிக் கட்சிகளும் நாட்டைக் காப்பதற்கான களத்தில், நேச சக்திகளைத் திரட்டி இறங்க வேண்டும்.

ராஜீவ் கண்ட கனவு அன்று நனவாகக் கூடும்.



கண்கண்ட காட்சியாக மட்டுமல்லாமல் பயங்கரப் படுகொலைக் களத்தில் மரண வேதனைக்குரிய காயங்களை உள்ளும் புறமுமாகப் பெற்று, 'பிணமோ' எனக் கண்டவர் தீர்மானிக்க வீழ்ந்த ஒருவர், உயிர் தப்பிய பேரதிசயத்தை வரலாற்றில் பதிவு செய்தவராகவும் இந்நூலாசிரியர் விளங்குகின்றார்.

– பெ.சு.மணி